பக்கங்கள் : 20+VIII=28

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆடி 22 ஞாயிற்றுக்கிழமை (07.08.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :254

# இணுவில் சம்பவத்துக்கு அமைப்புகள் கண்டனம்

## இன்று துக்கம் அனுஷ்டிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக.7

இணுவிலில் சிகை அலங்கரிப்பு நிலையம் ஒன்றில் பணியாற்றிய அப்பாவி இளைஞர் ஒருவர் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துக்குக் கடும் கண்டனம் தெரிவித்திருக்கும் பொது அமைப்புகள் உயிரிழந்த இளைஞனின் இறுதிச் சடங்குகள் நடைபெறுவதை ஒட்டி இன்று கறுப்புக்கொடிகளைப் பறக்கவிட்டு துக்கம் அனுஷ்டிக்குமாறு கேட்டிருக்கின்றன.

இணுவில் சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்து யாழ்.மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் நேற்று அறிக்கை ஒன்றை விடுத்தது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தொடர்ந்து தலைவிரித்தாடும் இராணுவ அடாவடித்தனங்களை வன்மையாகக் கண்டிக்கின்றோம். கடந்த வியாழக்கிழமை இணுவில் பகுதியில் உள்ள சிகை அலங்கரிப்பு நிலையத்தில் புகுந்து சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் அந்நிலையத்தில் பணிபுரிந்த ஜெயசீலன் சாந்தரூபன் என்பவர் கொலை செய்யப்பட்டுள்ளார். மற்றும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இராணுவத்தின் இந்த அடாவடித்தனச் செயலை யாழ். மாவட்ட பொது அமைப்பு

(16ஆம் பக்கம் பார்க்க)

**சூரியகாந்தியில்**

- அதிகார ஆசையும் பித்தலாட்ட அரசியலும்...
- ஒரு மனிதனின் மரணமும் அமைதியின் அவலமும்....
- பிரம்மன் படைப்பில் காணாத அதிசயங்கள்...
- ஆய்வுகூடப் பரிசோதனைகள் உரிய பலனைத் தருமா?
- தெற்கில் அதிகரிக்கும் வாகனக் கடத்தல்கள்...

இவற்றுடன் -
- சிறுவர் பொழில்
- திலகம்
- யாழ்.பாணம்
- யாரொடு நோவோம்..

# போர் நிறுத்தத்தைப் பேணுவதில் உறுதி

# மஹிந்த, ரணில் விரைவில் கூட்டறிக்கை

## யுத்தத்துக்கு எதிரான இயக்கத்தின் கோரிக்கைக்கு இருவரும் இணங்கினர்

கொழும்பு,ஓகஸ்ட் 7

**போர் நிறுத்தத்துக்கு வழிவகுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையைத் தொடர்ந்தும் செவ்வனே பேணுவது என்று உறுதி கூறும் கூட்டறிக்கை ஒன்றைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து வெளியிடவிருக்கின்றனர்.**

**யுத்தத்துக்கு எதிரான தேசிய இயக்கம் விடுத்த வேண்டுகோளின் பேரில் இந்த அறிக்கையை விடுக்க பிரதமரும், எதிர்க்கட்சித் தலைவரும் இணங்கியிருக்கின்றனர்.**

போர் நிறுத்த உடன்படிக்கை பல்வேறு நெருக்கடிகளில் சிக்கியிருக்கும் இத்தருணத்தில் அதனை மதித்து ஸ்திரமாகப் பேணுவதை உறுதிப்படுத்தும் கூட்டறிக்கை ஒன்றை அரசும், எதிர்கட்சியும் இணைந்து வெளியிடுவது தற்போதைய சூழ்நிலையில் மிகவும் பயனுடையது என்று யுத்தத்துக்கு எதிரான தேசிய இயக்கம் கருதுகின்றது.

தென்னிலங்கையின் புத்திஜீவிகள், அரசியல் பிரமுகர்கள் அங்கம் வகிக்கும் இந்த இயக்கம், இது தொடர்பாக பிரதமரிடமும்

(16ஆம் பக்கம் பார்க்க)

# பொலீஸ்மா அதிபர் நேற்று இணுவில் பகுதிக்கு விஜயம்

## பொலீஸ் உயரதிகாரிகளையும் சந்தித்தார்

யாழ்ப்பாணம்,ஒக 7

பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ உயர் பொலீஸ் அதிகாரிகள் சகிதம் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்தார்.

நேற்றுக்காலை இணுவில் பகுதிக்குச் சென்ற அவர், பொலீஸ் அத்தியட்சகர் சாள்ஸ் விஜேவர்த்தனா கொலை செய்யப்பட்ட இடத்தைப் பார்வையிட்டார். அப்பகுதியில் பொதுமக்களுடன் கலந்துரையாடினார். அதன் பின்னர் காங்கேசன்துறையில், குடாநாட்டில் பணிபுரியும் பொலீஸ் உயர் அதிகாரிகள்,பொலீஸ் பொறுப்பதிகாரிகள் ஆகியோருடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார். இச்சந்திப்பில் பிரதிப் பொலீஸ் மா அதிபர்களான மகிந்த பாலசூரிய, பத்தேவல

(16ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.நகர வீதிகளில் படையினர் மோட்டார் சைக்கிள் ரோந்து!

யாழ்ப்பாணம்,ஒக 7

யாழ்.நகரப்பகுதியின் முக்கிய வீதிகளில் நேற்று 'பீல்ட் பைக்' படையினரின் ரோந்து நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டிருந்தன.

நேற்றுக்காலை முதல் நகரின் பிரதான வீதிகளூடாக 'பீல்ட் பைக்' படையினர் மோட்டார் சைக்கிள்களில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. இதனால் வீதிகளில் பொதுமக்கள் அச்சத்துடன் பயணம் செய்தனர்.

குடாநாட்டில் யுத்த காலத்தில் காணப்பட்ட ரோந்து நடவடிக்கை போல 'பீல்ட் பைக்' படையினரின் ரோந்து அமைந்ததால் பொதுமக்கள் பெரும் அச்சத்துக்குள்ளாகினர். சிலர் தூரத்தில் படையினரின் மோட்டார் சைக்கிளைக்

(16ஆம் பக்கம் பார்க்க)

# வேட்பாளரை நிறுத்துவதா? வேறு ஒருவரை ஆதரிப்பதா?

## ஆலோசனை நடத்துகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஓகஸ்ட் 7

ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதா? அல்லது வேறு ஒரு வேட்பாளரை ஆதரிப்பதா? என்பது தொடர்பாக ஜே.வி.பி. ஆராய்ந்து வருகின்றது.

கட்சியின் அரசியல் குழு நேற்றுக்கூடி இந்த விடயத்தை ஆராய்ந்தது. எனினும் இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

பெரும்பாலான அங்கத்தவர்கள் வேட்பாளர் ஒருவரை நிறுத்தவேண்டும் என்று வலியுறுத்தினர்.

வேட்பாளரை நிறுத்தாமல் சிங்களத் தேசியத்தை ஆதரிக்கும் நாட்டுப்பற்றுள்ள வேட்பாளரை ஆதரிக்கவேண்டும் என்றும் ஏனைய அங்கத்தவர்கள் கோரினர்.

முடிவு எதுவும் எட்டப்படாத நிலையில், இவ்வார நடுப்பகுதியில் கட்சியின் மத்திய குழுவைக் கூட்டி முடிவு எடுப்பது என்று நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ஐ-3)

# இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் ரணிலுடன் இரகசியப் பேச்சு!

ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு வழங்குவது தொடர்பாக ஐ.தே.கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இ.தொ.கா. தலைவர் அறுமுகன் தொண்டமான் நேற்று முன்தினம் இரகசியப் பேச்சு நடத்தியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் நிலைப்பாடு தொடர்பாக தொண்டமான் கடந்த வாரம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடனும் பேச்சுக்கள் நடத்தியிருந்தார்.

அரசின் வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவது தொடர்பாக எந்த முடிவையும் ஜனாதிபதியிடம் தொண்டமான் தெரிவிக்காத நிலையில், அவர் ரணில் விக்கிரமசிங்காவுடன் நேற்றுமுன்தினம் பேச்சு நடத்தியுள்ளார்.

இந்தப் பேச்சுக்களின் போது தேர்தல் நிலைப்பாடு தொடர்பாக இணக்கம் ஏற்பட்டதா என்பது குறித்து தகவல் ஏதும் வெளியாகவில்லை. (ஐ-3)

## ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான

# நீதிமன்றத் தீர்ப்பு பாதகமானால் பொதுத்தேர்தல் நடத்த முடிவு?

கொழும்பு, ஒகஸ்ட் 7

ஜனாதிபதி தேர்தலை எப்போது நடத்துவது என்பது தொடர்பாக ஜனாதிபதி எதிர்பார்க்கும் தீர்ப்பு உயர்நீதிமன்றத்திடம் இருந்து கிடைக்காவிட்டால் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டுப் பொதுத்தேர்தலை நடத்தும் முடிவை ஜனாதிபதி எடுப்பார் என்று அவருடன் நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுவிடயமாக அவர் தமக்கு நெருக்கமானவர்கள் மற்றும் ஆலோசகர்களுடன் ஆராய்ந்துள்ளார் என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பொதுத்தேர்தலில் அனுரா பண்டாரநாயக்கவை பிரதமர் வேட்பாளராக நிறுத்துவது என்றும் ஜனாதிபதி முடிவு செய்துள்ளார் என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஐ-3)

# திருமலையில் குவிக்கப்பட்ட படையினரில் மூன்றில் ஒரு பங்கினரை விலக்க இணக்கம்

திருகோணமலை,ஒக 7

திருகோணமலை நகரில் குவிக்கப்பட்டுள்ள படையினரில் மூன்றில் ஒரு பகுதியினரை அங்கிருந்து விலக்கிக்கொள்வதற்கு திருமலை மாவட்ட கடற்படைத் தளபதி வசந்த கருணாகொட இணக்கம் தெரிவித்துள்ளார்.

திருமலை தமிழ்மக்கள் பேரவைத் தலைவர் எஸ்.விக்னேஸ்வரனுக்கும் கண்காணிப்புக் குழுவின் திருமலை மாவட்டத் தலைவர் ஆர்தர் டிரைட்டனுக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற ஒரு கலந்துரையாடலில் இத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலையில் சுமுகமான நிலையை

(16ஆம் பக்கம் பார்க்க)

**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**

# அலரி மாளிகை நோக்கி தமிழர்கள் கொழும்பில் நாளை நடத்தும் பேரணி

கொழும்பு, ஓக.7

மலையகத் தமிழ் மக்களுக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்ட பிரதி அமைச்சர் மேர்வின் சில்வாவைப் பதவி விலக்குமாறு கோரி நாளை கொழும்பில் பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது.

மலையக மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்தப் பேரணி, புறக்கோட்டையில் இருந்து பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகவிருக்கின்றது.

அலரி மாளிகைவரை பேரணி செல்லும். பேரணி முடிவில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்படவிருக்கின்றது.

மேர்வின் சில்வாவைப் பதவி விலக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கும் வகையில் அந்த மகஜர் அமையவிருக்கின்றது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்தப் பேரணியில் இ.தொ.கா., மேல் மாகாண மக்கள் முன்னணி, தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகளும் ஐ.தே.கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கொழும்பு வாழ் தமிழ் வர்த்தகர்கள் நண்பகலுடன் கடைகளை மூடி பேரணியில் பங்குபற்றவிருக்கின்றனர்.

இந்தப் பேரணியுடன் மலையகத்திலும் பரவலாகப் போராட்டங்கள் நடத்தப்படவுள்ளன என மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

சந்திரசேகரன் எம்.பி. மேலும் தெரிவித்ததாவது:-

மேர்வின் சில்வா பொறுப்பு வாய்ந்த ஓர் அமைச்சர். குறிப்பிட்ட ஓர் இன மக்களை இழிவுபடுத்தும் விதத்தில் அவர் கருத்துக் கூறியது குறித்து அரசு இதுவரை அவர் மீது எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. ஓர் இனத்தைப் படுகேவலமான முறையில் பேசிவிட்டு, தான் அப்படிப் பேசியதாக ஞாபகமில்லை என்றும் அப்படிப் பேசியிருந்தால் அதற்கு வருத்தப்படுவதாகவும் கூறித் தப்பித்துக்கொள்ளப்பார்க்கிறார். அதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்தச் செயலுக்காக அவரை அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கவேண்டும் என்பதே எமது கோரிக்கை. இதற்கு அனைத்துத் தமிழ் மக்களும் ஆதரவு தரவேண்டும்.

நாளை திங்கட்கிழமை நடைபெறும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து, கொழும்பு வாழ் தமிழ் வர்த்தகர்கள் தமது கடைகளை மூடவேண்டும். தமிழ் மக்கள் எமது போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும் என்றும் கோருகின்றோம் - என்றார் சந்திரசேகரன் எம்.பி.

இந்திய வம்சாவழி மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து நடத்தும் இந்தப் போராட்டத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் தனது முழுமையான ஆதரவைத் தருகின்றது என்று மகேஸ்வரன் எம்.பி. தெரிவித்தார்.

இந்தப் போராட்டத்துக்கு முழுமையான ஆதரவை வழங்குமாறு தமது கட்சி உறுப்பினர்கள் அனைவருக்கும் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-3)




கொல்லப்பட்ட பொலீஸ் அத்தியட்சகருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக யாழ். பொலீஸ் நிலைய வாயிலில் வெள்ளைக் கொடி பறக்கும் காட்சி.

# சோமாலியாவில் கடத்தப்பட்ட கப்பலை விடுவிக்க இணக்கம்

## வடமராட்சி வாசியும் விடுதலையாவார்

யாழ்ப்பாணம்,ஓக.7

சுமார் ஒரு மாதத்துக்கு முன்னர் சோமாலிய கடற்கொள்ளையரிடம் சிக்கிய வடமராட்சி வாசியை விடுவிக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் உலக உணவுத் திட்டத்துக்குச் சொந்தமான கடத்தப்பட்ட கப்பலை விடுவிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று ஐக்கிய நாடுகளுக்கான அதிகாரி ரீம்மெக்கோவின் கென்யத் தலைநகர் நைரோபியில் நேற்று சனிக்கிழமை தெரிவித்தார்.

அடுத்த மூன்று தினங்களுக்குள் இந்த விடுவிப்பு நடவடிக்கைகள் இடம்பெறும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

கென்ய நாட்டுக் கடற்பரப்பில் வைத்து சோமாலியக் கடற்கொள்ளையர்களால் கடந்த ஜூன்மாத இறுதிப்பகுதியில் கடத்தப்பட்ட இந்தக் கப்பலின் தலைவர் வடமராட்சி, புலோலியைச் சேர்ந்த செல்லத்துரை மகாலிங்கம் (வயது 57) என்பவராவார்.

கென்யாவில் இருந்து சோமாலியாவுக்கு பொருள்களை ஏற்றிச்சென்ற 'எம்.டி.சிம்லோ' என்ற இந்தக் கப்பல் 10 மாலுமிகளுடன் கடத்தப்பட்டது.

இந்தக் கப்பல் தலைவரின் விடுதலை கோரி இராஜதந்திர முறையில் இலங்கை அரசு முயற்சிகள் மேற்கொண்டபோதிலும் அவை பயனளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-9)

## அரைக்கும் ஆலைகளின் உரிமையாளர்களுக்கு

யாழ்ப்பாணம்,ஓக .7

வன்னிப் பெருநிலப் பரப்பிலுள்ள அனைத்து அரிசி அரைக்கும் ஆலைகளின் உரிமையாளர்களுக்கான கலந்துரையாடலும் பயிற்சிப் பட்டறையும் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் ஆலைத் தொழில்நுட்பம், கட்டடத் தொழில்நுட்பம், சுகாதார நடைமுறைகள் தொடர்பான கருத்துரைகள் உரியவர்களால் வழங்கப்படவுள்ளன. பயிற்சிப் பட்டறையில் கலந்துகொள்வோருக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

அனைத்து அரிசி அரைக்கும் ஆலைகளின் உரிமையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தமிழீழ சுகாதார சேவையினர் கேட்டுள்ளனர். (ஐ-9)

## பிரதேச செயலக தடகளப் போட்டி இறுதிநாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக 7

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான தடகளப் போட்டிகளின் இறுதிநாள் நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் கே.கணேஷ் கலந்துகொள்வார்.

யாழ்.மாநகர சபை ஆணையாளர் க.குணராசா, யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் வி.மாதுளன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்பர். (3)

## கைதடியில் விளையாட்டு விழா

யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறையின் ஆதரவில் தென்மராட்சி விளையாட்டுப் பேரவை நடத்தும் விளையாட்டுவிழா இன்று பிற்பகல் 4 மணிக்கு கைதடி சரஸ்வதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது.

பேரவையின் தலைவர் வை.இராஜேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீனிவாசன், தென்மராட்சி பொது அமைப்புகளின் ஒன்றியத்தலைவர் எஸ்.அருந்தவபாலன் ஆகியோரும் விசேட விருந்தினர்களாக தென்மராட்சிக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.ஈஸ்வரன், தென்மராட்சி மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் அலைவாணி ஆகியோரும் பங்குபற்றுவர். (3)

# பொலீஸ் அதிகாரியின் இறுதிக்கிரியை இன்று

கொழும்பு, ஓக.7

இணுவிலில் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்ட சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜேவர்த்தனவின் சடலம் நேற்றுமுன்தினம் குருநாகலில் உள்ள அவரது வீட்டுக்குக் கொண்டுவரப்பட்டது. இறுதிக் கிரியைகள் இன்று அங்கு நடைபெறவுள்ளன.

பொலீஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ நேற்றுமுன்தினம் குருநாகலில் அவரது பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினார்.

சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜேவர்த்தன 1972ஆம் ஆண்டு சப் இன்ஸ்பெக்டராக பொலீஸ் திணைக்களத்தில் இணைந்து கொண்டார். அவர் பொலீஸ் திணைக்களத்தில் இணைந்துகொள்வதற்கு முன்னர் விமானப் படையில் ஓர் அதிகாரியாகக் கடமையாற்றியுள்ளார். 2000ஆம் ஆண்டு பொலீஸ் அத்தியட்சகராகப் பதவி உயர்வு பெற்ற அவர், கடந்த வருடம் யாழ்ப்பாணம் பொலீஸ் நிலையத்தில் முதல்தர பொலீஸ் அத்தியட்சகராகப் பதவியேற்றார்.

யாழ்ப்பாணத்துக்குச் செல்வதற்கு முன்னர் குருநாகல் பொலீஸ் பிரிவில் அவர் கடமையாற்றினார். கண்டி வித்தியார்த்த வித்தியாலயத்தின் பழைய மாணவரான சார்ள்ஸ் விஜேவர்த்தன, இலங்கையின் றகர் விளையாட்டு கழகத்தில் முன்னணி வீரராகத் திகழ்ந்தவர்.

குருநாகலில் உள்ள பொலீஸ் குடியிருப்பில் வசித்துவந்த அவருக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர். மரணமுற்றபோது அவருக்கு வயது 57.

அன்னாரின் மரணச்சடங்கு இன்று குருநாகலில் நடைபெறவுள்ளது. பொலீஸ் அணிவகுப்பு மரியாதைகளுடன் அவரது உடல் நல்லடக்கம் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

மரணவிசாரணை நேற்றுக்காலை குருநாகலில் நடைபெற்றது. தலையில் இரும்புக் கம்பியால் கடுமையாகத் தாக்கப்பட்டதாலும் உடலில் கூரிய ஆயுதங்களால் ஏற்படுத்தப்பட்ட காயங்களாலும் அவர் மரணமுற்றார் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்று பொலீஸ் தலைமையகம் தெரிவித்தது. (க-3)

## திருவிளக்குப் பூஜை

தென்மராட்சி, ஓக 7

சாவகச்சேரி துர்க்காதேவி ஆலயத்தில் ஆடிப்பூர விழாவும் மாதரசிகளின் திருவிளக்குப் பூஜையும் நாளை நடைபெறவுள்ளன.

காலை 9 மணிமுதல் முற்பகல் 11 மணி வரை 108 சங்காபிஷேகமும் பிற்பகல் 2.30 மணிக்கு 108 திருவிளக்குப் பூஜையும் நடைபெறவுள்ளன. (ஐ-9)

## ஊடகவியலாளருக்கு ஓய்வூதியத் திட்டம்

கொழும்பு, ஓக 7

ஊடகவியலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படவுள்ளது.

இத்தகவலை சமூக சேமநல மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் அனிதா அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இத்திட்டம் தொடர்பான பிரேரணையை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதன் முன்னர் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்படவுள்ளது.

இந்த ஓவ்வூதியத்திட்டம் சமூக பாதுகாப்புச்சபையினால் அமுல்படுத்தப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-7)

# கே.ஸி.ஸி.ஸி. கிண்ணக் கிரிக்கெட்; ஜொனியன்ஸ்-பற்றீஸியன்ஸ் மோதல்

யாழ்ப்பாணம், ஓக.07

கொக்குவில் மத்திய சனசமூக விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் கே.ஸி.ஸி.ஸி. கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் இன்று காலை 9 மணி முதல் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

40 ஓவர்கள் கொண்ட இந்த ஆட்டத்தில் ஜொனியன்ஸ் வி.க.வும் பற்றீஸியன்ஸ் வி.க.வும் மோதுகின்றன.

கடந்த ஒரு மாதமாக நடைபெற்று வந்த இச்சுற்றுப்போட்டியில் குடாநாட்டைச் சேர்ந்த பலம்வாய்ந்த அணிகள் மோதின.

பலம்வாய்ந்த இரு அணிகள் மோதும் இன்றைய ஆட்டம், இரு அணிகளுக்கும் பலப் பரீட்சையாக அமையப்போகின்றது. (3-203)


### யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் வி.க.



இருப்பவர்கள் (இடமிருந்து வலம்) - கோ.கோபிகிருஷ்ணா(கழகச் செயலாளர்/ முகாமையாளர்), பா.பிரதீபன்,வி.குமணன்(அணித் தலைவர்), சி.தனபாலன்(போஷகர்), பா.சஞ்சீவ் ச.ரதீஸ்குமார்(அணி உபதலைவர்), வோ.இரா. இரட்ணம், ம.ப.புறூடி(கழகத் தலைவர்/பயிற்றுநர்)

நிற்பவர்கள் - த.இவோன்சன், ந.நவகீதன், த.மதன்ராஜ், அ.மயூரதன், ஆ.அன்புஜன், ஞா.சஞ்சீவன், தி.நிருபன், த.கிருசாந்த், ப.நேசவர்மன், மா.ஹரிப்பிரவின்.

### பற்றீஸியன்ஸ் வி.க.



இருப்பவர் (இடமிருந்து வலம்) - ரி.யூப் அன்ரனிதாஷன்(அணித் தலைவர்), எம்.பேர்டிபனிஸ்ரர், ஏ.எஸ்.நிஷாந்தன்(பயிற்றுநர்), பி.பார்த்தீபன், வணபிதா ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், ரி.முகுந்தன்(உபதலைவர்), ஆர்.ரட்ணராஜா (முகாமையாளர்)

நிற்பவர்கள் - எல்.பத்மமுரளி, ஆர்.ஜெனன்ராஜா, ஏ.எல்.சுஜீபன், ஜி.எஸ். லொயித், ஜீ.ஆர்.தேவராஜன், ஐ.ஜக்ஷன், ஜே.ஜெயந்திரன்.

# இன ஒற்றுமையை வளர்க்கக்கூடிய கல்வித்திட்டங்கள் இங்கு இல்லை!

*இந்த நாட்டில் காலத்துக்கு காலம் ஆட்சிப்பீடம் ஏறிய அரசுகள் தமிழர் கல்வியை திட்டமிட்ட முறையில் புறக்கணித்தே வந்திருக்கின்றன.*

*இவ்வாறான அரசுகளின் கல்விப்புறக்கணிப்புத் தொடர்பாக ஒருசில செயற்பாடுகளே நேரடியாக வெளித்தெரிந்தன. ஆனால், தமிழ் மாணவர்களின் கல்விக்கு ஆப்பு வைக்கின்ற பல செயற்பாடுகளை மறைமுகமாக - வெளித்தெரியாத வகையில் - சிங்கள அரசுகள் மேற்கொண்டு வந்திருக்கின்றன; இப்போதும் மேற்கொள்கின்றன.*



*இந்த நிலையில் தமிழர் கல்வி எந்தெந்த வகையில் புறக்கணிக்கப்படுகிறது, ஒடுக்கப்படுகிறது என்ற விடயங்கள் தொடர்பாக தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் உதயனுக்கு வழங்கிய சிறப்புச் செவ்வி இது.*

*தமிழர் தாயகத்தின் கல்விநிலை வீழ்ச்சியடைந்து கொண்டு செல்வதற்கான காரணங்களை தகுந்த ஆதாரங்களுடன் - புள்ளி விவரங்களுடன் விவரிக்கிறார் இளங்குமரன். இவரது செவ்வியின் மூன்றாம் பகுதி ஜூ 24 ஆம் திகதி உதயனில் வெளியாகியிருந்தது.*

## தமிழர் பிரதேசத்தின் வீழ்த்தப்படும் கல்வி — 4

***கேள்வி:*** தமிழ் மாணவர்கள் மத்தியில் ஆங்கிலக் கல்வியின் தரம் மிகவும் வீழ்ச்சியடைந்து செல்வதாக அடிக்கடி பல்வேறு தரப்பினராலும் சுட்டிக்காட்டப்படுகிறதே; இது குறித்து என்ன கூறுகின்றீர்கள்....?

*பதில்:* ஆங்கிலம் ஒரு முக்கியமான பாடம். ஆனால், தமிழ் மாணவர்கள் மத்தியில் ஆங்கிலக் கல்வியை உரியமுறையில் வளர்ப்பதற்கு ஸ்ரீலங்கா அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. தமிழ்ப் பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை மிக நீண்ட காலமாக இருந்து வருகிறது. இடைநிலைக்கல்வியில் ஆங்கிலம் கற்பிப்பதற்கான ஆசிரியர்கள் சிங்களப் பகுதியில் கூடுதலாக- மேலதிகமாக இருக்கிறார்கள். வடக்கு - கிழக்கிலும் கின்றன.

நுவரெலியா, ஹற்றன் போன்ற பகுதிகளிலெல்லாம் தமிழ்ப்பாடசாலைகளே அதிகமாக இருக்கின்றன. ஆனால், அவற்றை நிர்வகிப்பது சிங்கள அதிகாரிகளே.

இதைவிட வடக்கு - கிழக்குக்கு வெளியில் இருக்கின்ற முஸ்லிம் பாடசாலைகள் பலவற்றில் பாடங்களுக்கு உரிய ஆசிரியர்கள் இல்லாததால் அந்தப் பாடசாலைகள் தமிழ் மொழியிலிருந்து (Tamil Medium) சிங்கள மொழிக்கு (Singala Medium) மாறுகின்ற நிலைமை ஏற்பட்டுவருகிறது.

அத்தகைய பாடசாலைகள் பலவற்றில் ஆசிரியர்களாக, அதிபர்களாக சிங்களவர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

கூட சிங்கள மொழிப் பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்கள் அதிகமாகவே இருக்கின்றனர்.

ஆனால், எங்கள் பாடசாலைகளில் பற்றாக்குறை பல மடங்காக இருக்கிறது. ஆரம்பக் கல்வியில் ஆங்கில ஆசிரியர்களுக்கு 80 வீதப்பற்றாக்குறை இருக்கிறது. இதனால், ஆண்டு 1 தொடக்கம் 5 வரையான மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்பதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு. ஆரம்பக் கல்வியில் ஆங்கிலத்தை சரிவரக் கற்றுக் கொள்ளாத மாணவர்கள் இடைநிலைக் கல்விக்கு போகும் போது தொடர்ந்து அதனைப் படிக்கமுடியாத நிலை ஏற்படுகிறது. திட்டமிடப்பட்ட முறையில் எமது தமிழ் மாணவர்களுக்கு ஆங்கில அறிவே இல்லாத ஒருநிலை ஏற்படுத்தப்பட்டுக்கொண்டு வருகிறது. ஆங்கில ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவும் போதும்

### இனமுரண்பாட்டை வளர்க்கும் புதிய கல்விச் சீர்திருத்தங்கள்

*கேள்வி:* சிங்கள மாணவர்களுக்கு புரிந்துணர்வை ஏற்படுத்தக்கூடிய வகையில் - அவர்கள் தமிழ் மக்களின் நிலைப்பாடுகளைப் புரிந்துகொள்ளக்கூடிய விதத்தில் கல்வித்திட்டங்கள் ஏதும் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றனவா?

*பதில்:* இலங்கை அரசினால் முன்வைக்கப்படுகின்ற கல்வித்திட்டங்கள், செயற்பாடுகள் அனைத்துமே இந்த நாட்டில் இன முரண்பாடுகளை மேலும் மேலும் தூபமிட்டு வளர்த்துவிடுவனவாகவேஉள்ளன.

நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல பாடநூல்கள் பலவற்றிலும் - குறிப்பாக வரலாற்றுப் பாடநூல்களில் மகாவம்சத்தை அடிப்படையாகக் கொண்ட திரிக்கப்பட்ட - பொய்யான

கையைத் தவிர வேறெருந்த நாட்டிலும் மாணவர்களுக்கு மதம் கட்டாய பாடமாக வைக்கப்பட்டிருக்கவில்லை. பல மதங்கள் தோன்றி வளர்ந்த இந்தியாவில் கூட இத்தகைய நிலைமை இல்லை.

மலேசியா ஒரு முஸ்லிம் நாடு ஆனால், அங்கு மதக்கல்வி பாடசாலைகளில் இல்லை. இலங்கையில் மட்டுத்தான் மதக்கல்வியைக் கட்டாயமாக்கி மாணவர்களுக்குத் திணிக்கின்றார்கள். குறிப்பாக பண்டார நாயக்கா அதிகாரத்துக்கு வந்த பிறகு இங்கு மர்ணவர்கள் மத்தியில் மகாவம்சக் கருத்துக்களைப் பரப்புவதற்காகவே மதக்கல்வி கட்டாய பாடமாக்

கைத் தீவில் இல்லவே இல்லை.

### இடைக்கால சபையிலும் கல்வியை வளர்க்கமுடியாது

*கேள்வி :-* சில வேளைகளில் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகசபை கையளிக்கப்பட்டால் தமிழர் தாயகத்தில் நிலவும் கல்விக்கான குறைபாடுகளை நீக்கி, மீண்டும் எமது கல்வித் தரத்தை உயர்த்த முடியும் என்று கருதுகின் றீர்களா?

*பதில்:-* எமது பிரதேசத்தில் கல்வித்தரத்தை மீண்டும் முன்னரைப் போல உயர்த்துவது என்பது ஒரு பாரிய வேலைத்திட்டத்தின் ஊடாகச் செய்யப்படவேண்டியதாகும். இதனை இடைக்கால நிர்வாகத் தின் ஊடாக- குறுகிய காலத்தில் - குறிப்பிட்ட அளவிலான - அதிகாரங்களை - கையில் வைத்துக்கொண்டு - செய்துவிட முடியாது.

எங்களுக்கு ஏற்ற பாடத்திட்டங்களை நாங்களே அமைக்கக்கூடிய, எங்களுக்குத் தேவையான ஆளணியை நாங்களே நியமிக்கக் கூடிய, கல்விசார் ஆளணிக்கு உரிய பயிற்சிகளை வழங்கக் கூடிய அதிகாரங்கள் எமது கைக்கு வந்தால் மட்டுமே கல்வியை வளர்த்துச் செல்லமுடியும்.

## இனமுரண்பாடுகள் அதிகரிக்க இதுவும் மூலகாரணம் என்கிறார் இளங்குமரன்

தகுதியானவர்கள் வெளியில் இருக்கிறார்கள். அவர்களை உள்வாங்கி நியமனங்களை வழங்குவதற்கு அரசு தடையாகத்தான் இருக்கிறது.

### வடக்கு-கிழக்குக்கு வெளியே உள்ள தமிழ்ப்பாடசாலைகள் சிங்களமயம்

*கேள்வி:-* வடக்கு-கிழக்குக்கு வெளியே உள்ள தமிழ்ப்பாடசாலைகளில் நிலைமை எப்படி?

*பதில்:-* வடக்கு - கிழக்கில் மட்டுமன்றி அதற்கு வெளியில் உள்ள தமிழ்ப்பாடசாலைகளிலும் அரசின் கல்விப்புறக்கணிப்புச் செயற்பாடுகள் இருக்கின்றன. குறிப்பாக, மலையகத்தை எடுத்துக்கொண்டால் அங்கு ஆசிரியர் பற்றாக்குறையும் வளப்பற்றாக்குறைகளும் இங்கு இருப்பதைவிட மோசமாக இருக்

- வரலாறுகளே இடம்பெற்றிருக்கின்றன. தமிழ் மக்களுடைய பூர்வீகத்தை மழுங்கடிக்கின்ற - மூடிமறைக்கின்ற - வகையிலேயே அங்கு வரலாறுகள் கூறப்பட்டி ருக்கின்றன. இந்த வரலாறுகளையே சிங்கள மாணவர்களும் படிக்கின்றார்கள்.

இதனை விட பௌத்தமதம், சிங்கள மொழி ஆகிய பாங்களினூடாகவும் தேசவாதப் பௌத்தக் கருத்துக்களே மாணவர்களுக்குப் புகுத்தப்படுகின்றன. சித்திர பாடதிலும் பௌத்தக் கலைகள், பௌத்த நினைவுச் சின்னங்கள் என்பனவே முதன்மைப்படுத்தப்படுகின்றன. இந்த சித்திரப்பாடத்தில் தமிழ் மாணவர்களுக்குக் கூட பௌத்தக் கலைகளே பாடத்திட்டத்தில் சேர்க்கப்படு கின்றன. இங்கு மதம் கட்டாய பாடம் ஆக்கப்பட்டிருக்கிறது. இலங்

கப்பட்டிருக்கிறது.

இந்த நாடு பௌத்த சிங்கள நாடு - இது சிங்களவர்களுக்கு மட்டுமே சொந்தமானது என்ற கருத்தை - பொய்யை - பௌத்தமதம், சிங்கள மொழி, சித்திரம், வரலாறு ஆகிய நான்கு பாடங்களுக்கு ஊடாக மாணவர்களுக்கு புகுத்துகின்றார்கள்; வலியுறுத்துகின்றார்கள். இதனால், சிங்கள மாணவர்களும் தவறான வரலாறுகளையே புரிந்துகொள்கிறார்கள்; உண்மையென்று நம்பி விடுகிறார்கள். காலத்துக்குக்காலம் தமிழ் - சிங்கள இனங்களுக்கிடையிலான முரண்பாடு பெருகிக்கொண்டு போவதற்கு இதுவும் ஒரு முக்கியமான காரணமாக இருக்கிறது.

இன ஒற்றுமையை வளர்க்கக் கூடிய - இனங்களுக்கிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தக் கூடிய கல்வித்திட்டங்கள் இலங்

**செவ்வி: அற்புதன்**

ஆனால், பாடத்திட்டங்களை மாற்றுவது, பாடநூல்களை எழுதுவது போன்ற முக்கியமான அதிகாரங்கள் இடைக்கால சபைக்கு இருக்காது.

இடைக்கால சபையைப் பொறுத்த வரையில் அதன் ஊடாக கல்வியில் ஒருசில செயற்பாடுகளை நாங்கள் செய்யமுடி யுமே தவிர தற்போதைய தமிழர் கல்வித் தர வீழ்ச்சியை பெரியளவில் நிவர்த்தி செய்யமுடியாது. அதற்குசிறிது கால அவகாசம் வேண்டும்போதிய அதிகாரங்கள் தேவை.

*(வளரும்)*

# கவனிப்பாரற்ற நிலையில் கைவிடப்பட்ட ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை!

முல்லைத்தீவு மாவட்டத்தில் நீண்டகாலமாக இயங்கிவந்த முக்கியமான தொழிற்சாலைகளில் ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலையும் ஒன்றாகும்.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு மட்டுமல்லாது வடக்கின் வேறுபல மாவட்டங்களுக்கும் தேவையான ஓடுகளை உற்பத்தி செய்து விநியோகித்து வந்தது இந்தத் தொழிற்சாலை.

ஏராளமான மக்கள் இங்கு தொழில் வாய்ப்புகளைப் பெற்று மிகுந்த வளத்துடன் வாழ்ந்து வந்தார்கள்.

பின்னர் நாட்டில் ஏற்பட்ட இன யுத்தத்தின் போது தமிழர் 'தாயகத்தில் இருந்த தொழிற்சாலைகளை ஸ்ரீலங்கா அரசுகள் ஒவ்வொன்றாக முடக்கின.

அந்த வரிசையில் ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையும் படிப்படியாகக் கவனிப்பாரற்ற நிலையில் கைவிடப்பட்டது. அந்தத் தொழிற்சாலையில் பணிபுரிந்த ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டன.

வடக்கு - கிழக்கிலுள்ள அரச கூட்டுத் தாபனங்கள் அனைத்திற்கும் வேலை இழப்பீடுகள், நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகள், சேவைக் கால கொடுப்பனவுகள் என்பன வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால், ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலைக்கு மட்டும் எந்தவொரு கொடுப்பனவும் வழங்கப்படவில்லை.

இது தொடர்பாக அந்த ஓட்டுத் தொழிற்சாலை எழுதுநராகப் பணியாற்றி வருபவரான எஸ்.குணசிங்கத்திடம் கருத்துக்கேட்டோம். அவர் தெரிவித்ததாவது:-

எமது தொழிற்சாலை புறக்கணிக்கப்படுவது பற்றி அரச அதிபரிடமும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் தெரிவித்தோம். தரப்படும் தரப்படும் என்று கூறி காலத்தைக் கடத்திக் கொண்டு செல்கின்றனர்.

ஒட்டுசுட்டான் மட்பாண்டக் கூட்டுத்தாபனம் இப்பகுதி மக்களின் வறிய நிலையினை கருத்திற்கொண்டு பலருக்கு தொழில்வாய்ப்பை வழங்கியது.

இந்தத் தொழிற்சாலை மூலம் வறியமக்கள் தமது வாழ்வை மேம்படுத்தவேண்டும் என்ற நோக்கிலேயே இது ஸ்தாபிக்கப்பட்டது. இங்கு மிகவும் வறியமக்களே தொழிலில் ஈடுபட்டு வந்தனர்.

அன்றாட வாழ்க்கைச் செலவு அதிகரித்த வேளையிலும் பல குடும்பங்கள் இந்த ஓட்டுத் தொழிற்சாலையின் வருமானத்தில் வாழ்ந்து வந்தார்கள் .

### 15 வருடங்களாக சம்பளம் இல்லை

1990 ஆம் ஆண்டிலிருந்து இப்பணியாளருக்கு இற்றவரையிலும் அவர்களது சம்பளங்கள் வழங்கப்படவில்லை. இது தொடர்பாக பலதடவைகள் உரியதரப்புகளுக்குத் தெரியப்படுத்தினோம். ஆனால், இதுவரை எவ்வித பலனும் கிடைக்கவில்லை. மூத்தஊழியர்கள் சிலர் இறந்துவிட்டனர். அவர்களது குடும்பங்களுக்குக்கூட எந்த உதவிகளும் வழங்கப்படவில்லை.

யுத்த சூழ்நிலையிலும் தமது குடும்ப வறுமையிலும் சொல்லணாத் துன்பங்களை எதிர்கொண்டுவந்த இந்த தொழிற்சாலை ஊழியர்களும் அவர்களது குடும்பத்தினரும் தற்போது அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் எவ்வித உதவிகளும் கிடைக்கப்பெறாமையால் விரக்தி

**இ.தனபாலசிங்கம்**

யின் விளிம்பில் உள்ளனர்.

தற்போது ஏனையவர்களுக்குக் கிடைப்பது போன்று வீட்டுத் திட்டங்களையும் வேறு ஏதாவது தொழிற்திட்டங்களையும் இந்த ஊழியர்களுக்கும் வழங்கி அவர்களின் இயல்பு வாழ்க்கைக்கு உதவுவதற்கு சகல அமைப்புகளும்



தொழிற்சாலையில் எழுதுநராகப் பணியாற்றிவரும் எஸ்.குணசிங்கம்

முன்வரவேண்டும்.

1990ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்படவேண்டிய ஊதியங்கள் அவர்களது குடும்பங்களுக்கு , வழங்கப்படவேண்டும்.

சில பணியாளர்கள் இத் தொழிற்சாலையினை விட்டு விலகியுள்ளனர். தற்போது முன்னைய பணியாளர்களில் 5 - 6 பேர் மட்டுமே வேலை செய்கின்றனர்.

இதனை விட்டால்வேறு வழி இல்லாது கஷ்ரத்திலே தான் வேலை செய்கின்றனர். சம்பள உயர்வோ, அன்றி வேறு கொடுப்பனவுகளோ எமக்கு இதுவரை வழங்கப்படவில்லை.

யுத்த காலத்திலும் துன்பங்களை எதிர்கொண்ட போதிலும் தற்போது சமாதான காலத்திலாவது எமக்கு ஒரு விடிவு ஏற்படாது என எதிர்பார்த்திருந்தும் எந்த ஒரு நன்மைகளும் கிடைக்கவில்லை.

எனவே சொல்லொணாத்துயரில் இருந்து வரும் மக்களின் வாழ்வை புனரமைக்கக்கூடிய உதவித்திட்டங்களை முன்னெடுப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்புகள் முன்வரவேண்டும்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 15 • 01 • 1934

மறைவு 10 • 07 • 2005

## திருமதி சரஸ்வதி வைத்திலிங்கம்

கடந்த (ஜூலை) மாதம் 10ஆம் திகதி சிவபதமடைந்த எமது அன்புத் தாயின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் தொலைபேசியில் ஆறுதல் கூறியவர்களுக்கும் தந்தி மூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் எமக்கு பலவழிகளிலும் உதவி செய்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, நாளை (08.08.2005) திங்கட்கிழமை பகல் அவரது இல்லத்தில் நடக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மஹேஸ்வரபவனம்,
அத்தியடி, கம்பர்மலை,
உடுப்பிட்டி.
தொ.பே.: 021-2264273.

- குடும்பத்தினர்.

(சி-44455)


## நல்லூர்ப் பிரதேச ஓய்வூதியர் கவனத்துக்கு!

ஓய்வூதியர்களின் சுயவிவரங்கள் யாவும் கணனி மயப்படுத்தப்பட வேண்டும் என்று ஓய்வூதியப் பணிப்பாளரினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, நல்லூர் பிரதேச செயலகத்தில் ஓய்வூதியம் பெறும் அனைத்து ஓய்வூதியர்களும் தங்கள் பிரிவு கிராம அலுவலர்களிடமிருந்து உரிய படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி, எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு நல்லூர் பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம் கேட்டுள்ளார். (எ-202)

## சமுர்த்தி முத்திரை விநியோகம்

வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவில் சுமார் 4ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரண முத்திரைகள் வழங்கப்படவுள்ளன.

வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள 25கிராம அலுவலர்கள் பிரிவுகளிலும் சுமார் 10ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரண முத்திரைக்கான மதிப்பீட்டுப் படிவங்கள் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களினால் விநியோகிக்கப்பட்டு சகல விவரங்களும் சேகரிக்கப்பட்டன.

இவற்றுள் சுமார் 4ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு மட்டுமே சமுர்த்தி நிவாரண முத்திரைகள் விநியோகிக்கப்படவுள்ளன. (எ-175)

## நாடாளுமன்றில் செவ்வாய் விவாதம்

இந்திய வம்சாவளியினரைத் தூஷித்தும், ஊடகங்களைச் சாடியும் கருத்துகளைத் தெரிவித்த பிரதியமைச்சர் மேர்வின் சில்வா மீது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென வலியுறுத்தும் சபை ஒத்திவைப்பு வேளை விவாதம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன், இந்த சபை ஒத்திவைப்பு வேளைப் பிரேரணைக்கான முன்னறிவித்தலை சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டாரவிடம் சமர்ப்பித்திருக்கிறார்.

இந்த விவாதத்தில் பல தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்வார்களெனத் தெரிவிக்கப்படுகிறது. அரசுத் தரப்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விவாதத்திற்குப் பதிலளிப்பாரெனவும் தெரியவருகிறது. (எ-க)

## விசுவமடுவில் இன்று மாட்டு வண்டில் சவாரி

பரந்தன்,ஓக.7

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள விசுவமடு தொட்டியடியில் அமைந்துள்ள மாட்டுவண்டில் சவாரித்திடலில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.2 மணிக்கு மாபெரும் மாட்டுவண்டில் சவாரிப் போட்டி ஒன்று நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் கேட்டுள்ளனர். (த-352)


ஏன் அதிகமாக செலவிட வேண்டும். !



Intel 2.4 GHZ Full Multimedia Systems 38,900/= Upwards

Stylish Casings from 2,250/=

Fordable Computer Tables from 4,990/=

USB+Ps2 OpticalMouse 550/=

DVD+VCD+CD R (Combo)Drive Just 5,650/=

Epson C-45 Colour Printer Just 5,850/=

256 Kinston Flash Drive 2950/=
512 Kinstonb Flah Drive 5250/=
Key Boards: 375/=
3 D Scroll Mouse:250/=
DVD ROMs:3500/=
Home Theaters 1200/=-to 35,000/=

5.1 Home Theaters 1200/= to 35,000/=

Scanners,CDs,DVD Roms,Monitors,LCD Panels,Capture Cards and more...

உங்கள் அனைத்து கணினி சம்பந்தமான தேவைகளுக்கும் அழையுங்கள் - 4511408

PsP Computers
379 1/4,Galle Road,Colombo-06
We Care You Remain Happy!
Tel:4511408,2362052

"நாங்கள் அக்கறையாக உள்ளோம்! நீங்கள் ஆனந்தமாக இருங்கள்!"

இணையத்தில் இணையுங்கள் ! www.pspezone.com



# தபால் மூல ஆங்கில பாடநெறிகள்

நீங்கள் இருக்கும் இடத்தில் இருங்கள் நாம் அங்கு உங்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கின்றோம்

Free அழகிய கைக்கடிகாரம் மற்றும் அழகிய கிளியர் பேக் பைல் Free
ஒன்றும் இலவசம் முந்திக்கொள்ளுங்கள்

விபரங்களுக்கு சுயவிலாசத்துடன் 5.00 பெறுமதியான 3 முத்திரைகள் அனுப்பி பெறவும்

UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. Tel: 077-3123523


# மரண அறிவித்தல்கள்

## பொன்னையா கணபதிப்பிள்ளை (M.P.K)

*(முன்னாள் பிரபல வர்த்தகர் - மன்னார்)*



இணுவிலைப் பிறப்பிடமாகவும் ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா கணபதிப்பிள்ளை (M.P.K) 05.08.2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாராயணசிங்கம் - மாரிமுத்து தம்பதியினரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் பொன்னம்பலம் (லண்டன்), தவமணி (கனடா), காலஞ்சென்றவர்களான பரஞ்சோதி, சற்குணதேவி மற்றும் சண்முகராசா, சரஸ்வதி (உதவி மாவட்டச் செயலர் - மன்னார்), மகாலட்சுமி, சிவகுமார் (டோகா), நந்தகுமார் (அலுவலர், யாழ்.இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிறேமலாதேவி (லண்டன்), கனகசுந்தரம் (கனடா), மோகநாதன் (உதவிக் கல்விப் பணிப்பாளர் - மன்னார்), தர்மரத்தினம் ஆகியோரின் அன்பு மாமனாரும் சர்மிளா, சரணிகா, யாமினி, தாட்சாயினி, கஸ்தூரி, பவிதரன், குமிரா, தௌசிகன் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், இராசரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (06.08.2005) சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் ஓட்டுமடத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*15/6, தேவாலய ஒழுங்கை;*
*ஓட்டுமடம்.* (சி-44449)(42-11)

*தகவல்:*
*மனைவி,பிள்ளைகள்.*

## சண்முகம் சுந்தரம் ஆசாரியார்



காரைநகர், களபூமியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், ஐயனார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் சுந்தரம் ஆசாரியார் 04.08.2005 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சண்முகம் சீதேவன் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா ஆசாரியாரின் சகோதரனும் மனோகரி அம்மாவின் கணவரும் கந்தசாமி - மகேஸ்வரி தம்பதியினரின் மருமகனும் நிர்மலா, பத்மஜெயம் (ஜேர்மனி), கிருஷ்ணகுமார் (பிரான்ஸ்), செந்தில்செல்வன் (கனடா), பிறேமிளா (கனடா), சண்முகலிங்கம் (சுவிஸ்), சுதாகரன் (பிரான்ஸ்), சசிகலா (பிரான்ஸ்), சதீஸ்வரன் (கனடா), காயத்திரி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் கைலாயநாதன், கந்தசாமி (டோகா), ரஜனி (ஜேர்மனி), மனோரஞ்சிதம் (பிரான்ஸ்), மனோரஞ்சிதம் (கனடா), சிவபாலன் (கனடா), விஜயலட்சுமி (சுவிஸ்), ஜெயதாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் செல்வராணி, புனிதவதி, துரையம்மா, செல்வம், தங்கவேலாயுதம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் துஸ்யந்தி, கீர்த்திகா, சங்கவி, கௌசிகன், கிருஷா, லுக்சாயினி, திவ்யா ஆகியோரின் அன்புப் பேரனும் உருத்திராணியின் சிறிய தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2005) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை அறியத்தருகின்றோம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*95/10, ஐயனார் கோவிலடி,*
*ஆண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.* (38578)(42-11)

*தகவல்:*
*குடும்பத்தினர்.*


Spoken English for Speakers of Other languages

City & Guilds

சர்வதேச அங்கீகாரம் பெற்ற பாடநெறிப் பத்திரம்



City & Guilds International SESOL
Achiever Level/Communicator Level

யாருக்காக?

- வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்காக ஆங்கில பேச்சுத்திறனை வளர்த்துக் கொள்ள வேண்டியவர்கள்.
- ஆங்கிலம் பேசும் திறமை மூலம் பரீட்சைகளில் உயர்சித்தியைப் பெற விரும்புபவர்கள்.
- வெளிநாடுகளில் கல்வியைப் பெறுவதற்கு அத்திறுவனங்களுக்கு ஆங்கிலத்திறனுக்கான அத்தாட்சிப்பத்திரங்கள் தேவைப்படுபவர்கள்.

பாடநெறிக் காலம்: 10 வாரங்கள் (50 மணித்தியாலங்கள் உட்பட)
பாடநெறிக் கட்டணம்: ரூ. 3000/- (அப்பியாசப் புத்தகங்கள் உட்பட)
பதிவு செய்வதற்கான கட்டணம்: ரூ. 450/-

Skills International உடன் இணைப்புச் சேவை

கண்டி, அறுப்பல - 0777 843291
கண்டி, கட்டுகஸ்தொட - 0777 843291
பேராதனை, லங்கா பைபிள் வித்தியாலய செமனறி கிறிஸ்தோபர் வீதி - 081 4471496
கண்டி, திறஸ்ஸகல வீதி - 0776 902932, 081 4476282
வென்னப்புவ, தோமஸ் பர்னாந்து வீதி - 031 2254859
குளியாப்பிட்டிய, தொடம்பாவுல - 037 2282395
குருநாகல், நிகந்ததாவன கிரிபிட்டிய - 037 2264644
அநுராதபுரம், புதிய நகரம் - 025 2235137
யாழ்ப்பாணம், பொற்பதி வீதி, கொக்குவில் - 021 2223258, 0776 544676
தெஹிவளை, LBC சென்றர் இராஜுவேற் ஸ்டடீஸ் - 011 5559833
கொழும்பு-4 ஷர்ப் பூங்கா - 011 2507378, 077 6609158

Skills International (Pvt) Limited
City & Guilds Implementation Partner
321, 2ஆவது மாடி, லக்ஷ்மன்ஸ் கட்டடம், காலி வீதி, கொழும்பு-03.
தொலைபேசி: 2375270-1 / 4740334 இணையத்தளம்: www.skillsinternational.lk

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# சுதேச மருத்துவத்தைப் பாதுகாக்க...

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். நோய் வருமுன் காப்பதே சுகவாழ்வுக்கு வழி செய்யும்.

உணவே மருந்து. எமது உணவையும், உணவுப் பழக்கத்தையும் சரியாகக்கொண்டால் நோயில்லாத நிம்மதியான வாழ்வைக்காண இயலும்.

பல வழிகளிலும் போதிக்கப்படும் அல்லது ஊட்டப்படும் கருத்துக்கள் இவை.

ஆனால், இப்போதைய நிலைமைகளும் நடைமுறைகளும் நோயற்ற வாழ்வுக்கு இட்டுச் செல்வதாக இல்லை. மக்களில் தொண்ணூறு வீதத்துக்கும் மேற்பட்டவர்கள் நோயாளர்கள் என்ற பதத்துக்குப் பொருத்தமானவர்களாக ஆகியுள்ளனர்.

மனித குலம் நோயற்று, நோய்தீர்த்து வாழ்வதற்காக உருவாக்கப்பட்ட மருத்துவ முறைகள் எண்ணில் அடங்கா. உலகின் அனைத்து நாடுகளிலும், அந்தந்தப் பிரதேசத்திற்கென தனித்துவமான, சிறப்பான மருத்துவ முறைகள் உள்ளன.

தமிழர்களின் சிறப்பான, தனித்துவமான வைத்தியம் சித்த மருத்துவம். அது பிறந்தது தமிழகத்திலேயே என்றாலும் ஈழத்திலும் தழைத்தோங்கி இருந்தது.

இப்போதெல்லாம், தமது தீராத வியாதிகளைத் தீர்ப்பதற்காக மேலைநாட்டவர்கள் தமிழகத்தை நாடிச் செல்கிறார்கள். அந்த அளவுக்குச் சித்த வைத்தியம் தமிழகத்தில் தரம் உயர்ந்து வளர்ந்துள்ளது.

ஆனால், தமிழர்களின் சொந்த - தேசிய - சுதேச வைத்தியமான சித்த மருத்துவத்தின் நிலை எமது மண்ணில் என்னாயிற்று?

மேலை நாட்டு வைத்தியம் அறிமுகமாகியதால், எங்கள் சொந்த வைத்தியத்தை நாடுவோர் குறைந்து விட்டனர். ஆங்கில வைத்தியம் உடனடி நிவாரணம் தரினும் வாழ்நாள் முழுவதும் 'கிடந்து' அனுபவிக்கக்கூடிய பக்க விளைவுகளைத் தருவது என்பதை அறியாமலும் அறிந்தும் அதனையே நாடுகிறோம். ஆங்கில (மேல்நாட்டு) வைத்தியமே 'ஒப்பற்றது' என்ற மாயையில் நாம் சிக்கிப் பல காலமாகிவிட்டது.

மக்கள் ஆதரவும், நாட்டமும் குன்றக்குன்ற சித்த வைத்தியர்கள் எண்ணிக்கையும் குறைந்துவிட்டது. அது சாதாரண கணக்குத்தான். ஆனால், எங்கள் தேசியச் சொத்தை இழந்து வருகிறோம் என்பதனை உணர்கிறோம் இல்லை.

பரம்பரை பரம்பரையாகக் கையளிக்கப்பட்டு வந்த சித்த வைத்தியப் பயிற்சியும் பயில்முறைகளும் 99 சதவீதம் அருகிப்போய்விட்டன. இந்த நிலை எங்கள் தேசத்திலும் மக்களிலும், குறிப்பாக வருங்காலச் சந்ததியினரின் சுகவாழ்வில் அக்கறை உடையோரின் மனங்களைப் பிழிகின்றது.

நவீன, பிறநாட்டு வைத்திய முறைகளுக்குச் சமாந்தரமாக எமது சுதேச வைத்தியத்தை வளர்ப்பதற்கு முன்னர், அது இங்கே நலிந்துபோகும் - அழிந்துபோகும் - நிலையை நீக்குவதில் அக்கறை கொள்வார் மிகச் சிலரே.

* மருத்துவ இரகசியங்கள் பரவலாக்கப்படக்கூடாது என்ற ஒவ்வாத சிந்தனையால் சித்தவைத்திய வளர்ச்சி முன்னர் குன்றியது.

* மேல் நாட்டு வைத்தியத்தைப் பயில்வதில், பயிற்சி பெறுவதில் அவ்வப்போது சமகாலச் சந்ததியினருக்கு இருந்த அதிக நாட்டமும் ஆர்வமும் சுதேச வைத்தியத்தின் வீழ்ச்சிக்குக் காலானது.

* சித்த வைத்திய மருந்துகளைத் தயாரிப்பதற்குத் தேவையான மூலிகைகள் மற்றும் மூலப் பொருள்களைப் பெறுவது பெரும் சிரமமாக மாறிவிட்டதால் -

அவற்றின் உற்பத்தியும் பயன்பாடும் அருகிவருகின்றன.

* இதனைவிட, சுதேச வைத்தியர்களில் சிலர் ஆங்கில மருந்துகளையும், ஆங்கில மருத்துவ முறைகளையும் கையாளுகின்றனர். அதாவது, சித்த வைத்தியம் - சுதேச வைத்தியம் - கலப்படமாகிவிட்டது.

மேற்சொன்ன பின்னடைவுகளுக்கும் அவற்றுக்கு மேலதிகமானவற்றுக்கும் காரணம் என்ன? எங்கள் சொந்த வைத்தியத்தைப் பேணி, அதன் தனித்துவத்தைக் காத்து, அதன் தரத்தை வளர்ப்பதற்கென ஓர் அரசு இல்லை.

கொழும்பு அரசு, சிங்கள மக்களுக்கு உரிய ஆயுள்வேத வைத்தியமுறையை வளர்த்து, உயர்த்துவதிலேயே அதீத அக்கறையுடன் செயற்படுகிறது. பெயரளவில் மட்டும் - மனதளவில் சிறிதளவும் இன்றி - தமிழரின் சுதேச வைத்தியத்துக்குக் கைகொடுப்பதாகக் காட்டுகிறது.

இன்னும் சரியாகச் சொல்வதானால், தமிழர்களின் பாரம்பரிய சுதேச மருத்துவம் - சித்த மருத்துவம் - இலங்கை அரசின் திட்டமிட்ட செயற்பாட்டால் தரமிழந்தும், வளர்ச்சி குன்றியும் வருகிறது.

இதனை மிகச் சரியாகவும் தெளிவாகவும் சுட்டிக் காட்டியிருக்கிறார் தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் சி.விக்ரமன்.

எமது பாரம்பரிய மருத்துவ சேவையின் தரத்தை வளர்க்கவும் மேம்படுத்தவும் எமக்கென ஓர் அரசு தேவை. ஏனைய பல துறைகளிலும் வாழ்வாதாரத் தேவைகளிலும் கூட தனி அரசின் தேவை பெரிதாக உணர்த்தப்படுகிறது.

அதுவரை காத்திருக்காமல் இப்போதே திட்டமிட்டுச் செயலில் இறங்கவேண்டும். அதுவே எமது வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் அருமருந்தாக அமையும். எமது சொத்துக்களை பேணவும் காக்கவும் உதவிடும்.

# மோதல்கள் பரவாது தடுக்க அரசு, புலிகள் உறுதிமொழி!

## ஹெல்கிஸன் கிளிநொச்சியில் தகவல்

கிளிநொச்சி, ஓக.7

வன்முறைகளைப் பரவவிடாமல் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு அரசு, புலிகள் இரு தரப்பினரும் உறுதிமொழி தந்துள்ளனர் என்று நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற சந்திப்பையடுத்து ஊடகவியலாளர்களிடம் அவர் உரையாடினார்.

அப்பொழுது அவர் கூறியதாவது:-

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்துக் கவலை கொள்கிறோம். வியாழனன்று இரவு ஜனாதிபதியுடன் யாழ்ப்பாண நிலைமை குறித்துப் பேசினோம்.

இன்று தமிழ்ச்செல்வனுடனும் யாழ்ப்பாண நிலைமை குறித்துப் பேசினோம். இரு தரப்பினரும் இந்தவிடயத்தில் மிகவும் அக்கறையாக இருக்கின்றனர்.

வன்முறைகள் பரவாமல் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக இருதரப்பினரும் உறுதிமொழி தந்துள்ளனர். நிலைமை மேலும் மோசமடையாது எனக் கருதுகின்றோம்.



நெருக்கடி நிலையில் உள்ள யுத்த நிறுத்த உடன்படிக்கையை நடைமுறைப் படுத்துவதில் உள்ள சிக்கல்கள் குறித்து ஆராய்ந்துள்ளோம்.

உடன்படிக்கையைத் திருத்துவதில் இரு தரப்பினரும் அக்கறை காட்டவில்லை. அதிலுள்ள விடயங்களை மேம்படுத்துவதில் இரு தரப்பினரும் நாட்டம் காட்டிவருகின்றனர். சீராக முன்னெடுக்க முனைந்துள்ளனர்.

ஆழிப்பேரலை அனர்த்த பொதுக் கட்டமைப்பு குறித்துப் பேசினோம். நீதிமன்றத்தில் அந்த விடயம் இருப்பதால் அவற்றை குறிப்பிட்டுச் சொல்ல விரும்பவில்லை.

இருதரப்பினருக்கும் இடையில் தகவல் பரிமாற்றங்களை மேற்கொண்டுவருகின்றோம். தொடர்ந்து இருதரப்புக்கும் செய்திகளை வழங்கிக் கொண்டிருக்கின்றோம். அந்த வகையில் குறிப்பிடத்தக்க செய்தி எதையும் இன்று இங்கு எடுத்துவந்ததாகக் கூறமுடியாது.''

- இப்படி விடார் ஹெல்கிஸன் தெரிவித்தார்.

# ஜனாதிபதித் தேர்தலில் வெல்ல ஜே.வி.பியின் ஆதரவு அவசியம்!

## பிரதமருக்கு அஸ்கிரிய பீட செயலர் ஆலோசனை

கண்டி,ஓக.7

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறவேண்டுமானால் ஜே.வி.பியையும் அணைத்துக்கொண்டு செயற்படுவது அவசியம் என பிரதமர் மஹிந்தவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார் கண்டி அஸ்கிரிய பீடத்தின் செயலாளர் பேராசிரியர் வண.வரகாமுக தம்மாலோக்க தேரர்.

'எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் உங்களை எதிர்க்கும் பொருட்டு இப்பொழுதே பலர் தயாராகி வருகின்றனர். இவ்வாறான ஒரு நிலையைச் சமாளிப்பதற்கு, உங்களோடு ஒன்றாக ஆட்சியில் இருந்துவிட்டுப் பின்னர் வெளியேறியவர்களையும், அணைத்துச் செல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.' - என்றார் தம்மாலோக்க தேரர்.

ஸ்ரீ.ல.சு.கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்பட்டிருக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், பிரதமர் வேட்பாளராகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் அநுரா பண்டார நாயக்கவும், அஸ்கிரிய பீடத்திற்கு நேற்றுமுன்தினம் சென்று மகாநாயக்கரைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றனர்.

பீடாதிபதியின் சார்பில் அவர்களை ஆசீர்வதித்துப் பேசும்போதே தம்மாலோக்க தேரர் மேற்கண்டவாறு கூறினார்.

அஸ்கிரிய பீடாதிபதி வண.உடுகம ஸ்ரீ புத்தரக்கித்த தேரர் தலைமையிலான குருமார் பிரித் ஓதினர். அங்கு உரையாற்றிய தம்மாலோக்க தேரர் மேலும் கூறியதாவது:-

பண்டாரநாயக்க குடும்பம் இந்நாட்டின் அரசியல் அரங்கில் முக்கிய இடம் வகிக்கின்றது. ஸ்ரீ.ல.சு.கட்சியின் சார்பில் ஜனாதிபதிப் பதவிக்கு நியமிக்கப்பட்டிருக்கும் நீங்கள் அப்பதவிக்குத் தெரிவானதும் இந்த நாட்டின் பாதுகாப்பிற்கும் இறைமைக்கும் உரிய சேவையைப் புரியப் பணிக்கப்படுவீர்கள். அவ்வேளையில், அனைத்து மக்களின் நலனையும் பேணுவது உங்கள் கடமை.

'ஹெல்பிங் அம்பாந்தோட்டை' சர்ச்சையை முன்வைத்து உங்கள் மீது சேறு பூச எடுக்கப்பட்ட நடவடிக்கையை மக்கள் நன்றாகப் புரிந்துகொண்டு அவற்றை ஒருபுறம் ஒதுக்கிவிட்டனர். அனைத்துப் பணிகளுக்கும், சவால்களுக்கும் முகம் கொடுக்கக்கூடிய தைரியம் உங்களிடம் உண்டு என்பதை பௌத்த குருமார்களாகிய நாம் நன்கு புரிந்துவைத்துள்ளோம்.

இந்த வகையில் இந்த நாட்டில் 23ஆண்டுகளாகத் தொடர்ந்த யுத்தத்தின் விளைவுகளை நாம் அறிவோம். இந்தப் பிரச்சினையோடு ஒட்டிய, இனப்பிரச்சினைக்குத் தகுந்த தீர்வைப் பேச்சுகள் மூலம் காண்பதே இன்றைய தேவையாகும். எனவே, அதற்குத் தீர்வு காண அஞ்சாது செயற்படுங்கள்- இப்படி அவர் தெரிவித்தார். (எ-க)

# செல்வாக்குள்ள பெண்களில் சந்திரிகாவுக்கு 25ஆவது இடம்



லண்டன்,ஓக.7

உலகில் செல்வாக்குள்ள பெண்களின் பட்டியலில் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க 25ஆவது இடத்தில் உள்ளார்.

'போர்ப்ஸ்' என்ற பத்திரிகை செல்வாக்குள்ள பெண்களின் பட்டியலை ஆண்டு தோறும் வெளியிட்டு வருகின்றது. ஆட்சி அதிகாரத்தில் உள்ள பெண்கள் மட்டுமே இதில் இடம்பெறுவார்கள். கட்சித் தலைமை போன்ற பதவிகளில் உள்ளவர்கள் பெயர் இதில் இடம்பெறாது.

இந்த ஆண்டுக்கான பட்டியலில் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொண்டலிசா ரைஸ் முதலிடம் பெற்றுள்ளார். சீனாவின் துணைப் பிரதமர் வூயி இரண்டாம் இடத்திலும் உக்ரைன் பிரதமர் மூன்றாம் இடத்திலும் உள்ளனர்.

அமெரிக்க முன்னாள் அதிபர் கிளின்டனின் மனைவியும் செனட் உறுப்பினருமான ஹிலாரி கிளின்ரன் கடந்த ஆண்டு நான்காவது இடத்திலிருந்தார். இவர் இம்முறை 46ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

கடந்த ஆண்டு மூன்றாவது இடத்திலிருந்தவரான இந்திய காங்கிரஸ் கட் சித் தலைவி சோனியாவின் பெயர் இம்முறை பட்டியலில் இடம்பெறவில்லை. (ஓ)

## உதாவாக்கு

உனக்கு தேவையான எல்லா வலிமையும் உதவியும் உனக்குள்ளேயே உள்ளன.

-சுவாமி விவேகானந்தர்.

## நாளை

ஆடி 23
திங்கட்கிழமை
08.08.2005
திதி: திருதியை
பிற்பகல் 02.23 வரை
நட்சத்திரம்: பூரம்
பாற்பகல்: 12.31 வரை
சுபநேரம்: 12.04 - 01.34
ராகுகாலம்: 07.34 - 09.04
(யாவும் பழைய நேரப்படி)

# உயர்நீதிமன்றின் கருத்துக்கு முரணாக தேர்தல் ஆணையர் நடந்தால் அவமதிப்பே!

## இப்படிச் சொல்கிறார் ஜனாதிபதியின் பேச்சாளர்

கொழும்பு, ஓக.7

ஜனாதிபதித் தேர்தலை எப்போது நடத்துவது என்பது தொடர்பாக உயர் நீதிமன்றம் வெளியிடும் அபிப்பிராயத்திற்கு முரணான வகையில் தேர்தல் ஆணையாளர் செயற்பட்டாரானால் அவர் நீதிமன்றத்தை அவமதித்தவராகவே கருதப்படுவார் என ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் நேற்று 'உதயனு'க்குக் கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலை எப்போது நடத்துவது என்பது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உயர் நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தைக் கோரியிருக்கிறார். அது தொடர்பாகக் கருத்து வெளியிடும்போதே ஹரீம் பீரிஸ் மேற்கண்டவாறு கூறினார். அவர் இதுபற்றி மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதித் தேர்தல் எப்போது என்பது பற்றி தமக்கு அறியத் தருமாறு ஜனாதிபதி உயர்நீதிமன்றத்தின் கருத்தைக் கோரியிருக்கிறார். விரைவில் நீதிமன்றின் அபிப்பிராயம் வெளியிடப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. உயர்நீதிமன்றத்தின் அந்த அபிப்பிராயப்படி தேர்தல்கள் ஆணையாளர் செயற்படுவாரென்றே நாம் நம்புகிறோம். அவ்வாறில்லாது அவர் செயற்பட்டாரானால் உயர்நீதிமன்றத்தை தேர்தல்கள் ஆணையாளர் அவமதித்தார் என்பதற்கானவே அது அமையும்.

-இவ்வாறு ஜனாதிபதியின் பேச்சாளர் மேலும் கூறினார்.

(எ-க)

# ஈ.பி.டி.பி. அலுவலகம் மீது வியாழன் இரவு கிரனேட் வீச்சு!

கொழும்பு, ஓக.7

ஈ.பி.டி.பியின் கொழும்பு அலுவலகம் மீது கடந்த வியாழனிரவு கிரனேட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தில் அலுவலகத்துக்குச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என நாரஹேன்பிட்டிப் பொலீஸார் தெரிவித்தனர்.

கொழும்பு பார்க் வீதியில் உள்ள ஈ.பி.டி.பியின் தலைமை அலுவலகத்தின் மீதே இரவு 11 மணியளவில் கிரனேட் வீசப்பட்டுள்ளது. அலுவலகத்தின் முன் பகுதியில் பலகையால் அமைக்கப்பட்ட அறையொன்றுக்கு குண்டுச் சிதறல்களால் சிறிய சேதம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் இடம்பெற்றபோது அந்த இடத்தில் எவரும் இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. பொலீஸாரும், ஈ.பி.டி.பி. உறுப்பினர்களும் அலுவலகத்தைச் சுற்றிப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர். எனினும், அலுவலக வளவில் குண்டு வெடிக்கும் வரை யாருக்கும் எதுவும் தெரிந்திருக்கவில்லை எனப் பொலீஸார் தெரிவித்தனர். நாரஹேன்பிட்டி பொலீஸார் இது பற்றி விசாரணை செய்துவருகின்றனர். (எ-க)


## கணபதி ஜோதிட நிலையம்

பண்டிட் ஐயப்ப சாஸ்திரி

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார். இவர் கைரேகை மூலம் நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், விவாகப் பொருத்தம், கல்வி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, நோய் போன்றவற்றிற்குப் பரிகாரம் கூறுவார். ஒரு முறை சந்தியுங்கள்.

தொடர்பு: **SHANJAEYA REST HOUSE,**
NO.5, RAKKA ROAD (ICRC Office அருகில்),
JAFFNA.T.P.: 077 9173940. (38492)(21-11-17)


## திருக்குறள் வினாடி வினாப் போட்டி

யாழ்ப்பாணம்,ஓக.7

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியின் நிறுவுநர் அமரர் மழவராயர் கந்தையா நினைவாக யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் உயர்தர வகுப்பு மாணவர்களிடையில் நடத்தப்படும் திருக்குறள் வினாடிவினாப் போட்டியின் இறுதிப் போட்டிகள் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக பேராசிரியர் அ.சண்முகதாஸ், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசா, கல்லூரியின் பழைய மாணவர் ஆவரங்கால் க.சின்னத்துரை ஆகியோரும் கலந்துகொள்வர்.

இறுதிப் போட்டியில் பங்கேற்கும் பாடசாலைகளின் விவரம் வருமாறு

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி, கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி.(எ-203)

## பாணின் விலை ரூ.21 ஆக நிர்ணயம்

நேற்று சனிக்கிழமை தொடக்கம் ஒரு பாணின் விலை 21 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

மாவின் விலையும் பாண் தயாரிப்பதற்குத் தேவையான சில உபபொருள்களின் விலையும் அதிகரித்தமையே பாணின் விலையேற்றத்திற்குக் காரணம் என்றும் - சங்கம் அறிவித்துள்ளது.(எ-202)

## பாலர் விளையாட்டு விழா

உரும்பிராய் மேற்கு இளைஞர் சனசமூக நிலைய பாலர் பாடசாலை கல்வி முன்னேற்றக் கழகத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று பி.ப. ஒரு மணிக்கு நிலைய முன்றிலில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் கே.சிவநேசனும், கௌரவிருந்தினராக யாழ். மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் வி.மாதுளனும் சிறப்பு விருந்தினர்களாக வலி. கிழக்கு பிரதேசசபை செயலாளர் ரி.நடராசா, கிராம அலுவலர் வி. சந்திரசேகரம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஏ-86)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

மனோகரன் - அஜந்தா தம்பதியினரின் செல்வப் புதல்வி



அபிஷான்யா

**ம.அபிஷான்யா**

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (07-08-2005) ஞாயிற்றுக்கிழமை இத்தாலியில் உள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.
இவரை அன்பு அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, பாட்டி, பாட்டன், சித்திமார், சித்தப்பாமார், ஆசைமாமா மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் நயினை நாகபூஷணி அம்மன் அருள்பெற்றுப் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென மனமார வாழ்த்துகின்றார்கள்.

(33566) (24)

*தாத்தா, அம்மம்மா.*
*நுணாவில் சந்தி, சாவகச்சேரி.*


# வேடிக்கை வெளியீட்டு விழா

வேதனையில் வாழும் மக்களிற்கு வேடிக்கை காட்டிட வருகிறது...

யாழ் மண்ணிலிருந்து பல்சுவை இலக்கிய,வாசக நெஞ்சங்களின் தேடலைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் வாரம் விட்டு வாரம் இரு வார பல்சுவை இதழாக வெளிவர இருக்கிறது




வேடிக்கை.

இடம்:-
நாவலர் கலாசார மண்டபம்,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

காலம்:-
மு.ப. 10 மணி. 07-08-2005
இன்று (ஞாயிற்றுக்கிழமை)




பிரதம விருந்தினர்
கலாநிதி. க. குணராசா,
செங்கை ஆழியான்
(மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.)

சிறப்பு விருந்தினர்
பிரதம ஆசிரியர்கள்
(உதயன், நமது ஈழநாடு, வலம்புரி, யாழ்.தினக்குரல், பாதுகாவலன்)

அனைவரும் வருக! ஆதரவு தருக !!
'வாசிக்கத் தெரியாதவன் - வாழத் தெரியாதவன்'



இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்

ரோயல் குளுக்கோஸ்

100% சுத்தமானது!
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல் ரோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்!

Packed By:-
ROYAL INDUSTRIES
COLOMBO 12
☎:0777-277670

அனைத்துப் பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப்பூங்கா,
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 2567.
(C-43760)


## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

ஈழ மண்ணில் 20 - 07 - 1961



ஜேர்மனியில் 29 - 07 - 1995

**தம்பிராசா ஆனந்தராசா**

திதி: பூர்வபக்கத் துதியை (07.08.2005)

ஆனந்தா! ஆண்டுகள்,பத்துச் சென்றதையா
உன் நினைவு என்றும் அகலவில்லை
நித்தம் நித்தம் எமைவதைக்கும் உன் நினைவுகள்
என்றுமே அழியாது!

அன்னங்கை,
கோண்டாவில்.

- குடும்பத்தினர்.

(38576) (39)

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

உதயம் 07 - 06 - 1927



அஸ்தமனம் 08 - 07 - 2005

**திருமதி இலங்கநாதர் பாக்கியம்**

திதி: துதியை

எம்மை வளர்த்து ஆளாக்கிய அன்புத் தெய்வமே!
உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
காளி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரது அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (07.08.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகலில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அன்னாரது ஆத்ம சாந்திப்பிரார்த்தனையில் கலந்து கொள்வதோடு, அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!*

சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு.

- மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

(8-44438) (39-21-11-17)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்வரட்ணம் கண்மணி



கே.கே.எஸ். வீதி, கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வரட்ணம் கண்மணி அவர்கள் 03.08.2005 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்வரட்ணத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னப்பொடியர்- பூமணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னர்-இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும் கலையரசி (ஹொலண்ட்), காலஞ்சென்ற சிறீதரன் (சுவிஸ்), கலைவாணி, பிரபாகரன் (கனடா), ஜெஜிகரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் யோகராஜா (ஹொலண்ட்), நந்தினி (சுவிஸ்), சுதாகரன், உமா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் கரியாசினி, கம்சிகா, ஆர்த்திகா, லஜிந்தினி, லதுசாயினி, பிரித்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நடராஜா, சிவகாமசௌந்தரி, செல்வரட்ணம் (ஜேர்மனி), சங்கரராஜா, மகேந்திரம் (ஜேர்மனி), பாஸ்கரன் (ஜேர்மனி), இரத்தினேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2005) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ.செல்வரட்ணம்
(கணவர்).

கே.கே.எஸ்.வீதி,
கோண்டாவில் மேற்கு.

(38575)(11-17-21)

# புத்த ஞாயிறு என்று தமிழர்களால் போற்றப்பட்ட புவிக்குப் புதுவழி காட்டிய கௌதமர்

திருகோணமலை நகரில் நிறுவப்பட்ட புத்தர் சிலை விவகாரம் நீண்டுகொண்டே செல்கிறது. இணக்கமான தீர்வு எதுவும் கிடைப்பதற்கான எந்தவித அறிகுறியும் காணப்படவில்லை.

பேருந்து நிலையத்திற்கு அருகில் மாசுபடிந்த சுற்றாடலில் மாசற்ற புத்தர் பெருமானின் சிலையை நிறுவி நாட்டையே இரத்தக்களறியில் ஆழ்த்துகின்றது பௌத்த சிங்களப் பேரினவாதம். மொழி, இனம், மதம் கடந்த நிலையில் புத்தபெருமான் உயர்ந்த மெய்யியல் அறிஞராக - தத்துவஞானியாக -விளங்கினார் என்பதைப் பேரினவாதிகள் உணரமாட்டார்களா?



கௌதம புத்தர் மறைந்து 2500 ஆண்டுகளை நினைவுகொள்ளும் முறையில், "ஸ்ரீலங்கா" ஏப்ரல் - மே இதழில் 1956 ஆம் ஆண்டு (ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்கு முன்) இக்கட்டுரை வெளிவந்தது. புத்தரின் சிறப்பையும் தமிழர்கள் அவரை எவ்வாறு மேனிலை வைத்து நோக்கினர், துதித்தனர் என்பதனையும் இக்கட்டுரை தொட்டுக்காட்டுகின்றது. அக்காலத்தில் பெரிதும் விரும்பி வாசிக்கப்பட்ட 'ஸ்ரீலங்கா' மாத சஞ்சிகையின் ஆசிரியராக விளங்கியவர் தமிழறிஞர் குல.சபாநாதன் .பேணி வைத்திருக்க வேண்டிய பல அரிய கட்டுரைகள் அந்தச் சஞ்சிகையில் வெளியாகின. இங்கு மீள்பிரசுரமாகும் 'புவிக்குப் புதுவழிகாட்டிய புத்தர்' என்றதலைப்பில்வெளியானகட்டுரையை எழுதியவர் **மா.க.ஈழவேந்தன்** (இப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்).

**1956** ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி உலக வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய பெருநாள், திருநாள் என்றெல்லாம் குறிப்பிடலாம். இத்திருநாளை உலகிடை மக்கள் மட்டுமன்றி உலகில் வாழும் உயிரினங்கள் யாவும் கொண்டாடவேண்டும். ஏனெனில், இத்திருநாளில்தான் உலகின் உயிரினங்கள் அனைத்தும் பிறவிப் பெருங்கடல் நீந்தி உய்யும் வழி உணர்த்திய புத்தர் மறைந்த புனிதநாளாகும். 1956ஆம் ஆண்டு மே மாதம் 23ஆம் திகதியுடன் புவிபோற்றும் புத்தர் மறைந்து இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகள் நிறைவேறுகின்றன. புவிக்குப் பொது நெறி போதித்து மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இனிதாய் வாழ்ந்த புத்தர் மறைந்த நாளைப் புத்த நெறியினர் மட்டுமன்றி மற்றைய நெறியினரும் மனமொருமித்து மங்கா மகிழ்ச்சியுடன் கொண்டாடவேண்டும்.

அப்பொழுதுதான் புவியிடை மக்களிடம் ஒரு புத்துணர்ச்சியும் புதுமலர்ச்சியும் ஏற்பட முடியும். ஏன்! இன்று மக்களிடை நிலவும் புறப்பகையும் உட்பகையும்கூடப் புதைக்கப்பட்டு உடன்பிறந்தோர் போல் ஒன்றுபட்டு வாழவும் வழி ஏற்படுமெனின் மிகையாகாது.

அறம் குன்றி மறம் தலைதூக்கும் காலங்களில் மன்பதையை உய்விக்கச் சான்றோர் தோன்றிச் சாகும் வரையும் சலியாது ஓயாது உழைத்துத் தம்பெயரை நிலமிசை நீடுவாழச் செய்து தம் உயிர் நீத்தனர் என்ற செய்திகளை வரலாற்று ஏடுகளில் படித்துள்ளோம். அத்துடன், வாழ்ந்த, வாழுகின்ற வளம் செறிந்த பெரியார் சொல்லவும் கேட்டுள்ளோம். இவ்விதம் காலத்திற்குக் காலம் ஞாலத்தில் சான்றோர் தோன்றுவதற்குக் கடவுளே காரணம் எனக் கழலுவர் சிலர். இல்லை இயற்கையே ஏது என இயம்புவர் மற்றோர். இவ்விதம் இப்பெரியோர் தோன்றுவதற்கு இறைவனோ அன்றேல் இயற்கையோ காரணம் என்ற கருத்துப் போராட்டத்தில் இறங்காது செயற்கரிய பல செய்த செம்மல்கள் சிலர் தோன்றி மறைந்தனர் என்ற மறுக்கமுடியாத உண்மையை ஏற்றுக் கட்டுரையின் முதன்மை நோக்கிக் கவனம் செலுத்துவோமாக.

### புத்தம் தத்துவமா அன்றேல் சமயமா?

உலகில் பெருமக்கள் பலர் தோன்றிப் பல அறிவுரை வழங்கினர். பல ஆக்கவேலைகள் செய்தனர். ஆனால், மூவர்தான் தம்பெயரில் முப்பெரும் நெறிகளைத் தோற்றுவிக்கத் துணை புரிந்தனர். முகமது நபியின் பெயரில் முகமதியம் தோன்றியது. கிறிஸ்துவின் பெயரில் கிறிஸ்துவம் தோன்றியது. புத்தரின் பெயரில் பௌத்தம் தோன்றியது. இம் மூன்றையும் சமயங்கள் எனப் பொதுவாக நாம் அழைத்தாலும், இறுதியாகக் குறிக்கப்பட்ட பௌத்தத்தைச் சமயம் என அழைப்பது அவ்வளவு சரியல்ல என அறிஞர் அறைகின்றனர். இறைவனுக்கும் மக்களின் இன்னுயிர்க்கும் உள்ள தொடர்பை உணர்த்தி அந்த இறைவனை அடையும் வழியினைக் காட்டி நிற்பது சமயம் எனச் சமயவாதிகள் வாதிப்பர். இந்த அடிப்படையில் வைத்து ஆராயின், பௌத்தத்தை ஒரு மெய்விளக்க நெறி அல்லது ஒரு தத்துவக் கோட்பாடு (Philosophy) என்று சொல்வதே பொருத்தமுடையது என்பது இக்கட்டுரையாளரின் கருத்து. ஏனெனில், நம் புத்தர் பெருமான் தன்போதனையில் எந்த இடத்திலாவது இறைவன் இருக்கின்றார் என்றோ அன்றேல் இல்லையென்றோ இயம்பவில்லை. இதனை ஆங்கிலத்தில் புத்தரின் உன்னத மௌனம் என்றும் Agenosicism of buddhisim கடவுட் கருத்தற்ற கொள்கை. என்றும் ஆங்கில அறிஞர் அறைவர்.

புத்தரின் வரலாற்றை நானிலத்தார் நன்கு அறிவர். ஆதலால் அதனையிட்டு இங்கு விரிவாக ஆராயாது சுருக்கமாக மொழிவோம். அதன் பின் அவரின் அறிவுரைகள் மக்களுக்கு அன்றும் இன்றும் என்றும் பொன்றாத் துணையாய் விளங்கும் பான்மையினைப் பற்றிச் சிறிது சிந்தையிற் கொள்வோம்.

### பிறப்பும் மண வாழ்வும்

புத்தர் கி.மு.464ஆம் ஆண்டு வட இந்தியாவில் உள்ள கபிலவத்து என்ற இடத்தில் பிறந்தார். இவரின் தாயின் பெயர் மாயாதேவி என்றும் தந்தையின் பெயர் சுத்தோதனர் என்றும் அறியக்கிடக்கின்றது. இவர் சிறுவயதிலேயே உலக இன்பங்களில் பற்றற்றுத் துறவுள்ளம் படைத்து விளங்கினார். இதனை உணர்ந்த இவரின் பெற்றோர் இவரை இவ்வுலக இன்பங்களில் ஈடுபடுமாறு செய்வதற்குத் திருமணமே ஒரு சிறந்த வழியென எண்ணிச் சித்தார்த்தரின் சிந்தை கவர்ந்த ஒரு சிற்றிடையாளை மணக்கும் வாய்ப்பினை அளித்தனர். சித்தார்த்தரும் தம் சிந்தைக்கினிய யசோதரை என்ற எழில் நங்கையைக் காதற்க மணம் செய்தார். இவர்களின் காதற் சேர்க்கையால் கனியமுதாய் இராகுலன் என்ற ஓர் ஆண் குழந்தை தோன்றியது.

### நிர்வாண நிலை எய்தல்

புத்தர் இல்லறத்தில் ஈடுபட்ட விளங்கினாலும் அவரின் உள்ளம் துறவையே நாடி நின்றது. முதுமை எய்திய ஒரு கிழவரின் தோற்றம், பெரும் நோயினால் நொந்துவாடும் ஒரு நோயாளியின் காட்சி, உயிரற்ற உடல் முதலிய துன்பக்காட்சிகள், புத்தனை, துன்புறுத்திச் சிந்திக்கச் செய்தன இவையெல்லாம் உலகின் நிலையாமையும் துன்பம் நிறைந்த தன்மையையுமே புலப்படுத்துகிறதென எண்ணிய புத்தர் தன் அன்புக் காதலியையும், தன் அருமை மகனையும், தன் அரசியல் வாழ்வையும் துறந்து நாடு நகரினை விட்டு நீங்கிக் காட்டை அடைந்தார். அங்கு சில துறவுகளுடன் சேர்ந்து கடுந்தவம் புரிந்தார். ஆனால், உணவு அருந்தாது உடலினையும் உயிரினையும் வாட்டிச் செய்யும் தவம் நன்மை பயக்காதெனக் கருதிய சித்தார்த்தர் சிறிது உணவு உட்கொண்டார். இதனைக் கண்ட இவருடன் வாழ்ந்த துறவிகள் அவரை விட்டுப் பிரிந்தனர். ஆனால், நம் புத்தர் விடாமுயற்சியை மேற்கொண்டு அரச (போதி) மரத்தடியில் தனது முப்பத்தைந்தாம் அகவையில் நிர்வாண நிலை எய்தினார்.

### பணியும் மறைவும்

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" எனக் கருதிய புத்தர் தாம் பெற்ற அப்பேரின்ப நிலையினை மாந்தருக்கு உணர்த்தும் நோக்குடன் ஊர் ஊராகச் சென்று மக்களுக்கு அறிவுரைகள் வழங்கினார். இவரின் உண்மை ஒளி பொருந்திய அறிவுரைகளைக் கேட்ட மக்கள் பலர் இவரின் நெறிவழி நின்று ஒழுகினர். இவ்விதம் அறிவுரைகளும் அன்புரைகளும் வழங்கி மக்களின் பிறவிப் பெருங்கடல் நீந்த வழிவகுத்துத் தனது எண்பதாவது வயதில் இன்னுயிர் துறந்து பரி நிர்வாண நிலை எய்தினார். இன்று இவர் பெயரில் எழுந்த புத்த நெறியை நாற்பது கோடிக்கு மேற்பட்ட மக்கள் தழுவி நிற்கிறார்களாயின் இவரின் பேரருட் திறன்தான் என்னே!

### சீர்திருத்தச் செம்மல்


புத்தர் தம் இளமையில் வேதநெறியைத் தழுவி வந்தாலும் நிர்வாண நிலை எய்திய பின் வேத நெறியைத் தழுவ மறுத்தார். அத்துடன் வேத நெறியில் பிராமணர்களின் ஆதிக்கம், சாதிக்கட்டுப்பாடு, சமயச்சடங்குகள் உயிர் பலியிடுதல் முதலிய ஊழல்களை எதிர்த்துப் போராடினார். பிறப்பொக்கும் எல்லா உயிருக்கும் என்ற கூற்றில் புத்தருக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது. அத்துடன், சடங்குகளாலும் உயிர்பலி இடுவதாலும் ஒருவர் செய்த தீவினைகள் தீரும் என்று எண்ணுவது முற்றும் மடமை என்று மொழிந்தார். ஒருவர் தன் தீவினையில் இருந்து விடுபடவேண்டுமாயின் தன்னைத்தானே திருத்திக்கொள்வதால் அன்றி வேறுவழிகள் அவருக்குப் பயன் அளியாது என்பது புத்தர் கருத்து. மற்றும் உயிர்பலியிடுதல் எந்த அறிவுடையவனும் ஏற்கமுடியாத மறச்செயல் என மொழிந்தார். உயிர்களை ஆக்கும் ஆற்றல் அற்ற நாம் எப்படி உயிர்களை அழிப்பதற்கு உரிமையுடையவர்களாவோம் என்பது அவர் கேள்வி. இதைப் புத்தர் மொழிவதாக நம் கவிமணியவர்கள் தன் , ஆசிய சோதி என்ற நூலில் கருணைக் கடல் என்ற பகுதியில் -

'வாழும் உயிரினை வாங்கிவிடல் - இந்த
மண்ணில் எவர்க்கும் எளிதாகும்
வீழும் உடலை எழுப்புதலோ - ஒரு
வேந்தன் நினைக்கினும் ஆகாதையா!'

என்று உள்ளத்தை உருக்கிச் சிந்தனையைக் கிளரும் முறையில் கூறியுள்ளார். 'கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்' என்றார் நம் வள்ளுவப் பெருந்தகை... ஆம்! இன்றும் எல்லா உயிரும் புத்தரைக் கைகூப்பித் தொழுவதற்கு இதுவும் ஒரு காரணம் போலும்.

### அறிவிற்கு அடிபணிதல்

புத்தரும் நம்வள்ளுவர் போல் அறிவுக்கண் கொண்டே அனைத்தையும் ஆராய்ந்தார். வேறு சொற்களில் விளம்பின் வெறும் உணர்ச்சிக்கு அவர் அடிமையாக மறுத்துவிட்டார் . தன் உள்ளத்திற்கு உண்மையெனத் தோன்றியவற்றையே ஒளிப்பு மறைப்பு இன்றி மக்களுக்கு எடுத்துரைத்தார். அதே நேரத்தில் தன் அறிவிற்கு எட்டாத சில பொருள்கள் (விடயங்கள்) இருப்பின் அவற்றைப்பற்றித் தனக்குத்தெரியாதெனக் கூற, அவர் என்றும் பின்வாங்கியது இல்லை. எடுத்துக்காட்டாக இறைவன் உண்டா இல்லையா என்பதைத் தன்னால் ஒன்றும் கூறமுடியாது என்று விட்டார். 'எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்றார் நம் பெருநாவலர். இதே கொள்கையைத் தான் நம் புத்தரும் கொண்டு



விளங்கினார். புத்தர் பலமுறை தான் கூறு வன அனைத்தையும் அப்படியே ஏற்கவேண்டாம். அவை உங்கள் அறிவிற்கு உண்மையெனத் தோன்றினாற்தான் ஏற்கவும் எனத்தன் அடியார்க்கு (சீடர்களுக்கு) எடுத்துரைத்ததைப் பௌத்த நூல்களைப் புரட்டிப் பார்ப்போர் நன்குணர்வார்.

புத்தரின் வாய்வியல் (logic) முறையைப் போற்ற வந்த பாரத முதலமைச்சர் ஜவகர்லால் நேரு அவர்கள் தன் 'இந்தியாவைக் கண்டு பிடித்தல்' (Discovery of india) என்ற நூலில் பின்வருமாறு கூறுகின்றார். சிக்கல் நிறைந்த போலித் தத்துவத்தில் சிக்கி நின்றோர்க்கு புத்தரின் ஆராய்ச்சி முறை மலைமீதிலிருந்து வரும் மந்த மாருதம் போலப் புத்துயிரளிக்கின்றது. **His whole approach comes like the breath of the fresh wind from the mountains after the stale air of meta physical speculation.**

### பிறவிப் பெரும் பிணி

'பிறந்தோர் உறுவது பெரும் பேர் துன்பம், பிறவார் உறுவது பெரும் பேர் இன்பம்' என்பது புத்தர்கொள்கை. துன்பம் நிறைந்ததும் நிலையற்றதுமான இவ்வுலக வாழ்வில் எப்பொழுதும் பற்றற்ற நிலை ஏற்படுகிறதோ அப்பொழுதுதான் பிறப்பு இறப்பற்ற நிலையை எய்த முடியும் எனப் புத்தர் கூறுகின்றார். புத்தநெறி பன்னிரண்டு சார்புகளாலேயே (காரணங்களாலேயே) பிறப்பு, இறப்பு உண்டாகின்றது என்று கூறுகின்றது. அவையாவன: பேதைமை, செய்கை, உணர்வு, அருவுரு, வாயில், ஊறு, நுகர்வு, வேட்கை, பற்று, பவம், தோற்றம், வினைப் பயன் எனப்படும். இவற்றை

'பேதைமை செய்கை உணர்வே அருவுரு
வாயில் ஊறே நுகர்வே வேட்கை
பற்ற பவமே தோற்றம் வினைப்பயன்
இற்றென வகுத்த இயல்பீராறும்
பிறந்தோர் அறியில் பெரும்பேறு அறிகுவர்
அறியார் ஆயின் ஆழ்த்ர கறிகுவர்'

என மணிமேகலையில் ஆசிரியர் சாத்தனார் சாற்றுகின்றார்.

### பிறவிப்பிணி நீக்கும் வழி

புத்தர், மக்கள் பிறவிப் பெரும் பிணியில் இருந்து விடுதலை பெற்று நிலையான வீடு பேற்றை அன்றேல் நிர்வாண நிலையை எய்துவதற்கு நான்கு உண்மைகளை உணரல் வேண்டுமென மொழிந்தார். (க) பிறவியே பெருந்துன்பம் (துக்கம்),(உ) இத்துன்பத்திற்குக் காரணம் (துக்கோற்பத்தி), (ங)இத்துன்பம் நீக்கும் வாய் துக்க நிவாரணம்), (ச) இத்துன்பம் நீக்கும் வழி (துக்க நிவாரண மார்க்கம்) இறுதியாகக் குறிக்கப்பட்ட துன்பம் நீக்கும் வழி நாம் கைக்கொண்டு

(12 ஆம் பக்கம் பார்க்க)

வெற்றிடம்

போஷாக்கு ஆலோசகர்

இத்துறையில் உங்களால் சிறப்பாகச் செயலாற்ற முடியும் என நீங்கள் நினைத்தால் எம்மோடு இணைந்து, உலகின் முதற்தர உணவு உற்பத்தி நிறுவனம் ஒன்றின் அங்கமாகுங்கள். உலகில் ஏறத்தாள அனைத்து நாடுகளிலுமுள்ள எமது 400 இற்கும் அதிகமான உற்பத்தி ஆலைகளில் 2 இலட்சத்துக்கும் அதிகமானோர் தொழில் புரிகின்றனர். போஷாக்கு எப்போதும் நெஸ்லே நிறுவனத்தின் அத்தியாவசியமான ஒரு துறையாக அமைவதனால் எமது உற்பத்திகளின் தரச்சிறப்பிற்கு நீங்களும் பங்களிப்புச் செய்யலாம். எமது உற்பத்திகள் என்றும் சர்வதேச தரமிக்கவை.

தகைமைகள்

விண்ணப்பதாரிகள் வாலிப வயதினராக இருப்பதோடு விவேகம், நம்பகத்தன்மை, தொழிலொழுக்கம் என்பனவற்றைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும். நெஸ்லே போஷாக்கு உற்பத்திகளின் வியாபார விருத்தியை, வழிகாட்டி நெறிமுறைகளுடன் ஊக்குவிப்பதே உங்களின் பிரதான கடமையாக அமையும். எமது உற்பத்திகளின் போஷாக்குப் பெறுமானங்கள் பற்றிய தகவல்களை வழங்க வல்ல ஒரு நம்பகமான, பெறுமதிமிகு தகவல் வழங்குனராகவும் போஷாக்குப் பெறுமானங்கள் மீது ஆலோசனை வழங்க வல்லவராகவும் நீங்கள் இருக்க வேண்டும்.

விண்ணப்பதாரி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டதாரியாக இருக்க வேண்டும். அத்தோடு சுய ஊக்கம் உள்ளவராகவும், ஆங்கிலம் மற்றும் தொடர்பாடல் திறன் என்பனவற்றில் நல்ல தேர்ச்சியுள்ளவராகவும் இருக்க வேண்டும்.

நாட்டின் வடக்கு கிழக்குப் பிராந்தியங்களில் நீங்கள் சேவைக்கு அமர்த்தப்படலாம். அத்தோடு அதிகம் பயணம் செய்ய வேண்டிய சூழ்நிலை உள்ளதால் சாரதி அனுமதிப்பத்திரம் அவசியம்.


இந்தச் சவால்களை எதிர்நோக்க நீங்கள் தயார் என்றால் உங்கள் விண்ணப்பங்களை ஆங்கிலத்தில் தயாரித்து உங்களின் அண்மையப் புகைப்படம் ஒன்றுடன் 7 நாட்களினுள் எம்மை வந்தடையக் கூடியவாறு கீழுள்ள முகவரிகு அனுப்பி வையுங்கள். விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.

உப தலைவர் - மனித வளங்கள்
நெஸ்லே லங்கா லிமிட்டட்
440, டி.பி. ஜாயா மாவத்த,
கொழும்பு 10.
ஈமெயில்: nestle.careers@lk.nestle.com

குறும் பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரிகள் மட்டுமே தொடர்பு கொள்ளப்படுவார்கள்.

Nestlé உங்கள் ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும்

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 10 - 08 - 1903 | 07 - 08 - 2005 |

## வேலுப்பிள்ளை துரையப்பா

*(தொண்டைமானாறு)*
*திதி: 07.08.2005*

ஆண்டுகள் இரண்டு ஆனது ஐயா!
எத்தனை ஆண்டுகள் ஆனாலும் - உங்கள்
திருமுகம் மறக்கமாட்டோம்!
உங்கள் பிள்ளைகளை நல்வழி காட்டினீர்கள்
நீங்கள் சந்நிதி முருகனின் தொண்டன் ஐயா!
ஐயா எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்களை மறக்கமாட்டோம்!

**உங்கள் ஆத்மா சாந்தி அடைய சந்நிதி முருகனை வேண்டுகின்றோம்.**

தகவல்:
மயில்வாகனம் பரமேஸ்வரி,
தொண்டைமானாறு. (38528)(22-14-42)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## பிரிந்தாவன் கல்லூரி

பெங்களூர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது

A/L பரீட்சை முடிவுகளுக்காகக் காத்திருக்கிறீர்களா?

இந்தியாவில் படியுங்கள்

B.Sc.
B.B.M.
B.C.A. கருத்தரங்கும் அதிலேயே உடன் அனுமதியும்

அல்லது

A/L பரீட்சையில் 2 பாடங்களில் சித்திபெற்றுள்ளீர்களா?

கொழும்பு, ஹில்ரன் ஹோட்டலில் ஓகஸ்ட் 13 இல் கருத்தரங்கு பிந்தியதற்கான பதிவுக் கட்டணம் செலுத்துவதைத் தவிருங்கள்! மேற்குறிப்பிட்ட திகதியிலேயே சேர்ந்துவிடுங்கள்!!

கொம்பனி செக்கிறற்ரேரியல் சேர்விஸஸ் [பிறைவேட்] லிமிட்டெட்
285C 1/1, ஸ்ரான்லி திலகரத்னா மாவத்த, நுகேகொட
தொ.பே. 011 2 854438, 0777 317043

(A-44453)(38-14-42)



150 நாடுகளில் மிகப் பிரபலமான சர்வதேச வாழும் கலை அற நிறுவனம் நடத்தும்.

## இளைஞர் பயிற்சி

**பயிற்சியின் மூலம் கிடைக்கும் பலன்கள்**

மன இறுக்கத்திலிருந்தும், உளைச்சலிலிருந்தும் பூரணமான விடுபாடு, சுய நம்பிக்கையும், சுய மேம்பாடும் அடைய, உடல் வருத்தம், சோர்வு நீங்கி உரம் பெற, முரண்பாடுகளுக்கு தீர்வு கண்டு தக்கபடி நிலைமையை சீர் செய்ய, படைப்பாற்றல் பெருகி ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் செயற்பட, ஆத்ம சக்தியை அறிந்து கொள்ள.

*தகுதி:-* 18 வயது முதல் 35 வயதிற்குட்பட்ட ஆண், பெண் இருபாலரும் இப்பயிற்சியை மேற்கொள்ளலாம்.

*பயிற்சி நாள்கள்:-* 11.08.2005 முதல் 17.08.2005 வரை
*பயிற்சி நேரம்:-* காலை 7.30 முதல் 4.30 மணி வரை
*பதிவு செய்யும் இடம்:-* ஹலோக் வீதி, தேசிய சேமிப்பு வங்கி எதிரில். யாழ் வீதி, மானிப்பாய்
*பதிவு செய்யும் நேரம்:-* தினமும் காலை 9 முதல் மதியம் 2 மணி வரை.

இலவச மதிய உணவுடன்

*மேலும் விவரங்களுக்கு:-* 071 305 5923, 0777 250879, 077 9059549.

**இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்**

## கட்டடம் தேவை

யாழ்.நகர எல்லைக்குள் 3000 சதுரஅடி கொண்ட அலுவலகத்தின் தேவைக்காக 3 அல்லது 4 அறைகளுடனும் கூட்டங்கள் நடத்துவதற்கான வசதிகளுடனும் வாகன தரிப்பிடம், மின்சாரம், நீர்வசதி, மலசலகூட வசதி போன்ற மற்றும் சகல வசதிகளுடனும் அமைந்த கட்டடம் ஒன்று தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.
தொலைபேசி இல.
**021 222 6609**

(சி-44200)(42-14)

# 31ஆம் நாள் நினைவலைகள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16 - 09 - 1929 | 08 - 07 - 2005 |

## திருமதி மனோன்மணி குமாரசாமி (பென்சனர்)

08-07-2005 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்ப ஒளி விளக்கு திருமதி மனோன்மணி குமாரசாமி அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (07-08-2005) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற விருப்பதால் அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஆன்மா சாந்திபெற எல்லாம்வல்ல துறட்டிப்பனை முத்துமாரி அம்பாளின் பாதங்களைப் பிரார்த்திக்கின்றோம்.

'மனோவாசா',
வட்டு.கிழக்கு,
வட்டுக்கோட்டை.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(38540)(26-14-42)

## விமானம் மற்றும் கப்பல் மூலம்

உள்நாட்டு வெளிநாட்டிற்கான சிறியதோ, பெரியதோ, எந்த அளவுகளிலான பொதிகள், கடிதங்களை எந்த நாட்டிற்கும் எந்தநேரமும் குறைந்த கட்டணத்தில் அனுப்பிட

மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு 20% விசேட சலுகை

**லண்டனுக்கான 5 Kg பொதிக்கு 1 Kg க்கான கட்டணம் 500/=**

### திருமுருகன் கொம் நெற்

259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
(Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
(பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310

36, செல்லப்பிள்ளையார் கட்டடம்,
பிரதான வீதி, நெல்லியடி,
கரவெட்டி.
Tel - 021 226 4252
Fax - 021 226 4253

குகன் தொலைத்தொடர்பகம்
166,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
Tel - 021 22 2027
Fax - 021 226 2993

## ஆங்கில டிப்ளோமாபரீட்சை

பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படும் தேசிய ஆங்கில டிப்ளோமா பரீட்சை எதிர்வரும் 15ஆம், 16ஆம் திகதிகளில் யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுனத்தில் நடைபெற உள்ளது.

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் அனுமதி அட்டைகளை எதிர்வரும் 12ஆம் திகதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு பணிப்பாளர் அறிவித்துள்ளார். (8)

## DISTRICT MINE ACTION OFFICE, JAFFNA

மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம், யாழ்ப்பாணம்.

# VACANCY

A vacancy for the Post of Administrative Assistant exists in UN supported Mine Action Office, Jaffna.

Main responsibilities of Administrative Assistant:

- Maintain administration, filling system and all correspondence
- Maintain and update the inventory of all non expendable items
- Maintain administrative control of all consumable items
- Maintain all relevant human resources records
- Maintain cash book
- Liaise with other agencies

Applicants are expected to possess the following:

- Must be a Sri Lankan National and as well as a resident of Jaffna
- Educated up to G C E A/L standard
- Minimum three years of experience in the relevant field
- Competent and experienced in the Micro Soft Office computer package
- Good command of English
- Communication skill in Sinhala would be an advantage

Send in you detailed resume along with name and address of two non related referees to the address given below on or before August 10th 2005. Please indicate "Application for the Post of Administrative Assistant" on the left hand side of the cover.

Technical Advisor
District Mine Action Office
Jaffna

District Mine Action Office, Secretariat, Jaffna.
Telephone: 021-222-3886 email:- dmaojaf@sltnet.lk
மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம், யாழ் செயலகம், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-222-3886 மின்னஞ்சல்: dmaojaf@sltnet.lk

# முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21 - 09 - 1940 | 20 - 07 - 2004 |

## அமரர் கணபதிப்பிள்ளை நமசிவாயம்

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே!
எங்களைத் தத்தளிக்கவிட்டு
எங்கே சென்றீர் ஐயா?
ஏங்கித் தவிக்கின்றோம்
ஆண்டு ஒன்று ஆனாலும்
ஆறாது எம்துயரம்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

*'அம்பாள் அரிசிஆலை',*
*மட்டுவில் மத்தி,*
*சிவன்கோவிலடி,*
*சாவகச்சேரி.*

- குடும்பத்தினர்.

(38573)(42-14)

# "...சொந்த இடங்களை விரைவில் மீட்டு புலிகள் எங்களைக் குடியமர்த்துவர்..."

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாம்களில் இருந்து மக்கள் படும் வேதனைகளை எழுதித் தெரியாது; நேரில் பார்த்தால்தான் தெரியும்.

தொழிலில்லை. கைகளில் பணம் இல்லை. நிவாரண உதவிபோதாது. இருப்பிட வசதி போதாது. அவர்கள் வெட்கத்தை விட்டு - தங்கள் தகைமையை மறந்து வாழ்வதற்காக அலைகிறார்கள்.

ஆண்கள், பெண்கள் என்ன வேலை கிடைத்தாலும் செய்யத் தயார் நிலையில் உள்ளார்கள்.

காரணம் அவர்களை நம்பி சிறுவர், முதியோர், மாணவர், கைக்குழந்தைகள் என பல ஜீவன்கள் இருக்கின்றன. இவர்களைக் காப்பாற்றவேண்டும். அவர்களின் சந்ததிகளாவது சங்கடமில்லாமல் வாழவேண்டும்.

அவர்களுக்குத் தற்போதைய தேவைகள் நிரந்தர வீடு, தொழில் வசதி, கையில் பணம் இவை இருந்தாலே போதும். அவர்கள் தங்கள் வாழ்வை தீர்மானித்துக்கொள்வார்கள்.

பொது நிறுவனங்களும் தொண்டு என்னும் பெயரில் தங்கள் எண்ணப்படி நிவாரணங்களை வழங்குகின்றன. ஒழுங்குமுறைகள் பின்பற்றப்படவில்லை. இதனால், நிவாரணங்கள் ஒரு பக்கமாக - கிடைத்தவர்களுக்கே திரும்பத் திரும்ப கிடைக்கின்றன.

இதனால், பாதிப்புற்றவர்கள் உரிய உதவி

 என. குடிதண்ணீர் பெரல்கள் மூலம் இரு நாள்களுக்கு ஒரு தடவை தருகின்றார்கள். குளிப்பதற்குப் பெரும் கஷ்டமாகவுள்ளது.

முகாம் சூழலில் உள்ள தனியார் காணிகளில் குளிக்கின்றோம். அதுவும் உவர்நீர்.

அந்தக் கிணறுகளுக்குள் சிலர் குப்பை கூளங்களையும் கொட்டுகின்றார்கள். இவை பற்றி நாம் உரிய வர்களிடம் முறைப்பாடு செய்து இதுவரை எவ்வித பிரயோசனமும் ஏற்படவில்லை. எப்படியும் எமது சொந்த இடம் போல் வருமா? எனவும் ஏம்பலிக்கின்றார் பிறேமகுமாரி

**தண்ணீர் வசதி போதவே போதாது!**



**திருமதி சண்முகசுந்தரம் ஜெயமணி (வயது-40)**
**தொழில்:- கடற்றொழில்**
**சொந்தஇடம்:- காங்கேசன்துறைகலங்கரை விளக்கடி.**
**தற்காலிக இடம்:- தம்பசிட்டி இடைத் தங்கல் முகாம்**

1990 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையின்போது கடற்தொழில் போட் உபகரணங்கள் மற்றும் எமது உடமைகள் உட்பட 5 லட்சம் பெறுமதியான இழப்புகள் ஏற்பட்டன.

வடிக்கை விரிவுபடுத்தப்பட்டதைத் தொடர்ந்து வடமராட்சியிலுள்ள எரிச்சம்மன் கோயிலடியில் வந்து தனியார் காணிகளில் தற்காலிக வீட்டை அமைத்து வாழத் தொடங்கினோம்.

நான் வெளிநாட்டில் கூலிவேலை செய்த பணத்தினை மூலதனமாகப் போட்டு காணிச் சொந்தக்காரர் கிராம சேவகரின் ஒத்துழைப்புடன் 40 லட்சம் ரூபா செலவில் பாரிய வீடு ஒன்றைப் புதிதாகக் கட்டி அதில் குடியேறினோம்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் அனைத்தும் அடித்து நொருக்கிச் செல்லப்பட்டு இன்று இந்த இடைத்தங்கல் முகாமில் அகதிகளாக நிற்கின்றோம்.

இந்த வீட்டில் வசதிகள் போதாது வெயில் நேரம் இருக்கமுடியாது. எமக்கு தளபாட வசதிகள் இல்லாததால் பிள்ளைகள் படிக்க முடியாது கஷ்டப்படுகின்றார்கள். குடிதண்ணீர் பெறுவது பெரும் கஷ்டம்.

மேலும், எமக்கு மரணதண்டனைக் கைதிகளுக்கு மரண தண்டனை நிறைவேற்றும் திகதியை நினைவூட்டுவது போல எம்மைக் குடியமர்த்திய நிறுவன உறுப்பினர்கள் நீங்கள் இந்த இடைத்தல் முகாமில் தங்குவது 6மாதம் மட்டும் தான். எனவே, மாற்று வழியைப்பாருங்கள் என அடிக்கடி தெரிவித்து வருகிறார்கள். இது எங்கள் மனங்களைப் பெரிதும் பாதிக்கின்றது.

வீச்சினால் உயரத்தூக்கி எறியப்பட் டேன்.

அதில் எனது இடது கால் எலும்பு முறிந்து விட்டது. இதனால் நடக்கமுடியாத நிலையில் உள்ளேன். தற்போது தமிழீழ விடுதலைப் புலிகள்தான் முச்சக்கரவண்டி ஒன்றுதந்து உதவியுள்ளார்கள்.

வெயில் காலத்தில் இந்தத்தகரக்கொட்டகைகளில் இருக்கமுடியாது. ஒரே நுளம்புத் தொல்லை. நுளம்பு வலைகள் கொடுத்தால் உதவியாக இருக்கும்.

நான் மட்டுமல்ல, எமது வலிகாமம் மக்கள் அனைவரும் தற்போது அனாதைகளாக இடைத்தங்கல் முகாம்களில் படும் அவஷ்தை சொல்லமுடியாது.

இவை அனைத்திற்கும் எங்கள் புலிகள் விரைவில் ஒரு முடிவுகண்டு எங்களை மீண்டும் சொந்த இடங்களில் குடி இருத்துவார்கள் என்ற நம்பிக்கையுடன் உயிர்வாழ்கின்றோம்.

**கடன் தொல்லை ஒருபுறம் காலக்கெடு மறுபுறம்!**



**திருமதி ரவி குணலட்சுமி (வயது-42)**
**5பிள்ளைகளின் தயார்.**
**தொழில் :- கடற்றொழில்**
**சொந்த இடம்:- காங்கேசன்துறை.**
**தற்போதைய இடம்:- தம்பசிட்டி இடைத்தங்கல் முகாம்.**

1990ஆம் ஆண்டு இரா ணுவ ஆக்கிரமிப்பால் கடற்றொழில் உபகரணங்கள் வீட்டு உடைமைகள் வரை 8 லட்சம் பெறுமதியான உடைமைகளை இழந்து வெளியேறி வடமராட்சி வந்து எரிச்சம்மன் கடற்கரையோரமாகத் தனியார் காணிகளில் வீடு அமைத்து வசித்து

# அந்த நம்பிக்கையில்தான் இப்போது அவலத்துக்கு மத்தியிலும் வாழ்கிறோம்!

கள் இன்றி வாடுகின்றனர். இதனை உதவி வழங்கும் நிறுவனங்கள் கவனத்தில் எடுக்க வேண்டும்.

**நிவாரணத்தில் மோசடி முறையிட்டும் பலனில்லை**



**திருமதி பிறேமகுமாரி தவராசசிங்கம் (வயது 43)**
**தொழில்:- கடற்றொழில்**
**சொந்த இடம்:- காங்கேசன்துறை**
**தற்போதைய இடைத்தங்கல் முகாம்:- எரிஞ்சம்மன் கோவிலடி.**

1990ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையின்போது 6 லட்சம் ரூபா பெறுமதியான கடற்றொழில் உபகரணங்கள், வீடு, உடைமைகளை இழந்த நிலையில் எமது சொந்த இடத்தைவிட்டு வெளியேறி, வலிகாமத்தில் பல இடங்களிலும் இருந்தோம்.

1996ஆம் ஆண்டு மீண்டும் இராணுவ நடவடிக்கையின்போது இடம்பெயர்ந்து வடமராட்சி எரிஞ்சம்மன் கோயிலடியில் வசித்துவந்தோம்.

எம்மிடம் எஞ்சியிருந்த பொருள்களை விற்று மீதி கடன்பட்டு போட், எஞ்சின், வலை மற்றும் கடற்றொழில் உபகரணங்களை வாங்கி கடற்றொழிலை ஆரம்பித்தோம்.

ஆழிப்பேரலை திடீரென வந்து தாக்கியதில் எமது அனைத்து உடைமைகளும் பெரும் சேதத்திற்குள்ளாகின. இந்த அனர்த்தத்தினால் எமக்கு ஏழரை லட்ச ரூபா பெறுமதியான சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

ஆழிப்பேரலையின் பின் ஒருமாத காலம் தம்பசிட்டி அ.த.க. பாடசாலை முகாமில் இருந்தோம் பின்பு மீண்டும் சுப்பர் மடத்திற்கு வந்தாம். பொது நிறுவனங்களின் உதவியால் மீண்டும் தற்காலிக வீடு அமைத்து வாழ்ந்து வருகின்றோம். கியூமெடிக்கா நிறுவனம் பிளாஸ்டிக் படகு மட்டும் தந்துள்ளது. ஏனைய உபகரணப் பொருள்கள் தராமையால் எமது தொழிலைச் செய்யமுடியவில்லை. தற்போது கடற்றொழில் செய்பவர்களுக்கு உதவியாக கூலித்தொழில் செய்துவருகின்றோம்.

அப்படியெல்லாம் வாழ்ந்த எமது நிலை யுத்தத்தினாலும் சுனாமியாலும் பெரும் கேவலமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இந்நிலைக்குப் பிரதான காரணம் தொழில் வளம் இன்மையே ஆகும். எனவே, தொண்டுசெய்யும் தொண்டர் நிறுவனங்கள் எமது வாழ்க்கையை ஓரளவாவது வழமைக்குத் திரும்ப எமது தொழில்வளத்திற்கான உபகரணங்களைக் கொடுத்து உதவினால் பெரும் உதவியாக இருக்கும்.

அரிசி, பருப்பு, சீனி, மா போன்றன வழங்கப்படுகின்றன. அதிலும் நிறைய மோசடிகள் வேறு. எம்மவர் முறையீடு செய்தும் பிரயோசனமில்லை.

இடைத்தங்கல் முகாம்களில் 150 குடும்பங்கள் வாழ்கின்றோம். மலசல கூட வசதி போதாது. 4 மலசலகூடங்கள் மட்டுமே உள்

அங்கிருந்து வலிகாமம் பகுதிகளின் பல இடங்களிலும் அலைந்து 1996ஆம் ஆண்டு அங்கிருந்து மீண்டும் இடம்பெயர்ந்து வடமராட் சிக்கு வந்தோம். இங்கு எமது உறவினர்கள் அனைவரும் இணைந்து சுப்பர் மடத்தடியில் தற்காலிக வீடுகள் அமைத்து இருந்த வளங்களைக் கொண்டு கடற்றொழிலை ஆரம்பித்தோம். அவ்வேளை தான் ஆழிப்பேரலை வந்து எமது கடற்றொழில் அனைத்து உபகரணங்களையும் அடித்துச் சென்றது. இதனால் எமக்கு 4 லட்சம் பெறுமதியான இழப்பீடு ஏற்பட்டுள்ளது.

ஒரு மாத காலம் தம்ப சிட்டி அ.த.க.பாடசாலையில் முகாம் வாழ்க்கையை அனுபவித்த பின் தொண்டர் நிறுவனம் ஒன்றினால் தம்ப




## "வடமராட்சி கிழக்கு" இடைத்தங்கல் முகாம் மக்கள் மனங்களில் இருந்து................ 6

சிட்டியில் தற்காலிக முகாமில் தங்கவைக்கப் பட்டுள்ளோம்.

இங்கு தரமான குடிதண்ணீர் கிடையாது. இன்று வரை மூன்று நாள்களாக தண்ணீர்த் தாங்கிகளில் நீர் நிரப்பப்படவில்லை. நாம் அவ்வூர் மக்களின் வீடுகளிலேயே சென்று தண்ணீர் அள்ளி வருகின்றோம். சில வேளைகளில் சுகாதாரச் சீர் கேடான உவர்நீரையும் கடமைக்காக நிறைத்து விட்டுச் சென்று விடுகின்றனர்.

குழாய்க் கிணற்றை ஒரு நிறுவனம் அமைத்துத் தந்தது. இன்று வரை மூன்று தடவை கள் நாம்தான் கூலி கொடுத்துத் திருத்தியுள்ளோம். இன்று வரை சம்பந்தப்பட்ட நிறுவனம் நாம் எப்படி யிருக்கின்றோம் என்று பார்க்கவோ, பேசவோ வரவில்லை.

**இடைத்தங்கல் முகாம் வீட்டில் வெயில் நேரம் இருக்க முடியாது**

திரு.திருமதி ஜெயபாலசிங்கம் (வயது-42)



மேரி.ஜே.எட்வினா (வயது-39)

**4 பிள்ளைகள்**
**தொழில்:-கடற்றொழில்**
**சொந்த இடம்:- காங்கேசன்துறை**
**தற்போதையஇருப்பிடம்:- தம்பசிட்டி இடைத்தங்கல் முகாம்**

1990 ஆம் ஆண்டு இராணுவ ஆக்கிரமிப்பின்போது 15 லட்சம் ரூபா பெறுமதியான உடைமைகளை இழந்த நிலையில் சொந்த வீட்டை விட்டு வெளியேறி வலிகாமத்தின பல பாகங்களிலும் தங்கினோம்.

பின்பு 1996ஆம் ஆண்டு இராணுவ நட

**நுளம்பு வலைகள் அவசரம் தேவை**



**குருநாதபிள்ளை நடராசா (வயது-78)**
**10பிள்ளைகளின் தந்தை**
**தொழில்:- கடற்றொழில்**
**சொந்த இடம் :- காங்கேசன்துறை.**
**தற்போதைய இடம்:- தம்பசிட்டி இடைத்தங்கல் முகாம்.**

1990ஆம் ஆண்டு இராணுவ ஆக்கிரமிப்பால் 8 லட்சம் ரூபா பெறுமதியான கடற்றொழில் உபகரணங்கள் மற்றும் பெறுமதியான உடைமைகளையும் விட்டு இடம்பெயர்ந்து வடமராட்சிக்கு வந்து சேர்ந்துள்ளோம்.

1988ஆம் ஆண்டு நடைபெற்ற ஆடிக் கலவரத்தின் போதும் இடம்பெயர்ந்து பெரும் நட்டத்திற்குள்ளாகினோம்.

இந்தச் சிறிலங்கா அரசபடைகளின் ஆக்கிரமிப்பு மோதலில் எனது மகன்களான ந. கணேசனை 1991ஆம் ஆண்டில் (அப்போது வயது-19), ந.தர்மகுலசிங்கத்தை 1993ஆம் ஆண்டில் (அப்போது வயது- 23) இருவரையும் இராணுவத்தினரின் செல் தாக்குதலில் எனது மனைவி க.செல்வரத்தினம் (வயது -62) 1994ஆம் ஆண்டிலும் பறிகொடுத்தேன்.

இவ்வளவு மனத் துன்பங்களுடனும் பல சிரமங்களுடனும் வடமராட்சியில் வாழ்கின்றோம். எரிஞ்சம்மன் கோவிலடி கடற்கரை யில் உறங்கிக் கொண்டிருந்த போது ஆழிப்பேரலை

வந்தோம்.

எஞ்சி இருந்தவற்றை விற்றும் வட்டிக்குப்பணம் எடுத்தும் இயந்திரம் போன்றவற்றை வாங்கிக் கடற்தொழில் செய்துவந்தோம். இந்த நிலையில் தான் ஆழிப் பேரலை வந்து எமது உடைமைகள் அனைத்தையும் அடித்துச் சென்று விட்டது. எமது சேதம் குறைந்து 8லட்சம்.

இந்த அலை ஆக்கிரமிப்பால் இடம் பெயர்ந்து தம்பசிட்டி அ.த.க. பாடசாலையில் தங்கி ஒரு மாதம் வரை இருந்து விட்டு மீண்டும் எரிசம்மன் கோவிலடிக்குவந்து சேர்ந்த போதும் எமக்கு வீட்டு வசதியோ, பணவசதியோ இல்லை.

எமக்கு எரிபெருள்கள், விறகு போன்றவைக்குப் பெரும் தட்டுப்பாடு.

எமக்குக் கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்படாமையால் நாம் தொழில் செய்ய முடியவில்லை. கடன்தொல்லை ஒரு புறம். இடைத்தங்கல் முகாம்களில் 6 மாதக் கெடு

**சி.சுந்தரலிங்கம்**

மறுபுறம். இந்த நிம்மதியற்ற வாழ்க்கையில் இருந்து மீள முடியுமா என்ற கேள் விக்குறியுடன் வாழ்ந்து வருகின்றோம்.

உயிர் எமது சொந்த இடத்தில் போக வேண்டும் என்று விரும்புகிறோம். எங்களை ஒரு நிம்மதியான நிலையான இடத்திற்கு அனுப்பிவைத்தால் போதும் என்கின்றார் குணலட்சுமி. ✱

உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation
New way of flying
Head office
No.500,Galle Road,
Wellawatte,
Colombo-06
Tel:2505632-3 Fax:2500626
Jaffna office
No.86,PointPedro Road,
Jaffna. Tel:021-2226242
Fax:021-2225600
Branch
No:14,New Market Building
Chavakachcheri
Tel:021-2227979 Fax: 021-2227979
Trinco Office
No.47,Kandy Road,
Trincomalee.
Tel:026-2221519
Fax:026-2221519
யாழ்⇆கொழும்பு யாழ்⇆திருகோணமலை⇆கொழும்பு

# மரண அறிவித்தல்

## திருமதி சரஸ்வதி சோதிநாதன்

கச்சேரியடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கனடாவை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி சரஸ்வதி சோதிநாதன் அவர்கள்04-08-2005 வியாழக்கிழமை கனடாவில்காலமாகிவிட்டார்.

அன்னார் பூபாலி - மாரிமுத்து தம்பதிகளின் அன்பு மகளும் கணபதிப்பிள்ளை சோதிநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பாக்கியலெட்சுமி, வியாழம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சபாநாதன் (பிரான்ஸ்), ரங்கநாதன் (கனடா), ரகுநாதன் (லண்டன்), செல்வநாதன் (சோதி களஞ்சியம், கண்டி வீதி, யாழ்ப்பாணம்), விமலநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும் மறைஞானம், திருஞானம், சிவஞானம், ஸ்ரீஞானம் ஆகியோரின் சிறிய தாயும் புஸ்பஜோதி, விக்னேஸ்வரி, சுகந்தி, உதயகுமாரி ஆகியோரின் பாசமிகு மாமியும் சகானா, பரணிதா, தனுஷியா, கயூர்ணன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும் என்பதையும் யாழ்ப்பாணத்தில் உள்ள சோதிநாதன் செல்வநாதன் என்பவரின் இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படுகின்றது என்பதையும் அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சோதிநாதன் செல்வநாதன் (மகன்)
123, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். T.P.No.: 5655.
(38568)(26-11-14)


**MINISTRY OF PUBLIC HEALTH OF RUSSIAN FEDERATION**
**KURSK STATE MEDICAL UNIVERSITY (KSMU)**
World - Class Education, Research work & Health Care

- + KSMU won the GOLD MEDAL as the BEST Medical University in Russia - 2004.
- + FIRST University in Russia to Commence Medical Programs totally in English Medium.
- + 12 Faculties, 28 affiliated Hospitals with Research Laboratories.

**Pending A/L Results Students also can apply**

- + MEDICINE (MD), Dentistry (DDS), Pharmacy (MSc.Pharm)
- + 56 Medical Specialities in Postgraduate Programs.
- + Recognised by WHO, Sri Lanka Medical Council, (SLMC) British Medical Council (BMC), Fu... etc

Cotact:
*M.Mylashan,*
*Sri Lanka Coordinator - KSMU,*
*No: 02, Thirunelvely Lane,*
*Arasady Road, Kantharmadam, Jaffna.*
E.mail: Ksmu@sltnet.lk
www.ksmu.info
TEL: 0777250555

Our main aim is to protect the Students from exploitation by businessmen & give advice in choosing the right University in Russia. (38565)(26)


## அமைச்சர் சிறிபால புதிய சபை முதல்வர்

சுகாதார அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான நிமால் சிறிபால டி சில்வாவை நாடாளுமன்ற சபை முதல்வராக நியமிப்பதற்கு அரசு தீர்மானித்திருக்கிறது.

ஏற்கனவே இந்தப் பதவியை வகித்து வந்த அமைச்சர் மைத்திரிபால சிறிசேன வேலைப் பளுவின் காரணமாகப் பதவியை இராஜினாமாச் செய்திருந்தார். இதனையடுத்தே அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவை இந்தப் பதவியில் அமர்த்துவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. புதிய சபை முதல்வர் நியமனம் தொடர்பில் அரசின் உத்தியோகபூர்வ அறிவிப்புக் கடிதம் சபாநாயகரிடம் எதிர்வரும் திங்கட்கிழமை கையளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. ·(எ-க)


**திருமணக்கார் வாடகைக்கு**



**திருமணம், சுற்றுலா ஏனைய தேவைகளுக்கு வெள்ளைநிற, சில்வர் நிற புத்தம் புதிய (குளிரூட்டப்பட்ட) நவீன கார் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.**

தொடர்பு:
சிவா வீடியோ லைபிறறி,
இராமலிங்கம் வீதி, முடமாவடி,
(பூங்கனிச்சோலையருகில்), திருநெல்வேலி கிழக்கு.






S-Lon என்றால் PVC குழாய்கள்
ஆனால் எல்லா PVC குழாய்களும் S-Lon அல்ல.

**தரமுயர்ந்த எஸ்-லோன் குழாய்களையே கேட்டு வாங்குங்கள்**

Rediffusion DYR 497/11/04

**எஸ்-லோன் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளதை நிச்சயப்படுத்த தவறாதீர்கள்**

பரம்பரை பரம்பரையாக மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்கும் எஸ்-லோன் பி.வி.சி. குழாய்களும் அவற்றிற்கான பொருத்துக்கள். பீலிகள் முதலிய யாவும் சகல அளவுகளிலும் கிடைக்கின்றன. எனவே, நீங்கள் தரக்குறைவான பொருட்களை வாங்கி ஏமாற வேண்டிய அவசியமே கிடையாது.

உங்களுக்கு நீரக்குழாய்கள், பொருத்துக்கள். பீலிகள் தேவைப்படும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எஸ்-லோனை நாடுங்கள்.

S-lon
என்றும் முன்னணியில்

S-lon இல்லம்

எஸ்-லோன் லங்கா (பிறைவேட்) லிமிட்டட், 7, பிறேபுரூக் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 4792630-4 ∴பெக்ஸ்: 5352741



**வேலையாள்கள் தேவை**

எமது தொலைத்தொடர்பு நிலையத்தில் வேலை செய்யக்கூடிய ஆள்கள் தேவை.
(இருபாலரும் - வயதெல்லை இல்லை)
தொடர்புகளுக்கு :
**அம்பாள் தொலைத் தொடர்பு நிலையம்,**
(38417) (18-21-34-32)
துர்க்கை அம்மன் கோயிலடி, தெல்லிப்பழை.



**கிளி கட்டடப் பொருள் உற்பத்தி விற்பனை**

கொங்கிறீட்டிலான வீட்டுநிலை, கொங்கிறீட் சன்னல், வேலித்தூண்கள், சிமெந்துக்கல், அழகுத்தூண்கள், பூக்கற்கல் வகை, பூச்சாடிகள் என்பன நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
*உங்கள் தேவைக்கு உடனே நாடுங்கள்:*
**கிளிநொச்சி வைத்தியசாலை பின்வீதி, கிளிநொச்சி.**
(கி-44403)



**ஆடி மாத அதிரடி மலிவு விற்பனை**




OCEANICK IMPEX
192, MAIN STREET, COLOMBO 11.
Tel: 2336720, 2327168, Wholesale: 2384131, Fax; 2326961
E.mail: oceanick192@yahoo.com


## அஞ்சலியும் அந்தியேஷ்டி அழைப்பும்



செல்வி
**பொன்னம்பலம் சாந்தா**
(பட்டதாரி மாணவி)

தோற்றம்
16-06-1968

மறைவு
08-07-2005

பதுளையில் பிறந்து பண்புடன் மிளிர்ந்து
சைவ மங்கையர் கழகத்தில் கல்வி பெற்று
இணுவிலம்பதியில் நிரந்தர
வாழ்விடமமைத்து
பட்டப்படிப்பு மாணவியாகத் திகழ்ந்து
வாழ்வு நீத்து வையகம் மறந்து
எம்மை மீளாத் துயரிலாழ்த்திய - எம்
மாமணியே உன்திசை
நோக்கித் தொழுது எம் துயர் கரைப்போம்
அவனருளாலே.

அமரரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் எதிர்வரும் (08-08-2005) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி முதல் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வைத் தொடர்ந்து மதியபோசனம் இடம்பெறும். எமது உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரும் அனைத்து நிகழ்வுகளிலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

'திருப்பதி',
காங்கேசன்துறை வீதி,
இணுவில்.
சே.பொன்னம்பலம்,
பொ.புவனேஸ்வரி.
(38511)(26-11-14)




# விழலுக்கு இறைத்த நீர்



குமார் 15 வருடங்களாக பல கோடி ரூபா செலவில் நடந்த போபர்ஸ் பீரங்கி பேர ஊழல் வழக்கு இறுதியில் விழலுக்கு இறைத்த நீரானது முடிந்த கதை. இதையும் மிஞ்சி விடப்போகிறது தமிழக முதல்வர் ஜெயலலிதா மீதான ஊழல் வழக்கு என்கின்றனர் அவதானிகள்.

ஜெயலலிதா முதல் தடவை தமிழக முதல்வராகப் பதவி வகித்த போது பலகோடி ரூபா ஊழல் என்று குற்றச்சாட்டுகள் எழுந்தன. அவரது 'உடன் பிறவாச் சகோதரி' சசிகலாவும் இவரது குடும்பத்தினரும் கோடி கோடியாகச் சொத்துச் சேர்த்தனர் என்றும் பேச்சு அடிபட்டது. அடுத்து வந்த தேர்தலில் தி.மு.க. தமிழ் மாநில காங்கிரஸ் கூட்டணி பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியைப் பிடித்தது. தமிழக முதல்வரானார் கருணாநிதி. கூட்டணிக் கட்சியான தமிழ் மாநிலகாங்கிரஸ் எதிர்க்கட்சித் தலைமையைப் பிடித்தது. அதனைத் தொடர்ந்து ஜெயலலிதா, அவரது அரசில் அமைச்சர்களாக இருந்தவர்கள், சசிகலா, அவரது குடும்பத்தினர் ஆகியோர்மீது அணிவகுத்தன ஊழல் வழக்குகள். இதில் முன்னாள் அமைச்சர்கள் சிலர்மீதும், சசிகலாவின் உறவினரில் சிலர் மீதும் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டன; அபராதங்களும் விதிக்கப்பட்டன. உச்சக்கட்டமாக ஜெயலலிதாவுக்கும் ஒரு வழக்கில் இரண்டு வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. மேல் முறையீடு செய்தார் ஜெயலலிதா.

அப்போது தேர்தல் வந்தது. கருத்துக் கணிப்புக்களைப் பொய்யாக்கிவிட்டு அ.தி.மு.க. மீண்டும் ஆட்சியைப்பிடித்தது. ஆனால், சிறைத் தண்டனை பெற்ற ஜெயலலிதா முதல்வராக சட்டம் இடம்கொடுக்கவில்லை. ஓ.பன்னீர்ச் செல்வத்தை 'ரப்பர் ஸ்டாம்ப்' முதல்வரக்கினார் ஜெயலலிதா.

அதன்பிறகு ஜெயலலிதா மீதான ஊழல் வழக்குகளை அவருக்கு எதிராகத் தமிழக அரசு நடத்தியது. எதிர்பார்த்ததைப் போலவே ஜெயலலிதா மீதான வழக்குகள் பல வற்றிலும் அவர் குற்றமற்றவர் என்று விடுவிக்கப்பட்டார்.

இறுதியாக ஜெயலலிதா, சசிகலா, அவரது உறவினர்கள் சுதாகரன், இளவரசி, டி.டி.வி. தினகரன் ஆகியோர் வருமானத்துக்கு அதிகமாகச் சொத்துச் சேர்த்தமைகுறித்த வழக்கும், பிரிட்டன் தலைநகர் லண்டனில் ஜெயலலிதாவும், சசிகலாவும் அன்னிய செலாவணியை மோசடிசெய்து ஆடம்பர ஹோட்டலை வாங்கியமை குறித்த வழக்கும் மிஞ்சியிருந்தன.

தற்போது தி.மு.கவின் தோழமைக்கட்சியான காங்கிரஸ் மத்தியில் ஆட்சியைப் பிடித்தது. இதனைப் பயன்படுத்தி ஜெயலலிதா மீதான ஊழல்வழக்குகள் இரண்டையும், கர்நாடக மாநிலத்துக்கு - அங்கும்காங்கிரஸ் கட்சியே ஆளும் கட்சி - மாற்ற பகீரதப்பிரயத்தனம் செய்தது; தி.மு.க. அதில் வெற்றியும் பெற்றது. இப்போது அந்த இரு வழக்குகளும் கர்நாடக மாநிலத் தலைநகர் பெங்களூரில் உள்ள



தனி நீதிமன்றத்தில் நடைபெற்றுவருகின்றன.

இந்த இரு வழக்குகளும் முதலில் தனித்தனியே விசாரிக்கப்பட்டன. அவை இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து விசாரிக்க வேண்டும் என்று ஜெயலலிதா சார்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

தமிழகத்தில் சட்டப்பேரவைக்கான தேர்தல் அடுத்தவருடம் நடைபெறவுள்ளது. அதில் வென்று மீண்டும் முதல்வராவாரா என்பது ஜெயலலிதாவுக்கே சந்தேகமான ஒன்று. இதனால் ஆட்சி அதிகாரத்துடன் உள்ள போதே தன்மீதான கடைசி இரு வழக்குகளிலிருந்தும் மீண்டுவிடத் துடிக்கிறார் அவர். அதனாலேயே இருவழக்குகளையும் சேர்த்து விரைவாக நடத்த அவர் விரும்புகின்றார் என்று கருதுகின்றனர் அவதானிகள். தவிரவும், முதல்வராக இருப்பதால் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தப்பிக்கவும் அவருக்கு வசதிவாய்ப்புண்டு.

ஆனால், தி.மு.க.வோ இரு வழக்குகளையும் தனித்தனியே விசாரித்தால் நாள்களை இழுத்து விடலாம் என்று கணக்குப்போடுவது போல் உள்ளது. அந்த எண்ணத்துக்கு முட்டுக்கட்டையாக இருவழக்குகளையும் சேர்த்து விசாரிக்க வேண்டும் என்ற ஜெயலலிதாவின் கோரிக்கையைத் தனிநீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

ஆனாலும் மனம் தளராத தி.மு.க., அடுத்த காயை நகர்த்தியது. இருவழக்குகளையும் சேர்த்து விசாரிக்கும் தனிநீதிமன்றத்தின் உத்தரவுக்குத் தடைவிதிக்கக்கோரி தி.மு.க.பொதுச் செயலாளர் க.அன்பழகன் சார்பில் இந்திய உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார். இந்த மனுவை விசாரணைக்கு ஏற்ற உயர்நீதிமன்றம் தனிநீதிமன்றத்தில் நடந்து வரும் வழக்கு விசாரணைக்கு இடைக்காலத் தடை விதித்துள்ளது. ஆக, மொத்தத்தில் வளர்ந்து வரும் நாடான இந்தியாவில்- மக்களின் பணம் அரசியல்வாதிகளால் விழலுக்கிறைத்த நீராகிக் கொண்டிருக்கிறது. ✱

# பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு என்று இந்தியாவைப் பற்றிப் பெருமையாகக் கூறுவார்கள் இந்தியர்கள். அந்த நாட்டில் ஜனநாயகத்தின் அத்திபாரமான நாடாளுமன்றத்தில்- ஜனநாயக மரபை காலில் போட்டு மிதிக்கும் சம்பவம் நடந்துள்ளது.

நாடாளுமன்றத்தில் கேலிக்கூத்துகள் மற்றைய நாடுகளில் இடம்பெறாமல் இல்லைத்தான். செங்கோலை எடுத்துக்கொண்டு ஓடியதையும், சபாநாயகர் தெரிவுக்கான வாக்குப்பெட்டி மீது நாடளுமன்ற உறுப்பினர் அமர்ந்திருந்ததையும் கண்டும் கேட்டுமிருக்கிறோம்.

அந்த ரகளைகளில் ஈடுபடுபவர்கள் நாடாளுமன்றத்தின் கடைசி வரிசை உறுப்பினர்கள்- அரசியல் அனுபவமற்றவர்களாகவே பெரும்பாலும் இருப்பார்கள்.

ஆனால், சுமார் 20ஆண்டுகளாக நாடாளுமன்ற உறுப்பினராக உள்ள அமைச்சர் பதவி வகித்த - பலம்பெற்ற ஒரு கட்சியைத் தலைமையேற்று வழிநடத்தும் - ஒருவர் நாடாளுமன்றத்தின் கௌரவத்துக்கு இழுக்கைத் தேடித் தந்துள்ளார் என்பதுதான் வேதனையான விடயம். மேற்கு வங்க மாநிலக்கட்சியான திரிணாமுல் காங்கிரஸின் தலைவியான மம்தா பனர்ஜிதான் அப்படி நடந்துகொண்டார்.

கடந்த வியாழக்கிழமை இந்திய நாடாளுமன்றத்தின் மக்களவையில் மேற்கு வங்க மாநிலத்தில் வங்களாதேஷ் நாட்டினர் குடியேறும் பிரச்சினை குறித்துப் பேசவேண்டும் என்று கோரினார். அப்போது சபையை வழிநடத்தியவர் துணை சபா நாயகர் சரண்ஜித்சிங் அத்வால். மம்தாவின் கோரிக்கையை அவர் நிராகரித்தார்.

திரிணாமுல் காங்கிரஸின் தோழமைக் கட்சியான பாரதிய ஜனதா முதல்நாள்தான் இப்பிரச்சினையை அவையில் எழுப்பியது. அதிலும் எதிர்க்கட்சித் தலைவர் அத்வானி இது பற்றித் தீர்மானம் கொண்டுவந்திருந்தார். அதன்மீது 4 மணித்தியாலங்கள் விவாதமும் நடத்தப்பட்டது. மேலும், சபாநாயகர் சோம்நாத் சட்டர்ஜி, முன்னர் மம்தா இக்கோரிக்கையை எழுப்பியபோது அதனை நிராகரித்திருந்தார்.




காகிதக்கட்டை வீசும் மம்தா

இந்த நிலையில், ஒரே விடயம் குறித்து இரு தடவைகள் விவாதம் நடத்தத் தேவையில்லை என்று கூறினார் துணை சபாநாயகர்.

அப்போது கோபாவேசப்பட்ட மம்தா, இருக்கையிலிருந்து எழுந்து சபாநாயகர் ஆசனம் முன்பாகச் சென்றார். துணைசபாநாயகருடன் வாக்குவாதம் செய்தார். அதற்கு துணை சபாநாயகர் அசைந்து கொடுக்கவில்லை. அவ்வளவுதான்... ஆத்திரத்தில் மதியிழந்த மம்தா கையில் வைத்திருந்த காகிதக் கட்டுகளை துணை சபாநாயகர் மீது வீசியெறிந்தார்.

இதனைக் கண்டு அனைவரும் ஆடிப்போய் விட்டனர். பொறுமை இழக்காத சரண்ஜித் அவையை ஒத்திவைத்தார்.

அரைமணி நேரம் கழித்து சபை மீண்டும் கூடிய போது 'மேற்கு வங்கப் பிரச்சினை குறித்து ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வரவேண்டும்' என்று மீண்டும் மீண்டும் கோரினார் மம்தா. துணை சபாநாயகர் மீண்டும் அதனை நிராகரித்தார்.

கோபம் அடங்காத மம்தா, சபாநாயகர் ஆசனமருகே சென்றார். கையில் வைத்திருந்த துண்டுக் காகிதத்தை சபாநாயகரின் மேசையில் வைத்துவிட்ட ''மக்கள் பிரச்சினை பற்றிப் பேச அனுமதிக்காத போது எனக்கு இங்கு என்ன வேலை? இதோ என் பதவிவிலகல் கடிதம்'' என்று கூறி விட்டுத் திரும்பி நடந்தார்.

யாரும் எதிர்பாராத வகையில் துணிச்சலாகச் செயற்படுபவர் மம்தாபனர்ஜி. ஆவேசப் பேச்சுக்கும் பெயர் பெற்றவர். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர், சபாநாயகர் இருக்கைக்கு முன் அமர்ந்து அவர் போராட்டத்தில் ஈடுபட்டார். அப்போது சபாநாயகராக இருந்தவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பி.ஏ.சங்மா. ஒரு கட்டத்தில் ஆவேசப்பட்ட மம்தா தான் வைத்திருந்த சால்வையை சங்மா மீது வீசினார். ஆனால், அது அவர் மீது படவில்லை. அப்போது கண்டனங்கள் கிளம்பிய போதும் மம்தாவை அசைக்க முடியவில்லை.

ஆனால், இப்போது நிலைமை சற்று மாறியிருக்கிறது. சபாநாயகரான சோம்நாத் சட்டர்ஜி, கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர். மேற்கு வங்கத்தில் அதுவே ஆளும்கட்சி, ஆக மாநிலத்தில் எதிரும் புதிருமாக உள்ள மம்தாவும், கம்யூனிஸ்ட்டுகளும் இதில் விட்டுக்கொடுக்காமல் மோதுகின்றனர்.

மொத்தத்தில் இந்தியாவில் ஜனநாயகம் 'பேச்சுப்பல்லக்கு; தம்பி கால் நடை' என்ற கதையாக உள்ளது. ✱

# சாண் ஏறினால் முழம் சறுக்குகிறது

கூடன் சுமை ஒரு புறம் , அரசியல்வாதிகளின் சித்து விளையாட்டு மறுபுறம் , இடையில் பெருகிவரும் சனத்தொகை என்று கால்களைப் பிடித்து இழுக்க, தொழில்நுட்ப வளர்ச்சியில் உயர்கிறது இந்தியா. எப்படியாவது வல்லரசு அந்தஸ்தைப் பெற்றுவிடவேண்டும் என்ற கனவுவேறு.

இந்த நிலையில்தான், ஐ.நா.பாதுகாப்புச் சபையில் வீட்டோ என்ற தீர்மானங்களை இரத்துச்செய்யும் அதிகாரம் கொண்ட நிரந்தர உறுப்பினர் ஆவதற்கு படாதபாடுபடுகிறது இந்தியா.

ஆழிப்பேரலை அனர்த்தத்தின்போது வெளிநாட்டு உதவிகளை மறுத்துவிட்டு பிற நாடுகளுக்கு உதவியளித்ததும், இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையில் தலையிடுவதும் எனத் தன்னை பலம்மிக்க நாடாகக் காட்ட இந்தியா எடுக்கும் முயற்சிகள் ஓரளவு பயனளித்து வருகின்றன. ஆனால், ஐ.நா.பாதுகாப்புச்சபையில் நிரந்தர உறுப்பினராக இந்தியா மேற்கொண்ட முயற்சி ஆபிரிக்க நாடுகளின் முடிவால் மண் கவ்வியது.

ஐ.நா.பாதுகாப்புச்சபையில் வீட்டோ அதிகாரம் கொண்ட நிரந்தர உறுப்புரிமை பெற இந்தியா, ஜப்பான், ஜேர்மனி, பிரேஸில் ஆகிய நாடுகள் முயற்சிக்கின்றன. ஐ.நா. பாதுகாப்புச்சபையில் அமெரிக்கா, சீனா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகள் நிரந்தர உறுப்புரிமை நாடுகளாக உள்ளன. மேலும் 10 தற்காலிக உறுப்புரிமைகளுக்கு சுழற்சி முறையில் நாடுகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

தற்போது நிரந்தர உரிமை கோரும் நாடுகளுக்கு ஐ.நா.பொதுச்சபையில் பெரும்பான்மை ஆதரவு தேவைப்படுகிறது. பொதுச்சபையில் ஆபிரிக்க நாடுகளின் ஆதரவுகிடைத்தாலே இந்தியாவின் எண்ணம் ஈடேறமுடியும்.

தென் ஆபிரிக்காவில் மகாத்மாகாந்தி கறுப்பின மக்களுக்காகப் போராடியதையும், இந்தியாவுக்கும் ஆபிரிக்க நாடுகளுக்கும் இடையிலான உறவுகளையும் தூக்கிப்பிடித்து ஆபிரிக்க நாடுகளின் ஆதரவைப் பெற இந்தியா முயற்சித்தது.

53 ஆபிரிக்க நாடுகள் அங்கம் வகிக்கும் ஆபிரிக்கக் கூட்டமைப்பு இந்தியாவுக்கு நிரந்தர உறுப்புரிமை வழங்க ஆதரவளிக்க இணங்கியது. இதேசமயம், பாகிஸ்தான், இத்தாலி, சீனா போன்றவை வெளிப்படையாகவும், அமெரிக்கா மறைமுகமாகவும் இந்தியாவுக்கு நிரந்தரஉறுப்புரிமைகிடைப்பதைத்தடுக்கப் போராடின.

இந்த எதிர்ப்பைச் சமாளிக்க, பொருளாதார ஒத்துழைப்பு, பிரதமர் மன்மோகன் சிங்கின் நல்லெண்ண விஜயங்கள் என்று இந்தியாவும் பாடுபட்டது.

கடைசியாக 15 ஆண்டுகளுக்கு வீட்டோ அதிகாரம் தரவேண்டாம், இப்போது நிரந் தர உறுப்புரிமையையாவது தந்துவிடுங்கள் என்ற நிலைக்குக் கீழிறங்கி மன்றாடியது இந்தியா.

ஐ.நாவுக்கு 19சதவீத நிதியுதவியை வழங்கும் ஜப்பான் நிதியுதவி நிறுத்தப்படும் என்று மிரட்ட- இந்தியாவோ ஆபிரிக்க நாடுகளின் ஆதரவுகிடைத்துவிட்டது என்ற நம்பிக்கையில், வளரும் நாடுகளை ஐ.நா.புறக் கணிக்கக்கூடாது என்ற கோஷத்தை முன்வைத்தது.

இந்த நிலையில்தான், ஐ.நா.பாதுகாப்புச் சபையில் வீட்டோ அதிகாரமில்லாத இரு உறுப்பு நாடுகளை மட்டும் மேலதிகமாகத் தற்போதைக்குச் சேர்த்துக்கொள்ளலாம் என்று ஆபிரிக்க நாடுகளின் உச்சி மாநாட் டில் முடிவு செய்யப்பட்டுள்ளது. இரண்டாம் உலகப்போரில் நேச நாடுகளுக்கு எதிராகப் போரிட்டதால் ஜெர்மனியம், ஜப்பானம் ஐ.நா.பாதுகாப்புச்சபையில் இடம்பெற முடியாமல் போனது அனைவரும் அறிந்த விடயம். இப்போது மாறிவிட்ட அரசியல் பொருளாதாரச் சூழ்நிலையில் இந்த இரு நாடுகளும் இந்தியாவைவிட முன்னணியில் உள்ளன. அதனால் இவற்றுக்கே நிரந்தர உறுப்புரிமை கிட்டும் வாய்ப்பு உள்ளது. இதனால் இந்தியாவின் ஆசைகானல் நீராகிவிட்டது.

ஆபிரிக்க நாடுகளின் முடிவு வருத்தமளிக்கிறது. ஆனாலும் அவற்றுடன் பேச்சு நடத்துவோம் என்று கூறியுள்ளார் இந்திய வெளிவிவகாரஅமைச்சர் நட்வர்சிங். நூறு கோடி மக்களைக் கொண்ட இந்தியாவுக்கு ஐ.நா.பாதுகாப்புச் சபையில் உரிய இடம் என்றாவது ஒரு நாள் கிடைக்கும் - என்று தேறுதல் கூறியுள்ளார் இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம்.

எதுஎப்படியோ இந்தியாவின் வல்லரசுக் கனவு சாண் ஏற முழம் சறுக்குவதாகவே உள்ளது. ✱

## பாவியார் போகும் இடம் பள்ளமும் திட்டியும்

சேது சமுத்திரத் திட்டத்தால் இலங்கைக்கு ஆபத்து என்ற குற்றச்சாட்டைப் பூசி மெழுகி காலம் கடத்துகிறது இந்தியா. இந்த நிலையில் தான் தென்னிந்திய மாநிலமான கேரளாவின் தென் கரையோரப் பிரதேசத்துக்கு இந்தத் திட்டத்தால் ஆபத்து என எதிர்ப்பலை கிளம்பியுள்ளது.

இதற்கு மூலகாரணமானவர் ஆழிப்பேரலை அனர்த்தம் குறித்து ஆராயும் நிபுணர் எஸ்.மூர்த்தி. இவர் இந்தியாவில் பிறந்து கனடாவில் வசிக்கிறார். இவர் 'பாதுகாப்பான சுற்றாடலுக்கான மருத்துவர்கள்' என்ற தன்னார்வ நிறுவனம் ஊடாகச் சேது சமுத்திரத் திட்டம் குறித்து எச்சரித்துள்ளார்.

'கடலில் கால்வாய் வெட்டப்படுகிறது. ஆழிப்பேரலை ஏற்படும்போது தோண்டப்பட்ட மணல் இக்கால்வாய்க்குள் மீண்டும் தள்ளப்படும். இதனால் கால்வாய் மூடப்படும். மேலும் 12 மீற்றர் ஆழமுள்ள இந்தக் கால்வாய் ஆழிப்பேரலை நகர வழி உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு நகரும் ஆழிப்பேரலை கேரளாவில் தென் கரையோரத்தைத் தாக்கும்' என்று அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் எதிர்ப்பைப் புறக்கணித்து, தமிழகத்தின் ஆட்சேபணையைச் சமாளித்து சேதுகால்வாய்த்திட்டம் நிறைவேற்றப்படுகிறது. இப்போது எதிரணியில் கேரளாவும் இணையும் போல் உள்ளது.

ஆக, பாவிபோகும் இடம் பள்ளமும் திட்டியும் என்று சேது கால்வாய்த்திட்டத்துக்கு எதிர்ப்புக்குரல்கள் அதிகரித்தே வருகின்றன. ✱

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

எம்மிடம் ஆட்டுக்கடாக்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: No.20, கொழும்புத்துறை வீதி, ஈண்டுக்குழி, யாழ்ப்பாணம். (38514)

நல்ல நிலையிலுள்ள CD 200-Road Master - Honda (சிவப்பு) மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.மோகனராஜகுமார் (தியாகராஜா வீடு), பாலாவோடை, இணுவில். T.P.: 077-31617951. (38564)

நல்ல நிலையிலுள்ள SUZUKI GS 125 E Model விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 507, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P. No.: 0714283867, 021 222 8046 (38584)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

காவலுக்குரிய Great dane x Dobermann நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்றர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (38530)

இரண்டு மாதம் நிறைந்த கலப்பின அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அ.இராசேந்திரம், கே.கே.எஸ். றோட், கொக்குவில் சந்தி, யாழ்ப்பாணம். (38526)

## காணி விற்பனைக்கு

கைதடி கிழக்கிலுள்ள கொத்தாக்கூடல் சந்தியில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 077-6570823.(38572)

கோண்டாவில் கிழக்கில், பலாலி வீதிக் கருக்கில் 20 பரப்பு, பலாலி வீதி முகப்பு 5 பரப்பு இராமகிருஷ்ண முகப்பு, 20 பரப்பு பாற்பண்ணை வீதி ஆகியன உடன் விற்பனைக்குண்டு. தரகர் வேண்டாம். தொடர்புகளுக்குத் தொலைபேசி 222-5917.(38580)

யாழ்ப்பாணம், அரியாலை, அருளம்பலம் வீதியில் (ஆத்திக்காடு பகுதியில்) 15 பரப்புக்கு மேற்பட்ட கிணற்றுடன் கூடிய வெறுங்காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: திருமதி சரஸ்வதி அருளம்பலம் அல்லது திருமதி நா.மகாதேவா (லண்டன்), 020- 8933 3302, யாழ்ப்பாணம் T.P.: 0776248677 (66, அருளம்பலம் வீதி). (38448)

சாவகச்சேரி, நுணாவில் மேற்கிலுள்ள கணேசா வித்தியாலயத்திற்கு முன்னாலுள்ள ஒழுங்கையில் விஷகடி மருத்துவர் காசிப்பிள்ளை அவர்களின் வீட்டிற்கு அண்மையிலுள்ள 5 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: விசாகன், T.P.: 011420 4697 (சி/44450)

## வீடு, காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கில் 2 பரப்பு 11 குழி காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் மாலை 6 மணிக்குப் பின்பு தொடர்பு கொள்ளவும். T.P.: 0114613157. (38326)

யாழ்ப்பாணம், பழைய பூங்கா வீதியிலுள்ள வீட்டுடன் கூடிய 9 பரப்புக் காணி முழுமையாகவோ அல்லது பகுதி பகுதியாகவோ (3, 3, 3) or (6, 3) பரப்புகளாகவோ பிரித்து விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: T.P.: 021 222 6970 (ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் தொடர்பு கொள்ளலாம்). (சி/44448)

சாவகச்சேரி, டச்சு வீதியில் 'அருள் வாசா' நிலப்பரப்பு 10 பரப்பு, 11.12 குளி கல்வீட்டுடன் பயன்தரு மரங்களுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 021 222 6970 (திங்கள் முதல் சனி வரை காலை 10 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை). (சி/44447)

## தவறிவிட்டது

வட்டுக்கோட்டை, மூளாய் வீதியைச் சேர்ந்த க.ராதாகிருஷ்ணன் (ராதா) என்பவருடைய வெள்ளி நிறமான நீண்ட திறப்பு ஒன்று மானிப்பாய் - சுழிபுரம் - பிரதான வீதிக்கிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (சி/44444)

## மணமகள் தேவை

சுத்தபோசன கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 46 வயது, பிரபல வர்த்தகருக்கு 36 வயதுக்கு உட்பட்ட மணமகள் தேவை. தொடர்பு: T.P.: 021-222-7217. (38494)

## இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு

புறொயிலர் 1Kg 150/-. சுத்தம்செய்தது 1Kg 225/-. கல்பேட் மற்றும் கோழித்தீன் புறொயிலர் குஞ்சுகள் என்பன விற்பனைக் குண்டு. தொடர்பு: 1. NEW RSK FARM மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். 2. NEW RSK FARM பெரியமதவடி, மானிப்பாய் றோட், உடுவில். (38533)

Prima உயிர் மற்றும் Broiler இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. சுகாதார முறைப்படி உடன் சுத்தம்செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) (நல்லூர் வீடியோ சென்றர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (38368)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டுமுறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள் 42/-, பேட்டுக் குஞ்சுகள் 08-08-2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப் படும். எமது பருத்தித்துறை நெல்லியடிக் கிளைகளிலும் சுட்டி பாம் - வட்டுக்கோட்டை, சந்நிதி பாம் - தொண்டைமானாறு, ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன்- சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (38283)

இரண்டுமுறை தடுப்பு மருந்து போடப்பட்ட Orginal Priema Broiler குஞ்சுகள் (42/-) பேட்டுக்குஞ்சுகள் 08-08-2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். முற்கூட்டியே பதிவுசெய்யவும். சிவகலை களஞ்சியம் - கோப்பாய், உமாகரன் - முருகமூர்த்தி கோயிலடி, உடுவில், நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (38443)

## திருமண சேவை

மனம் விரும்பும் மணமக்களைத் தேர்ந்தெடுக்கத் 'திருமண சுயதெரிவுமுறை' முன்னோடி குரும்பசிட்டியூர் மாயெழு வேல் அமுதனை அடிக்கடி சந்திக்கவேண்டுமா? தேவையில்லை இடைக்கிடை சந்தித்தால் மாத்திரம் போதும். உள்ளகச் செயற்பாட்டால் சாதகக் குறிப்புகள் தெரிவுசெய்யப்படும் போதே உடனுக்குடன் தொடர்பாளருக்குத் தெரியப்படுத்தப்படுகிறது. மேலதிக விவரங்களுக்கு வேல் அமுதனுடன் கிழமை நாள்களில் மாலை 4.30 மணிக்கு மேல் தொடர்புகொள்ளவும். வேல் அமுதனின் கொழும்பு நேரடித் தொலைபேசி இல.: 2360488, 4514396. (சி/44445)

## வீடு வாடகைக்கு

அரசடி வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணத்தில் இரண்டு அறைகள் மற்றும் குளியலறையுடன் கூடிய சிறிய வீடு வாடகைக்குண்டு. T.P. No.: 222 6678 (38582)

## ஊழியர் தேவை

பொருள்களைப் பொதிசெய்து விநியோகம் செய்யக்கூடிய முன்னனுபவம் வாய்ந்த ஊழியர் தேவை. திறமைக்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படும். உறவினர் அல்லாத வர்த்தக உரிமையாளர் அல்லது கிராம சேவகரின் சிபார்சுக் கடிதம் மற்றும் சுயவிவரத்துடன் நேரில் வரவும்.

சம்பளம்: நல்ல அனுபவமுள்ளவருக்கு மாதம் 7,000/- வழங்கப்படும்.

குறிப்பு: முன்பு சில்லறைக் கடைகளில் நிறுத்துவேலை செய்து பழகியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(சி/44443) (24-14-19)

**சிவா நறுமணப் பூங்கா**

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. இல.: 222 2567

# மேர்வின் நீதிமன்றில் சரண்!

பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் சரணடைந்தார்.

பிரதீப் விஜேவர்தன என்பவர் பத்துலட்சம் ரூபா ரொக்கப்பணத்தை தன்னிடம் 2003 ஏப்ரல் 10 ஆம் திகதி கடனாகப் பெற்றார் எனவும் ஆனால், உறுதியளிக்கப்பட்டபடி அந்த நிதி திருப்பித்தரப்படவில்லையெனவும் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா ஒரு வழக்கைத் தாக்கல் செய்திருந்தார். அவ்வழக்கில் சாட்சியாளர்களான பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா மற்றும் ஏ.டி.விமலசேன ஆகியோர் வழக்கு விசாரணைக்கு ஆஜராவதில்லையென மோசடிப்பிரிவுப் பொலீஸார் நீதிவானிடம் தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து நீதிவான் கிஹாகன் பலப்பிட்டிய கடந்தவியாழனன்று இவர்களைக் கைதுசெய்யுமாறு உத்தரவிட்டிருந்தார். அதனையடுத்துப் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா சரணடைந்தார். (ஏ-க)

# புத்த ஞாயிறு என்று....

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒழுகும் எட்டுவித ஒழுக்கங்களில் தங்கிருக்கின்றது. அவையாவன (க) நற்காட்சி, (உ) நல்லூற்றம் அதாவது நற்கருத்து (ங) நல்வாய்மை (ச) நற்செய்கை (டு) நல்வாழ்கை (சு) நல்லூக்கம் (எ) நற்கடைப்பிடி, (அ) நல்லமைதி இவற்றை விரிவாக இங்கு ராய இயலாததினால் இவற்றின் விரிவைப் பௌத்த நூல்களில் கண்டுகொள்க.

### இன்றைய உலக நிலை

இன்று ஈழம் தொட்டு உலகம் ஈறாக அமைதியின்மை எங்கும் குடிகொண்டுள்ளது. எங்கும் போர்போர் என்ற பேரொலியே நாம் செவியி னைச் செவிடுறச் செய்கின்றது. ஒரு நாடு மற்றொரு நாட்டை நசுக்குவதிலும் ஓர் இனம் மற் றோர் இனத்தை இழித்துக்கூறி இன்னல் புரிவதிலும் இன்பம் காண்கின்றனர். சுருங்கக்கூறின் ஒருநாட்டினது அடாத செயலை மற்றொரு நாடு அன்பினால் ஆட்கொள்ள முயலாது வெறுப்பு உணர்ச்சியை வளர்த்துப் போரில் இறங்குகின்றது. ஆனால், அன்பிற்தோய்ந்து அறத்தின் வடிவாய் விளங்கிய புத்தரோ, ''இவ்வுலகில் பகைமையைப் பகைமையால் என்றும் அடக்க முடியாது அன்பினால்தான் ஆட்கொள்ள முடியும் இந்த உண்மையை எவரும் மறுக்கவோ, மறக்கவோ முடியாது'' என்று மொழிந்தார். ஆம்! நம் வள்ளுவ ரும் ''அன்பின் வழியது உயிர்நிலை'' என்று அன்பின் உரிய தன்மை உணர்த்திப் போந்தார். காலத்தாலும் இடத்தாலும் இனத்தாலும் இவ்விரு பெரியார்கள் வேறுபட்டாலும் இவர்களின் கருத்தொருமைப்பாடு எமக்குக்களிப்பைத் தருகின்றதன்றோ.

### புத்தரின் எழில் வடிவம்

உலகிற்கு அருளையும் அறிவையும் அள்ளி வழங்கிய புத்தர் மறைந்து பல்லாயிரம் ஆண்டுகள் கழிந்துவிட்டதாயினும் அன்பிற்குழைத்த அவரின் எழில் உருவம் எம் அகக்கண் முன் இன்றும் ஒருவித இன்ப உணர்ச்சியைத் தந்த படியே இலங்குகிறது. இவ்வின்பம் அளிக்கும் இவரின் எழில் வடிவினை வார்த் (Barth) என்ற மேல்நாட்ட அறிஞர் பின்வருமாறு மொழிகின்றார்.

அமைதி, இனிய பெருமிதம்,உயிரினம் யாவிலும் வரம்பிலா இரக்கம், வருந்தும் உயி ரிடத்தெல்லாம் தண்ணளி, பூரண உளச் சுதந் திரம், மனக்கோட்டமெல்லாம் கடந்த மாண்பு ஆகிய இவ்வரும் பெரும் பண்புகளெல்லாம் பண்பட்டு விளங்குமோர் உருவம் (Th finished model of calm and sweet majesty of infinite for all that brea thes and commpassion for all that suffers of perfect moral freedom exmption from every perjudice)

### தமிழும் பௌத்தமும்

பல நெறியின் பண்பறிந்து பாருக்குப் பொதுவான திருக்குறளைத் தந்து வானத்தின் புகழ்கொண்ட வண்டமிழர், பாரிஸ் எப்பாகத்தில் பெரியார் தோன்றினும் அவரைத் தமராகப் பேணி ஒழுகும் இயம்புடையவர்களாகவே விளங்கினர். அதனால் தான் இன்னா செய்தவர்க்கும் இனியவே செய்த இயேசுவையும் மக்கட் சமுதாயத்தின் சகோதரத்துவத்தை உணர்த்திப் போந்த முகமது நபியையும் பேரருள் சுரந்த புத்தபிரானையும் போற்றிப் புகழ்ந்து அவர் வழி ஒழுகினர். இப்புத்தரை நம் தமிழ் மூதாதையர் அருளறம் பூண்டோன் அறத்தகை முதல்வன் புத்தஞாயிறு, போதி மாதவன் மன்னுயிர் முதல்வன், பிறப்பிணி மருத்துவன் கருணைக்கடல் எனப் பல சிறப்புப் பெயர் கொண்டு வாழ்த்தி வழிப்பட்ட னர் என அறியக்கிடக்கின்றது.

### மணிமேகலையின் மாண்பு

வளையாபதி, குண்டலகேசி, மணிமேகலை ஆகிய தமிழ் நூல்கள் எல்லாம் புத்த நெறியைத் தமிழகத்தில் பரப்பும் நோக்குடன் எழுந்தன. இவற்றுள் மணிமேகலை தலை சிறந்து விளங்குகின்றது. மணிமேகலைச் சொல்லெலாம் அறம் பொருளெலாம் அறம், மணிமேகலையின் நாடெல்லாம் அறம், காடெல்லாம் அறம், புத்தர் பிரானைத் தமிழிற் காட் டும் ஒரு மணி நிலையம் மணிமேகலை என மணவழகணார் (திரு.வி.க.) உளம் குழைத்து வாழ்த்துவதே இதனின் ஒப்பற்ற தன்மையைத் தெளிவுற உணர்த்துகிறது. இந்நூலில் முதன்மை உறுப்பினராய் (முக்கிய பாத்திரமாய்) விளங்கும் மணிமேகலை என்னும் மாத வப் பெண்மணி பின்வருமாறு புவிக்குப் புதுவழிகாட்டிய புனிதப் புத்தரை வாழ்த்துகின் றாள்.

'மாரனை வெல்லும் வீர, நின்னடி
தீ நெறிக் கடும்பகை கடிந்தோய் நின்னடி
துறக்கம் வேண்டாத் தொல்லோய் -நின்னடி
எண்பிறக்கொழிய இறந்தோய் -நின்னடி
கண்பிறர்க்கு அளிக்கும் கண்ணோய் -நின்னடி
தீ மொழிக்கு அடைந்த செவியோய் -நின்னடி
வாய்மொழி சிறந்த நாவோய் நின்னடி
நரகர் துயர்கெட நடப்போய் நின்னடி
உரகர் துயர்கெடஒழிப்போய் நின்னடி
வணங்குதல் அல்லது வாழ்த்தல் என் நா -விற்கு அடங்காது

நாமும் இம் மாதவ மங்கையின் மாண்புறு வழி சென்று புத்தர் புகழைப் புவி எங்கும் பரப்புவோமாக
புத்த ஞாயிறு பொலிவுடன் -விளங்குக!

★

### வீதியின் அவல நிலை

வலி.தென்மேற்கு,ஓக.7

சிறுவிளான் நூலக வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாது பற்றைகள், செடிகள் வளர்ந்து மக்கள் போக்குவரத்துக்கு மிகவும் சீர்கெட்ட நிலையிலுள்ளது.

இப்பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்துள்ளதால் இவ்வீதியைப் புனரமைத்துத் தரவேண்டும் என்று வலி.தென்மேற்குப் பிரதேச சபையிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (எ-135)

## உடனே தேவை

**ADMINISTRATION AND FINANCE MANAGER**

ஒரு முக்கிய இந்துசமய நிறுவனத்திற்கு நிர்வாக நிதி முகாமைத்துவ அனுபவமுள்ள **நிர்வாக அலுவலர்** தேவை (சமய ஆர்வமுள்ளவர் விரும்பப்படுவர்).

ஒரு வருட ஒப்பந்தத்தில் திட்டங்களைப் பொறுப்பேற்று நிர்வகிக்கத் தமிழறிவும் சைவசமய அறிவும் உள்ள நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று பணிபுரியக் கூடிய **திட்ட அலுவலர்** (PROJECT OFFICER) ஒருவரும் தேவை. இளைப்பாறியவர்களும் இரு பதவிகளுக்கும் விண்ணப்பிக்கலாம். அனுபவத்திற்கேற்ப வேதனம் பேசித் தீர்க்கப்படலாம்.

10-08-2005 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

P.O. Box: 749, Colombo. (C/44440)(26-14-19-24)

## GREEN INN RESTAURANT

எம்மிடம்
★ சைவ உணவு ★அசைவ உணவு ★ சிக்கன் பிரியாணி
★ பிரைட் ரைஸ் + டெவல் ★ மட்டன் பிரியாணி போன்றவை
பார்சல்களாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
எமது ரெஸ்ரோரண்டில் குடும்பமாக வந்து அமர்ந்து சாப்பிடவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.
NO.60, Kandy Road, Chundikuli, Jaffna.
Tel.:021222 3898, Fax: 021222 2298, Mobile 0776-917030
Available A/c & Non A/C Rooms
With Attached Bathrooms.
(38421) (46-13-19-24)

## தாதியர் தேவை

யாழ். நகரில் இயங்கும் தனியார் வைத்திய நிலையம் ஒன்றுக்குத் தாதியர்கள்தேவை. வேலை தெரிந்த அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. நாளை (08-08-2005) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும்.

**சம்பந்தன் வைத்திய நிபுணர்,**
ஆலோசனை நிலையம்,
574/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(38583) (24-14-19)

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் போசகரும் நாவற்குழி
கிராம உத்தியோகத்தருமாகிய **திரு.ஆ.நடராசா**
அவர்களின் அன்புத் தந்தை

**சின்னத்தம்பி ஆறுமுகம்**

31-07-2005 ஞாயிறு காலமாகியதையிட்டு நாம் மிகவும் துயருறுகிறோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

(38574)(26-14-19-24) நாவற்குழி கிராம அபிவிருத்திச் சங்கம்.

# சேது சமுத்திரத் திட்டத்தால் மன்னாருக்குப் பெரும் பாதிப்பு

சேதுசமுத்திரத் திட்டம் இந்திய மத்திய அரசினால், இந்தியப் பிரதமர் மன் மோகன் சிங்கினால் கடந்த 02-07-2005 இல் வெகுவிமரிசையாக ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு 550மில்லியன் அமெரிக்க டொலர்களைச் செலவு செய்யத் திட்டமிடப் பட்டுள்ளது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து காலம் கடந்த பின் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவ சங்கங்கள் ஒன்றிணைந்து கடந்த 19-07-2005 இல் ஒரு மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

இத்திட்டம் சம்பந்தமாக புவியியலாளர்கள், பொருளாதாரவல்லுநர்கள், கல்விமான்கள் வெளியிட்ட அறிக்கைகளின்படி உற்று நோக்குகையில் கீழ் கண்ட பல விடயங்கள் மன்னார் மக்களுக்கு பாதகமாக அமைவதை அவதானிக்கலாம்.

இலங்கையில் பூகோள அமைப்புப் படி புத்தள மாவட்டத்தின் ஒரு பகுதி மன்னார் குடா (மன்னார் தீவு), கச்சதீவு, யாழ்.குடா போன்றன கடற்கற்பாறைகள், பவளப்பாறைகளின் மேல் அமைந்துள்ளது. வான் புகைப்படம் Aerial photo மூலம் எடுக்கப்பட்ட கடல் நீரின் அமைப்பைக் கொண்டு அறியக்கூடியதாகவுள்ளது. இதனால்தானோ ஆழ்கடலில் உருவாகிய ஆழிப்பேரலை புத்தளம், மன்னார், யாழ்.குடா போன்றவற்றில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

சேது கால்வாய் இலங்கை - இந்திய கடல் எல்லையின் ஓரமாக தலைமன்னார்- கச்சதீவுக்கு மிக அண்மையாக வெட்டபடுகின்றது. யாழ்.பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி சூசை கச்சதீவை இந்தியா மீண்டும் கைப்பற்ற சேதுசமுத்திரத் திட்டம் வாய்பளிக்கும் என்று அச்சுறுத்தியுள்ளார்.

கடலை ஆழப்படுத்தும்போது இந்தோனேசியா, அந்தமான் தீவுகளில் கடல்படுக்கையில் அடிக்கடி ஏற்படும் பூகம்பங்கள் ஆழ் கடல் நீரோட்டம் மூலம் தலைமன்னார் மேற்கு, கச்சதீவு, இலங்கை எல்லைக்குள் அமைந்துள்ள 12 இற்கும் மேற்பட்ட மணல் தீடைகளை கடலுக்குள் அடித்துச் சென்று கபளீகரம் செய்ய வாய்ப்புண்டு. ஏற்கனவே, கடல் அலைகளினால் மன்னார் கரையோரப் பிரதேசங்கள் காவு கொள்ளப்பட்டுள்ளன.

**மீன் வங்கி**

இத்திட்டத்தின் மூலம் தென்னிந்தியக் கடற்கரையைச் சேர்ந்த 148 மீனவக் கிராமங்களும், புத்தளம், மன்னார், யாழ்.குடாவைச் சேர்ந்த 70 இற்கு மேற்பட்ட மீனவக் கிராமங்களும், மீனவத் தொழிலை இழக்க ஏதுக்கள் பல காணப்படுகின்றன.

குறிப்பாக - புத்தளக்குடா, யாழ்.குடா, மன்னார்குடா போன்றன கடல்நீரின் தட்ப வெப்பம் காரணமாகவும், இயற்கையாகக் காணப்படும் கடற்தாவரங்கள், பவளப்பாறைகள், கண்டல் மரங்கள் மெதுமையான நீரோட்டங்கள் குறைந்த காந்த சக்தி ஈர்ப்புக் காரணமாகவும் ஆயிரக்கணக்கான மீன்வகைகள் உற்பத்தியாகும் மீன்வங்கியாகக் காணப்படுகின்றது. பல மில்லியன் கன அடி கொண்ட கடல்மண், பவளப்பாறை, கற்கோளங்களை அகழ்வதன்மூலம் இயற்கை சூழ்நிலை பாதிக்கப்பட்டு மீன்வங்கி பெரிதும் பாதிக்கப்படுகின்றது. குறிப்பாக இம்மூன்று பிரதேசங்களிலும் 60 வீதமான மக்கள் கடலில் இருந்து 10 கடல் மைல் தூரத்துக்குத்தான் மீன்பிடிக்கின்றனர். இறால், நண்டு, கடல்அட்டை, கணவாய், சங்கு, முத்து போன்ற அரிய திரவியங்கள் குறைவடைய இச்சேதுத் திட்டம் காரணமாகின்றது. அத்துடன் கடற்பசு, டொல்பின்,

**ஒரு நோக்கு**

கடல் ஆமை, கடற்பன்றி போன்றனவும் அழிய வாய்ப்புண்டு.

ஏற்கனவே, இந்திய மீனவர்களின் கடல் ஆக்கிரமிப்பினால் பாதிக்கப்பட்டுள்ள கச்சதீவு, நெடுந்தீவு, இரணைதீவு, தலைமன்னார், பேசாலை, நாச்சிக்குடா போன்ற கிராமங்கள் எதிர்காலத்தில் மேலும் இந்த மீனவர்களினால் ஆக்கிரமிக்கப்பட இடமுண்டு.

மேலும், இந்திய ஆய்வுகளின்படி ஆழிப்பேரலைக்குப்பின் எடுக்கப்பட்ட செய்மதிப் படங்களை நோக்குகையில், பவளப்பாறைகளின் நிலைமையை சேதுசமுத்திரம் 'கோர்பொ ன் லிமிட்டெட் ' படங்களாக வெப்சைட்டில் வெளியிட்டுள்ளது. இதில் ஒவ்வொரு பகுதிகளில் உள்ள பவளங்களின் தனித்தன்மை தெரிவதுடன் கடல் நீர்த்தரம், வண்டற்படிவு ஆய்வு ஒலிச் சோதனைகளின் மூலம் கடல் சுற்றுப்புறத்தில் செய்யப்பட்ட ஆய்வு முடிவுகள் சேது சமுத்திரக் கால்வாய் மூலம் சேதமடைய வாய்ப்புகள் அதிகம் காணப்படுகின்றன.


**சின்கிலேயர் பிற்றர்**

**கழிவுகள் வந்து கரை ஒதுங்கும்**

இத்திட்டத்தின் மூலம் இந்தியாவின் கிழக்குக் கரையில் இருந்து மேற்குக்கரைக்கான கப்பல் போக்குவரத்தில் 424 கடல் மைல்கள் குறைவதோடு சுமார் 30 மணித்தியாலங்கள் வழமையைவிட சேமிக்கப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 10-20 கப்பல்கள் நாளாந்தம் பாவனைக்கு உட்படுத்தக்கூடும். இக்கப்பல்களினால் வெளியேற்றப்படும் கழிவு எண்ணெய்கள் காபனீரெட்சைட் ($Co_2$) ஏனைய கழிவுகள் கடல் அலைகளினால் காற்றின் வேகத்தில் மன்னார், யாழ். - புத்தளக் குடாக்களில் கரை ஒதுங்குவதற்கு வாய்ப்புண்டு. இதனால் மீனினம் அழியவும் கடற்தாவரங்கள் மடியவும் இயற்கை சுற்றுச் சூழலுக்கு மாசு ஏற்படவும் பெரும் வாய்ப்பு உண்டு.

**மணல் திட்டிகள் மறையும்**

மேலும் இந்தியாவுக்கும் தலைமன்னாருக்கு இடையில் காணப்படும் 14 இற்கும் மேற்பட்ட மணல் திட்டி தீடைகள் (Sand dumes).இதுவரை காலமும் மன்னார் மீனவர்களுக்கு ஒரு சிறு தங்குமிடமாகக் காணப்பட்டதுடன் இந்தியாவில் இருந்து நாடு திரும்பும் இலங்கை அகதிகள் இத்தீடைகளிலே இறக்கிவிடப் பட்டனர். தற்போது சேதுகால் வாய்த் திட்டத்தினால் இத் தீடைகளில் பல கடல் அரிப்பினால் சமுத்திரத்தில் சங்கமிப் பதற்கு வாய்ப்புகள் உண்டு.




மேலும் பாரிய கொள்கலன்களைக் கொண்ட கப்பல்கள் இக்கால்வாயைப் பாவிக்கும்போது தென்னிலங்கை துறை முகங்களுக்கு அருகில் அமைந்துள்ள கிராமங்களைப் போன்று மன்னார், யாழ். கிராமங்களிலும் கள்ளக்கடத்தல்கள், போதைவஸ்துகள், மனித கடத்தல்கள், ஏனைய நாடுகளுக்கு வேலைவாய்ப்புப் பெற கள்ளமாகச் சென்று உயிர்இழக்கும் சந்தர்ப்பங்கள் பல ஏற்பட வாய்ப்புண்டு.

மேலும், இயற்கையாகக் காணப்படும் கடல் திரவியங்கள், கனிப்பொருள்கள், எண்ணெய் படிவங்கள் போன்றன இந்த அகழ்வின் மூலம் இந்திய நாட்டிற்குச் செல்ல வாய்ப்புண்டு. ஏனெனில், இத்திட்டத்தின் போது மன்னார் வளைகுடாவிற்கும் வங்கால விரிகுடாவிற்கும் இடைப்பட்ட கடலடியில் காணப்படும் ஆயிரம் மீற்றர் உயரமான 89.2Km தூரமான மேட்டு நிலப்பகுதி அகலப்படுகின்றது. இப்பெரும் சொத்துக் கொண்டகன அடி மண் இந்தியாவுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது. இப்போக்குவரத்துக் கால்வாய் 167 Km நீளம் கொண்டதாகவும் 300m அகலமானதாகவும் ஆழம் 12m இற்கு மேற்பட்டதாகவும் அமைக்கப்பட வுள்ளது.

அத்துடன், இக்கால்வாயைப் பாதுகாக்க இந்தியக் கடற்படை இக்கால்வாயில் அடிக்கடி ரோந்து செல்லும். இதன்போது இலங்கை மீனவர்கள் வழிதவறி அங்கு செல்லும்போது கைதுகள், உயிரிழப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆயினும், சேதுகால்வாய் முழுமையாக இந்தியாவுக்கான கடல் எல்லையினுள்ளே அமைந்திருக்கும் என்பது பலராலும் சுட்டிக் காட்டப்படினும் இதன் பாதிப்புகள் மன்னார் மாவட்ட மக்களை நீண்டகாலத்திற்குப் பாதிக்கும் என்பது கண்கூடு.

ஒரு சாரார் கூறுவது போன்று காங்கேசன்துறை, பருத்தித்துறை, தலைமன்னார் ஆகிய துறைமுகங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டாலும் இக்கால்வாயைப் பாவிக்கும் சகல வெளிநாட்டுக் கப்பல்களும் இந்தியத் துறைமுகங்களிலே எண்ணெய் நிரப்பவேண்டும் என சட்டம் வரையறுக்கப்பட்டால் எமது துறைமுகங்கள் காயவேண்டிய நிலை ஏற்படும்.

✱

# ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை தோற்கடிக்க ஸ்ரீல.சு.கட்சி முழுமூச்சுடன் செயற்படுமாம்!

## கட்சிச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தகவல்

கொழும்பு, ஓக.7 -

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவைத் தோற்கடிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முழுமூச்சுடன் செயற்படும்.

- இவ்வாறு கட்சியின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாடு ஒன்றில் கருத்துத் தெரிவித்தபோது அவர் மேலும் கூறியதாவது:-

சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை உத்தியோகபூர்வமாக அறிவித்த தினத்தன்றே அனைவரும் எம்முடன் இணைந்து செயற்படவேண்டும் என அழைப்பு விட்டிருந்தோம். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவரைத் தோற்கடித்துப் பிரதமர் ராஜபக்ஷவை ஜனாதிபதிப் பதவியில் அமர்த்துவதை எதிர்பார்த்தே செயற்பட்டு வருகிறோம்.

இதேவேளை - சுதந்திரக் கட்சியின் 54 ஆவது ஆண்டுவிழா செம்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதி கொழும்பு நகரசபைத் திடலில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன என்று அவர் தெரிவித்தார். (எ-204)

# மடுமாதா தேவாலயப் பெருவிழாவில் கலந்துகொள்ளப் பிரதமருக்குப் பெருவிருப்பம்

## ஏற்பாடு செய்து தருமாறு புலிகளுக்கு அவர் கடிதம்

யாழ்ப்பாணம்,ஓக.7

மன்னார் - மடு தேவாலய திருவிழாவின் இறுதிநாள் நிகழ்வுகளில் ஒரு விசேட விருந்தினராகக் கலந்துகொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டும்.


- இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, விடுதலைப் புலிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

விமானப் போக்குவரத்து அமைச்சின் கீழ் செயற்படும் அமைப்பு ஒன்றின் முக்கிய அதிகாரி ஒருவர் மூலமாகவே பிரதமரின் இந்தக் கோரிக்கை விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்றும் - தெரிவிக்கப்படுகிறது.

மடு தேவாலயம் அடங்கிய பிரதேசம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ளது. இந்தத் தேவாலய திருவிழாவின் இறுதிநாள் நிகழ்வுகள் எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ளன. இதில், நாடு முழுவதிலுமுள்ள 10 லட்சத்திற்கும் அதிகமான யாத்திரிகர்கள் கலந்துகொள்வார்களென எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிகழ்வில் தாமும் கலந்துகொள்ள விரும்புவதாகத் தெரிவித்தே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார் எனக் கூறப்பட்டது.

(எ-204)




சுன்னாகம், மயிலணி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆடிப்பூர விழா நடைபெறவுள்ளது.

அடியார்கள் பாற்குடமேந்தி அம்பாளுக்கு பாலாபிஷேகம் செய்விப்பர். இன்று காலை 8.30 மணிக்கு சுன்னாகம் கிழக்கு காளி அம்மன் ஆலயத்தில் இருந்து பாற்குடப் பவனி ஆரம்பமாகி முத்துமாரி அம்பாள் ஆலயத்தை வந்தடையும்.

அதனைத் தொடர்ந்து பாலாபிஷேகம் நடைபெறும். வசந்த மண்டபபூசை நடைபெற்று அம்பாள் திருவீதியுலா வரும் காட்சி இடம்பெறும். (எ-152)

✱ ✱ ✱

ஏழாலை தெற்கு, சூராவத்தை முத்துமாரி அம்பாள் ஆலய ஆடிப்பூரத் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

விசேட அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து அருளுரை, பண்ணிசை, மங்கள வாத்திய கானம் என்பன இடம்பெறும்.(எ-29-202)

✱ ✱ ✱

ஆனைக்கோட்டை காசிகாண்டமடம் ஸ்ரீவிசாலாட்சி அம்பாளின் தீர்த்தோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். (எ-100)

✱ ✱ ✱

நவாலி களையோடை கண்ணகை அம்மன் ஆலய ஆடிப்பூரத் திருவிழா இன்று இடம்பெறும்.

இதனையொட்டி அம்மனுக்கு காலை முதல் விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெறும். தொடர்ந்து மகேஸ்வர பூசை என்பன இடம்பெற்று மாலை7 மணிக்கு வில்லிசைப் புலவர் கலா விநோதன் க.நா.கணபதிப்பிள்ளை (சின்னமணி) குழுவினரின் 'கண்ணகி வில்லிசை' இடம்பெறும். (எ-100)

✱ ✱ ✱

கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலய ஆடிப்பூரத் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு அம்பாளுக்கு அபிஷேக ஆராதனையும் முற்பகல் 10 மணிக்கு ருதுசோபன வைபவம், திருவூஞ்சல் பாடுதல், அடியார் காணிக்கை செலுத்துதல் என்பன இடம்பெறும். தொடர்ந்து அம்பாள் பூந்தண்டிகையில் வீதியுலா வருதல் இடம்பெறும். (எ-202)

உ ஓம் சக்தி

## கொக்குவில் தாவடி தெற்கு அருள்தரும் அன்னை ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்

## பார்த்திப வருஷ ஆடிப்பூரப் பெருவிழா

இன்று (07-08-2005) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் விசேட சகஸ்ரசத சங்காபிஷேகம், பூஜை வழிபாடுகளுடன் அம்பாளின் பூரகர்மா வைபவம் நடைபெறும். தொடர்ந்து நண்பகல் அன்னதானம் வழங்கப்படும்.

மாலை 5 மணிமுதல் விசேட பூஜை, நவசக்தி அர்ச்சனை வழிபாடுகளுடன் அம்பாள் திருவீதியுலா வரும் அருள் காட்சியும் இடம்பெறும்.

அடியார்கள் அனைவரும் திரளாக வந்து நிகழ்வுகளில் பங்குபற்றி அம்பாளின் அருள்பெற்றேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம், தாவடி தெற்கு, கொக்குவில். T.P.: 021 222 5135

கண்ணன் ஐயர், ரவிஐயர் ஆலய ஆதீனகர்த்தா.

(38586)(26.14,17)

## சாவகச்சேரியில்...



ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்ஜியின்

வாழும் கலைப் பயிற்சி

### இலவச அறிமுக உரை

நாள்: 08.08.2005 திங்கட்கிழமை மாலை 6.00 மணி

இடம்: ஐங்கரன் மணிமண்டபம், டச்சுவீதி, சாவகச்சேரி

பயிற்சி நாள்கள்: 09.08.2005 முதல் 14.08.2005 வரை

காலையும் மாலையும் 6 மணி முதல் 8 மணிவரை

மேலும் தொடர்புகளுக்கு: 0777078349 - 0779059549

அன்பில் மலருங்கள் உங்களை உணருங்கள்

அனைவரும் வருக!

www.artofliving.org (38587) www.srisriravishankar.org

கலையுலகில் 40 ஆண்டுகள்

## திருமறைக் கலாமன்றம்

தயாரித்து வழங்கும்

## கொல் ஈனுங் கொற்றம்

(கூத்துருவ நாடகம்)

மன்ற மூத்த கலைஞர்களின் ஆதரவுடன் இன்று [07-08-2005] ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் அரங்கேறுகின்றது.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரவேசம் இலவசம்.

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(சி-44458)(26.14.17) - திருமறைக் கலாமன்றம்

## இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,ஓக.7

தியாகி அறக்கொடை நிலையம் நடத்தும் இலவச மருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 12.30 மணிவரை சில்லாலை றோமன் கத்தோலிக்க பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இம்மருத்துவமுகாமில் அப்பகுதி பொதுமக்கள் கலந்துகொண்டு பயன்பெற முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## "வேடிக்கை" வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஓக.7

'வேடிக்கை' இருவார இதழ் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் யாழ். மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாகப் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் பங்குகொள்வர். (எ-202)

## சரஸ்வதி சிலை திறப்பு

வலி.தெற்கு,ஓக.7

தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை வளாகத்தில் சரஸ்வதி சிலையொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பாடசாலை உப அதிபர் ஐ.மனோகரன் சரஸ்வதி சிலையை அன்பளிப்பாக உருவாக்கிக் கொடுத்துள்ளார்.

பாடசாலை அதிபர் எஸ்.சண்முககுலகுமார் தலைமையில் இது தொடர்பான நிகழ்வு இடம்பெற்றது.

வலிகாமம் கல்வி வலய மாணவர் கல்வி அபிவிருத்தி பிரதிக்கல்விப் பணிப்பாளர் கே.சண்முகநாதன், உடுவில் கல்விக் கோட்டப் பணிப்பாளர் செ.குபேரநாதன் உட் படப் பலர் சிலைத்திறப்பு விழாவில் கலந்துகொண்டனர். (எ-152)

## குட்டியப்புலம் கிராமத்தில் அபிவிருத்திப் பணிகள்

வலி.தெற்கு,ஓக.7

வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வசாவிளான் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் குட்டியப்புலம் கிராமத்தில் நிக்கொட் நிறுவனம் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது.

வீதி புனரமைப்பு, பொதுமண்டபம் அமைத்தல், மலசலகூடங்கள் புனரமைத்தல், குழாய்க்கிணறுகள் அமைத்தல் எனப் பல்வேறு இனங் காணப்பட்ட அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், சுய முயற்சித் தொழில்களை மேற்கொள்ள விரும்புகின்றவர்களுக்குக் கடனாக நிதியுதவியையும் இந்த நிறுவனம் வழங்கும். (எ-51)

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி

இகம் 30 - 01 - 1924



பரம் 08 - 07 - 2005

### அமரர் சின்னத்தம்பி மார்க்கண்டு

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

மாதமொன்றும் கருகி மறைந்தாலும்...
மறையவில்லை உங்கள் நினைவுகளே...
சோதியில் ஆத்மா கலந்தே மறைந்தாலும்...
அரனடி சேர பிரார்த்திப்போம் நாமே!

அன்னாரின் இறுதிக்கிரியைகளில், கலந்து பலவகை உதவிகளையும் அஞ்சலிகளையும் புரிந்த அனைவருக்கும் நன்றி கூறிக்கொள்கின்றோம். இன்று ஞாயிற்றுக்கிழமை [07-08-2005] முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திக்கிரியைகளிலும், மதியபோசனத்திலும், கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அழைக்கின்றோம்.

39/6, புதுவீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (38589)(21.14.19.26)- - குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### ஜெயசீலன் சாந்தரூபன்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை வதிவிடமாகவும் தற்பொழுது எம்.எஸ்.வீதி, கோண்டாவில் கிழக்கில் வசித்து வருமான செல்வன் ஜெயசீலன் சாந்தரூபன் 04-08-2005 வியாழக்கிழமை அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் ஜெயசீலன் - சாந்தினி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற வல்லிபுரம் (அப்பப்பா), காலஞ்சென்ற மகேஸ்வரி (அப்பம்மா - திருகோணமலை), சின்னராசா (ஐயா), செல்லம்மா (அம்மம்மா - கோண்டாவில்) ஆகியோரின் பேரனும் ஜெயஆனந்தி, பிரசாந், பிரதீபன், கஜன், சந்தோஸ் (திருகோணமலை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் செல்வராஜா, ஜெயமலர் (திருகோணமலை),கிருஷ்ணமூர்த்தி,ஜெயத்திலகம் (திருகோணமலை), சிவலிங்கம் (கோண்டாவில்), சிவநேசன், புஸ்பலலிதா (கோண்டாவில்), ராகவேந்தன், திலகவதி (பிரான்ஸ்) ஆகியோரின் மருமகனும் ஜெகநாதன் (இத்தாலி), நகுலேஸ்வரி (திருகோணமலை), ராஜசேகர், சாரதாதேவி (சுவிஸ்) ஆகியோரின் பெறாமகனும் ஜெயந்திமாலா (சுவிஸ்), செல்வமாலா (இத்தாலி), ஜெயகுமார், செல்வகுமார், தயாளன் (திருகோணமலை), கஜராம், கபில்ராஜன் (கோண்டாவில்) ஆகியோரின் மைத்துனரும் சாம்போலின் மாமனாரும் விதுசா, யதுர்சன் (சுவிஸ்), விதுன்ராஜ், மிதுனா (திருகோணமலை) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07-08-2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கோண்டாவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தாவடி சேமக்காலையில் நல்லடக்கஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: தந்தை, தாய், சகோதரர்கள்.

எம்.எஸ்.வீதி, கோண்டாவில். (38585)(26-14-17)

# REQUEST FOR PROPOSAL

## Open Well rehabilitation & Construction of Medical shelters

**Closing Date: 15th August 2005**

The Sub-Delegation of the International Committee of the Red Cross (ICRC) in Kilinochchi is searching for construction companies, willing to contract for Open Well rehabilitation and the building of medical shelters in Mullaitivu and Vadamarachchi East. The projects should start by 21st of August 2005.

*1) Project Quantities and Phases*

*1.Project #1:*

4 X Semi Permanent Medical Shelters Dimensions: 30 X 20 Feet
Quality of walls: 7 feet high concrete block work.-
Pillars: 9 X Pillars, 7 feet high by 8 inch wide.
Windows: 02 X Window, 3X 3 feet.
Doors: 1 X wood Door; single-side opening/ 3 X 6 feet
Quality of Floor: concrete floor / 30 X 20 Feet/plastered
Quality of roofing: Cadjan roofing

*2.Project #2*

21 X Open well- Apron + Drainage
23 X Open well Pillars (Pair)
Dimensions: 5 feet open well,4 feet diameter Apron,
1 feet -6 inch Long X 6 Inch Width Drainage Channel,
8 feet height X 1 feet Width Pillar

*2. Structure & Detail of Proposal.*

- The proposal should feature subtotal-amounts for every subproject
- All materials should be listed and quantified both in volume and unit price
- Labour costs should be listed and quantified both in volume and unit price
- Project start & end dates should be indicated for every project
- All prices are to denominated in local currency (LKR)
- Terms of payment has to be indicated in the proposal.

*Specific details of the project, including diagrammatic representation are available on request at the offices of the ICRC in Kilinochchi and Puthuk kudiyiruppu*

*The projects will be carried out under the strict supervision of the ICRC.* Interested Companies and individuals are invited to submit their bids in a sealed envelope until *15th of August 2005* to the following address:

International Committee of the Red Cross,
Subdelegation Kilinochchi,
Logistics Department, Iranamadu Junction, Kilinochchi.

(C/44451)(26)

## நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

முதலாம் ஆண்டு



மூன்றாம் ஆண்டு



அமரர் Dr. பொன்னையா யோகலிங்கம் J.P.

திருமதி ஜெயமணி யோகலிங்கம்

| | | |
|---|---|---|
| 21.05.1926 | மண்ணில் | 12.01.1926 |
| 13.07.2004 | விண்ணில் | 02.08.2002 |

அப்பா!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
ஓராண்டு கழிந்தாலும் உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சைவிட்டு அகலமாட்டாது
விண்ணுலகம் சென்றாலும் விடிவிளக்காய்
ஒளி வீசி மீண்டும் மண்ணில் வருவீரோ?
வழிமேல் விழிவைத்துப் பார்த்திருப்போம்.

அம்மா!
இறைவனின் நியதி எது வென்று யாமறியோம்!
வினைவடிவில் வந்துன்னை அழைத்தானோ?
இன்றுடன் மூன்றாண்டுகள் ஆனதுவோ அம்மா!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து எத்தனை
ஆண்டுகள் கடந்தாலும் உங்கள் நினைவு
எம்மைவிட்டு அகலவே அகலாது!

*ஆறாது தீராது அழுதாலும் மாறாது*
*ஆத்மா சாந்தி பெற ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்!*

எமது இல்லத்தில் இன்று (07.08.2005) ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்

"கோவிந்தவாசா" பொற்பதி றோட், கொக்குவில்.

லண்டன் T. P: 00442087674623 தகவல்: யோகவதனி.

பிள்ளைகள்:- வதனி, ஜெயந்தி மற்றும் மருமக்கள், பேரன், பேர்த்தி, பூட்டப்பிள்ளைகள்.

(38569) (64-11-17)

# இவ்வருடமே ஜனாதிபதித் தேர்தலை நடத்தக்கோரும் ஹெல உறுமயவின் மனு விசாரணைக்கு ஏற்பு!

## ஜனாதிபதி கோரும் கருத்தையும் அதனுடன் ஆராய இணக்கம்

கொழும்பு, ஓக.07

இந்த வருட இறுதிக்குள் ஜனாதிபதித் தேர்தலை நடத்தும்படி தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிடக்கோரி ஜாதிக ஹெல உறுமய கட்சி சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு ஏற்க உயர்நீதிமன்றம் இணங்கியுள்ளது. அதனுடன் சேர்த்து, ஜனாதிபதித் தேர்தல் திகதி குறித்து ஜனாதிபதி கோரியிருந்த கருத்துப் பற்றியும் உயர்நீதிமன்றம் ஆராயவுள்ளது.

இந்த வருட இறுதிக்குள் ஜனாதிபதித் தேர்தலை நடத்தும்படி கோரும் மனு ஜாதிக ஹெல உறுமய கட்சியின் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வண. ஓமல்பே சோபித தேரரால் தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனு பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தலைமையிலான நீதியரசர்கள் நிமல் திஸாநாயக்க, நிமல் காமினி அமரதுங்க ஆகியோர் அடங்கிய குழு முன்னிலையில் நேற்றுக் கவனத்திற்கெடுக்கப்பட்டது.

மனுவை ஐந்து நீதியரசர்கள் முன்னிலையில் விசாரணைக்கு எடுப்பதற்கான அனுமதி அப்போது வழங்கப்பட்டது. ஜனாதிபதித் தேர்தல் குறித்து சந்திரிகா கோரிய கருத்துப் பற்றியும் அந்த நீதியரசர்கள் குழு ஆராய்வதற்கும் மன்று அனுமதி வழங்கியது.

சோபித தேரரின் மனுவில் எதிர்மனுதாரர்களாகத் தேர்தல்ஆணையாளர் தயானந்த திஸநாயக்க, சட்டமா அதிபர் கே.சி. கமலசபேசன் ஆகியோர் குறிப்பிடப்பட்டிருக்கின்றனர். மனுதாரர் சார்பில் சட்டத்தரணி மனோகர் டி சில்வா மன்றில் ஆஜரானார். அவர் தமது வாதத்தில் கூறியதாவது:-

பௌத்த பிக்குகள் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சியின் பொதுச் செயலாளராகப் பதவி வகிக்கின்றார் மனுதாரர். நடைபெறஇருக்கும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நாட்டின் இரு பிரதான கட்சிகளின் தலைவர்களும் ஒவ்வொரு கருத்துகளை வெளியிடுகின்றனர். இதனால், தனது கட்சியில் முக்கியமான பொறுப்பை வகிக்கும் மனுதாரருக்குத் தேர்தல் பற்றித் தெளிவற்ற நிலைமையும், ஜனாதிபதி வேட்பாளரொருவரை நியமிக்க முடியாத சிக்கல் நிலைமையும் ஏற்பட்டுள்ளது. இது மனுதாரரின் அடிப்படை உரிமையை மீறுகின்றது. எனவே, உயர் நீதிமன்றம் இதனைக் கவனித்து தேர்தல் நடைபெறும் காலத்தை தெளிவாக அறிவிக்க வேண்டும் - என்றார்.

மன்றில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் ஆஜரான சட்டமா அதிபர் கே. ஸி.கமலசபேசன் கருத்துத் தெரிவிக்கையில், அரசமைப்பின் நியாயப்பாட்டையும் விதிமுறைகளையும் ஆராய்ந்து ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான ஒரு முடிவை எடுக்க வேண்டியது தேர்தல் ஆணையாளரின் பொறுப்பு எனச் சுட்டிக்காட்டினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் குறுக்கிட்ட பிரதம நீதியரசர் சரத் என். சில்வா, அரசமைப்புச் சட்டத்தை விவரித்து, ஆராய்ந்து அதற்குக் கருத்துக் கூறுவதற்கு தேர்தல் ஆணையாளருக்கு அதிகாரம் இல்லையென்று கூறினார். இதன்படி ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட மனுவை அடிப்படை உரிமைமீறல் மனுவுடன் சேர்த்துப் பரிசீலிக்க முடியுமென்றும் பிரதம நீதியரசர் மன்றில் குறிப்பிட்டார்.

இதுதொடர்பான மேலதிக விசாரணை எதிர்வரும் 22ஆம் திகதி நடைபெறவுள்ளது (ற-06)


**S.L.A.S**

வழிகாட்டல் வகுப்பு
பிரிவு-II
ஆரம்பம் 08-08-2005
3.30.pm திங்கள்
வெள்ளி
எமது வழமையான
ஆசிரியர் குழு

**D.C.C.A,**
ஸ்ரான்லிறோட்,
யாழ்ப்பாணம்.


### ஈ.பி.டி.பி. அலுவலகம் மீது வியாழனிரவு கிரனேட் வீச்சு!

ஈ.பி.டி.பியின் கொழும்பு அலுவலகம் மீது கிரனேட் தாக்குதல் கடந்த வியாழன் இரவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தில் அலுவலகத்துக்குச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என நாரஹேன்பிட்டிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு பார்க் வீதியில் உள்ள ஈ.பி.டி.பியின் தலைமை அலுவலகத்தின் மீதே இரவு 11 மணியளவில் கிரனேட் வீசப்பட்டுள்ளது. அலுவலகத்தின் முன் பகுதியில் பலகையால் அமைக்கப்பட்ட அறையொன்றுக்கு குண்டுச் சிதறல்களால் சிறிய சேதம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

அந்த இடத்தில் எவரும் இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. பொலீஸாரும் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களும் அலுவலகத்தைச் சுற்றிப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர். எனினும், அலுவலக வளவில் குண்டு வெடிக்கும் வரை யாருக்கும் எதுவும் தெரிந்திருக்கவில்லை எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

நாரஹேன்பிட்டி பொலீஸார் இதுபற்றி விசாரணை செய்துவருகின்றனர்.







## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி



| தாயின் மடியில் தவழ்தல் | கணவன் மடியில் உயிர் நீத்தல் |
|---|---|
| 19 - 11 - 1960 | 08 - 07 - 2005 |

### திருமதி ஈவ்லின் நிர்மலாதேவி

நெஞ்சுக்குள் என்றும் வாழும் என் தேவியம்மாவே !
நான் என்றும் கண்கள் மூடமாட்டேன் தேவியம்மாவே !
புங்குடு தீவெல்லாம் உன் பேச்சு
பகல் பராமரிப்பு குழந்தைகள் என்றும்
உம்மைத் தேடுகின்றனவே !
உம் நினைவாக ஓர் உயிரை என்
கையில் தந்து விட்டு நீர் தனியாக
சென்றது என்ன நியாயமோ !

உம் ஆத்மா சாந்தியடைய
இயேசு பிரானிடம் வேண்டுதல் செய்கிறோம்

**கணவர் A.R.அம்பலவாணர்**
(புங்குடுதீவு - தென்னிந்திய திருச்சபை பொறுப்பாளர்).

(38596)(25-45-15-12)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



அன்புடையீர் !
கடந்த 16.07.2005 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

### திருமதி வீரசிங்கம் சின்னம்மா

அவர்களின் வீட்டுக்கிருத்தியமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (07.08.2005) ஞாயிற்றுக்கிழமை பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத் தருணம் தங்களையும் தங்கள் குடும்பத்தினரையும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

'கோகுலம்'
இனுவில் மேற்கு, இனுவில்.
T.P: 021-4590787

மகன், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், மகன் - கணேசமூர்த்தி.

(38592)(25-45-15-12)

## பிற்போடப்பட்டுள்ளது

இன்று (07.08.2005) ஞாயிற்றுக் கிழமை வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருந்த TR நியூ பிரண்ஸ் நடனக் குழுவினரின் நடன நிகழ்வு 11.09.2005 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

(38600) - ஏற்பாட்டாளர்கள்.

## தவறிவிட்டது

06.08.2005 சனிக்கிழமை காலை 6 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் இடையில் யாழ்ப்பாணத்திற்கும் முகமாலைக்கும் இடையில் பஸ்சில் (A.L.) என்ற அடையாளம் இடப்பட்ட கறுப்புநிற பயணப்பை சில உடுபுடவைகளும் தங்க நகைகளும் ஒரு தொகை பணத்துடன் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள்

இல.29 சுவாட்ஸ் லேன்,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். T.P: 021 2222582

எனும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (38595) (25)

## தேவை

1) மில் வேலையில் அனுபவம் உள்ளவர்.
2) உதவியாளர்.

தொடர்பு:
**பிருந்தா மில்ஸ்**
18, றக்கா றோட், யாழ்ப்பாணம். T.P: 5745

(38598)


**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்



இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின அதிரடி வெளியீடாக இளம் புயல் ஜெயம் ரவி, ரேணுகா மேனன், வடிவேல் மற்றும் பலர் நடித்த

**தாஸ்** (ரீகல்)

காட்சிகள்: 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே).

**மனோகரா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
மாதவன், சதா, கோவை சரளா மற்றும் பலர் நடித்த

**பிரியசகி**

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30.

**ராஜா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு காதல் புகழ் பரத், ரேணுகா மேனன்

**பெப்ரவரி 14**

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)

**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்.



இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு அர்ஜுன் சினேகா, கிரண், வடிவேல் நடித்த

**சின்னா**

கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி தங்கரத்தினம் நவரத்தினம்

(புவனேஸ்வரி)



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கரத்தினம் நவரத்தினம் அவர்கள் 03.08.2005 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா நவரத்தினம் (குமாரு)வின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லையா-பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லையா - பராசக்தி தம்பதியினரின் அன்பு மருமகளும் பஞ்சலிங்கம் (சுவிஸ்), நாகேஸ்வரி (மலர்), காலஞ்சென்ற சாந்தலிங்கம் (ஜேர்மனி), சிவலிங்கம் (கனடா), சுந்தரலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கலாநிதி (சுவிஸ்), காலிங்கநடனம் (குகானந்தபவான்), லக்கிசின்னராணி (ஜேர்மனி), பகீரதி (கனடா), பத்மினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான நல்லம்மா (ஆசிரியை), வேலாயுதபிள்ளை, மகேஸ்வரி மற்றும் பூமணி, சண்முகசுந்தரம், பரமலிங்கம், காலஞ்சென்ற தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பொன்னையா(பண்டிதர்), திலகவதி, நடராசா மற்றும் மகேஸ்வரி, துரைராஜா, சந்திரவதனி, கைலாயநாதன், காலஞ்சென்ற பூபதி ஆகியோரின் மைத்துனியும் குணாநிதி, இன்பா, பிரியா, ஜனனி, கணன் (சுவிஸ்), மகிலன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), கேசாயினி (யா/இந்து மகளிர் கல்லூரி), ரவிகுமார், மோகிந்தஅமர்நாத், காலஞ்சென்ற கேமலதா மற்றும் விஜயமோகன் (ஜேர்மனி), லாவண்யா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.08.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*C.M.S. லேன்,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*

(39594)(25-45-15-12)

தகவல்:
ஐ.காலிங்கநடனம் (மருமகன்)
(குகானந்தபவான் தட்டாதெரு சந்தி)

### கதிர்காமத்தம்பி சிறிஸ்காந்தா

(முன்னாள் Mascons Formen )



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட கதிர்காமத்தம்பி சிறிஸ்காந்தா அவர்கள் நேற்று (06.08.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மானிப்பாய் பட்டினசபைத் தலைவர் கதிர்காமத்தம்பி - பாக்கியரத்தினத்தின் அன்பு மகனும் சுசீலாதேவியின் அன்புக் கணவரும் பிரவீனன், நிஷாந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2005) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 26, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு ,
கொக்குவில்.

(39599)(25-45-15-12)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

### திருமதி சம்பந்தர் செல்லம்மா

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற சம்பந்தர் அவர்களின் அன்பு மனைவி செல்லம்மா நேற்று (06.08.2005) சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சீவரெத்தினம், நாகரெத்தினம், திலகவதி, காலஞ்சென்ற சபாரெத்தினம், இராசரெத்தினம் ஆகியோரின் அன்புத் தாயாரும் கமலாதேவி, தனபாக்கியம், கனகசுந்தரம், இராஜேஸ்வரி, மாலினி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (07.08.2005) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் (இலங்கை நேரம்) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி வழுக்கையாறு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திலகவதி கனகசுந்தரம்.
(மகள்)

வட்டுக்கோட்டை. (சி 44461) (25-45-15-12)

# உணவுச் சட்டத்தை மீறுவோரை உத்தரவின்றிப் பிடிக்க ஏற்பாடு

## நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா

கிளிநொச்சி, ஓக 7

தமிழ்ழ உணவுச் சட்டத்தை மீறி தவறு இழைக்கும் ஒருவரை தமிழீழ சுகாதார சேவை நியமிக்கும் அலுவலர்கள் எவரும் உத்தரவு இன்றிக் கைதுசெய்ய முடியும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழீழ நீதிநிர்வாகப் பொறுப்பாளர் பரா.

தமிழீழ சுகாதாரசேவைகளின் பொறுப்பாளர்கள், மாவட்ட, பிரதேச இணைப்பாளர்களிற்கான தமிழீழ உணவுச்சட்டமும் நீதித்துறை நடவடிக்கைகளும் தொடர்பான கலந்துரையாடலொன்று தமிழீழ சுகாதார சேவைகள் ஒன்றுகூடல் மண்டபத்தில் 3 ஆம் திகதி அன்று தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்றது.

கலந்துரையாடலில் தமிழீழ நீதிநிர்வாகத் துறைப் பொறுப்பாளர் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தமிழீழ உணவுச்சட்டத்தின் இயல் 3 இன் 13 ஆவது பிரிவின் அல்லது இதனால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கின்படி தவறொன்றை இழைக்கும் ஒவ்வொரு ஆளும் பிடிகட்டளையின்றித் தமிழீழ சுகாதாரசேவை அலுவலர்களால் அல்லது காவல்துறை அலுவலரால் பிடிக்கப்படலாம் எனத்தெரிவித்தார். மேலும் உணவுச் சட்ட ஒழுங்கின்படி தவறொன்றை இழைக்கும் ஒருவர் மீது அவ்விடத்தில் வைத்து குற்றப்பணம் (Spot Fine)அறிவிடுவதற்கான ஏற்பாடுகளும் உள்ளன என தெரிவித்ததுடன் உரிய இடத்தில் வைத்து குற்றப்பணம் அறவிடும் உரிமை வீதிப் போக்குவரத்து கண்காணிப்பிலுள்ள காவல்துறை அலுவலருக்கும் உணவுச்சட்டங்கள் ஒழுங்கு விதிகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளும் சுகாதார சேவை அலுவலுருக்கும் மட்டுமே உள்ளது எனவும் குறிப்பிட்டார்.

இக் கலந்துரையாடலில் மாவட்ட, பிரதேச இணைப்பாளர்களின் சந்தேகங்களுக்கும் அவர் பதிலளித்ததுடன் எதிர்வரும் காலங்களில் புதிய ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார். (ஐ-3)

# ரணிலுடன் ஹெல்கிஸன் ஒரு மணிநேரம் பேச்சு

கொழும்பு,ஓக.7

நோர்வேயின் துணை வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் நேற்று மாலை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை கொழும்பில் சந்தித்து உரையாடினார். சுமார் ஒரு மணிநேரம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது, ஜனாதிபதி மற்றும் விடுதலைப் புலிகள் தரப்பு ஆகியோருடன் தாம் நடத்திய பேச்சுக்களின் விவரங்களை எதிர்க்கட்சித் தலைவருக்கு ஹெல்கிஸன் விளக்கினார்.

அத்துடன் அரசு போர்நிறுத்த உடன்படிக்கையை மாற்றியமைக்கும் யோசனை ஒன்றை முன்வைத்துள்ளமையையும் அதனை தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ள மறுத்துள்ளமையையும் விடர் ஹெல்கிசன் ரணில் விக்கிரம சிங்கவின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

இந்த நிலையில் தமது நாடு தொடர்ந்தும் இரண்டு தரப்புகளுக்கும் இடையில் இணக்கத்தை ஏற்படுத்த முனைவதாக தெரிவித்த அவர் யாழ்ப்பாணம் இணுவிலில் இடம்பெற்ற சம்பவம் குறித்தும் தமது கவலையை வெளியிட்டார். (ஐ-3)

# ஜனாதிபதித் தேர்தல் திகதி விடயத்தில் நடுநிலை தவறிவிட்டார் ஆணையர்

## சுதந்திரக் கட்சி பொதுச் செயலாளர் சாடல்!

கொழும்பு, ஓக.7

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க ஊடகங்களுக்குத் தெரிவித்துவரும் கருத்துகள் குறித்து கடும் அதிருப்தியையும், ஆட்சேபனையையும் வெளிக்காட்டியிருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தேர்தல் ஆணையாளரின் பக்கச்சார்பற்ற தன்மை தொடர்பில் பலத்த சந்தேகம் எழுந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியிருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமான தேர்தல் ஆணையாளரின் அறிவிப்புகள், கூற்றுகள் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன நேற்று இரண்டுபக்க அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கிறார்.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் தினம் சம்பந்தமாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க கடந்த 31ஆம் திகதி ஞாயிறு 'லக்பிம' பத்திரிகைக்கும், மீண்டும் ஓகஸ்ட் 2ஆம் திகதி 'லக்பிம' தினசரி பத்திரிகைக்கும், பி.பி.சி. வானொலிக்கும் தெரிவித்த கருத்துகள் மீது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனது கவனத்தைச் செலுத்தியுள்ளது.

இலங்கையின் அரசமைப்பு மற்றும் ஜனாதிபதித் தேர்தல் சட்டத்திற்கமைய, ஜனாதிபதித் தேர்தல் திகதியை அறிவிக்கும் உரிமை தேர்தல் ஆணையாளருக்கே உண்டென்பதில் எந்தச் சந்தேகமுமில்லை. அரசமைப்பில் குறிப்பிட்டுள்ளபடி இதுதொடர்பான அறிவித்தலை அவர் உரிய காலத்தில் வெளியிடவேண்டும்.

நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கு ஒன்றில் தீர்ப்பினை நீதி பதி வழங்குவதற்கு முன்னரே அதுதொடர்பாக கருத்து வெளியிட்ட தாகவே தேர்தல் ஆணையாளரின் அறிவிப்பைக் கருதவேண்டியுள்ளது. உண்மையில் நாட்டு மக்கள் இந்த அறிவிப்புகளின் பக்கச் சார்பற்ற தன்மை தொடர்பில் சந்தேகம் கொள்ள ஆரம்பித்துள்ளனர் - என்றுள்ளது.


324, Palaly Road, Jaffna.
BIT
விஞ்ஞானமாணி-தகவல் தொழில்நுட்பம்
1st Semester
New Batches Commence on
Weekend: 07th August at 09.00 a.m.
Weekday: 10th August at 04.45 p.m.
MCS 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
Supported by UNDP/JRRP



A/L GIT
15 நாள்கள் மட்டுமே!
இம்மாதம் 21ஆம் திகதி நடைபெறவுள்ளது.
A/L GIT பரீட்சைக்கான விரிவுரைகள் இன்றில் இருந்து ஆரம்பம்.
TIME - 7.00 - 8.30 p.m.
Fees : Per hour 20/=
(38548) உடன் இணைந்துகொள்ளவும்.
C.B. Computer Academy
Station Road Kondavil
T.P. No.: 021 - 4590291


### போர்நிறுத்தத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்கட்சித் தலைவரிட்மும் தனித்தனியே வேண்டுகோள்களை விடுத்திருந்தது. நாட்டில் எந்தத் தரப்பு ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தாலும் போர்நிறுத்த உடன்படிக்கையை அப்படியே பேணுவது என்பதைப் பகிரங்கமாக அறிவிக்கவேண்டும் எனவும் யுத்தத்துக்கு எதிரான தேசிய இயக்கம் கோரியிருந்தது.

இந்தக் கோரிக்கை தொடர்பாக இயக்கப் பிரமுகர்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடனும் எதிர்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் தனித்தனியாகப் பேச்சுக்களை நடத்தினர்.

போர் நிறுத்த உடன் படிக்கை தொடர்ந்து சீராகப் பேணப்படும் என்று உறுதியளிக்கும் கூட்டறிக்கை ஒன்றை இருவரும் ஒப்பமிட்டு வெளியிட அப்போது இணக்கம் காணப்பட்டது.

இவ்வார நடுப்பகுதியில் இந்தக் கூட்டறிக்கை வெளியிடப்படலாம் என்று ஒரு தகவல் தெரிவித்தது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரதான போட்டியாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-3)

### பொலீஸ்மா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இணுவில் பகுதியில் இடம்பெற்றது போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெற இடமளிக்காத வகையில் எவ்வாறு பணியாற்றவேண்டும் என்ற ஆலோசனைகளை அவர் வழங்கினார்.

இதேநேரம் -

இணுவிலில் பொலீஸ் அத்தியட்சகர் சாள்ஸ் விஜேவர்த்தன, கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணைகளை நடத்தப் புலாய்வுத்துறையைச் சேர்ந்த 12 அதிகாரிகள் யாழ்ப்பாணம் வந்துள்ளனர். (ஐ-3)

### யாழ்.நகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டதும் வீதி ஓரமாக இறங்கி நின்றதையும் அவதானிக்கமுடிந்தது.

அத்துடன், முக்கிய வீதிகளூடாகப் பெரும் எண்ணிக்கையான படையிர் கால் நடையாகவும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த னர். முக்கிய சந்திகள், மற்றும் இடங்களில் படையினர் ஆயுதங்களுடன் நின்றிருந்தனர்.

இதேவேளை

யாழ்.பொலீஸ் நிலையத்துக்குச்செல்லும் வீதிகள் அனைத்தும் நேற்றுத் திறந்து விடப்பட்டிருந்தன. எனினும் அங்கு சிவில் பணிகள் எதுவும் இடம் பெறவில்லை. கொல்லப்பட்ட சிரேஸ்ட பொலீஸ் அத்தியட்சகருக்கு அஞ்சலி செய்யும் முகமாகப் பொலீஸ் நிலையத்திலும் அதனை அண்டிய வீதிகளிலும் வெள்ளைக்கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. (ஐ-8-7)

### திருமலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்ததுவதாயின் அங்கு குவிக்கப்பட்டுள்ள படையினர் விலக்கப்படவேண்டும் என்பதை விக்னேஸ்வரன் வலியுறுத்தினார்.

அப்போது கடற்படையின் திருமலைத் தளபதி தெரிவித்த இந்தத் தகவலைக் கண்காணிப்புக் குழுவினர் அவரிடம் தெரிவித்தனர்.

திருமலை நகரில் திடீரென புத்தர் சிலை அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு படிப்படியாகக் குவிக்கப்பட்ட படையினர் அனைவரையும் அங்கிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விக்னேஸ்வரன் கோரியுள்ளாா். (ஐ-3-151)


A/L 2006 PAPER CLASS
TA -குழந்தை
LO -கமல்
H.cu -ஜெயக்குமார்
GO -பாபு
ஆரம்பம் 8.8.2005
திங்கள் 7A.M. (N.T)
புதிய யூனிவேசல் அக்கடமி (38562)


# பிரதமர் மடு செல்வார்?

மன்னார் மடுமாதா ஆலயத்திருவிழாவுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் வியாழக்கிழமை செல்ல திட்டமிட்டுள்ளார் எனத்தெரிவிக்கப்படுகிறது.

மன்னார் ஆயர் இல்ல வட்டாரங்கள் இத் தகவலைத் தெரிவித்தன.

மன்னாரில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்திலுள்ள இந்த ஆலயத் திருவிழா நேற்று சனிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

(மற்றொரு செய்தி 13ஆம் பக்கத்தில்)

(ஐ-9)

# மேற்கிந்திய அணி 33 ஓட்டங்களால் வெற்றி

முத்தரப்புக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இலங்கை அணியை 33 ஓட்டங்களால் மேற்கிந்திய அணி தோற்கடித்தது.

கொழும்பில் நேற்று நடந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 226 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 47 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 193 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

### இணுவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கின்றது. மக்கள் குடியிருப்புப் பகுதிகள், மக்கள் அத்தியாவசியக் கடமைகளில் ஈடுபடும் இடங்களில் சிறிலங்காப் படையினர் நடமாடுவது மட்டுமன்றி ஆயுதங்களைத் தயார் நிலையில் கொண்டுசெல்வதும், மக்களை அச்சுறுத்தும் ஒரு செயலாகும்.

போர்நிறுத்த ஒப்பந்த காலத்தில் இராணுவ வாகனம் மோதிப் பலியானவர்கள், இராணுவச் சூட்டுச் சம்பவத்தில் பலியானவர்கள், காயமடைந்தவர்கள் என சம்பவங்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. இராணுவத்தினரின் இவ்வாறான செயல்களைத் தடுத்துநிறுத்துவதற்கு அரசு எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. இதனால் இராணுவத்தின் யுத்த மீறல் சம்பவங்கள் தொடர்கின்றன. இவ்வாறான சம்பவங்களுக்கு அரசு முற்றுப் புள்ளி வைக்காது விட்டால் இராணுவத்தை வெளியேற்ற மக்கள் போராட்டம் வெடிக்கும் என்பதை இந்த இடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

அதேவேளை கடந்த வியாழக்கிழமை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்த ஜெயசீலன் சாந்தரூபனுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இன்றைய தினம் அனைத்து அமைப்புக்களும் தங்கள் அலுவலகங்களில் கறுப்புக்கொடிகளைப் பறக்கவிடுமாறு கேட்டுக்கொள்வதோடு இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்துமாறும் கேட்டுக் கொள்கிறோம். அத்துடன் தனது உறவினை இழந்து பிரிவால் துயருறும் ஜெ.சாந்தரூபன் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதோடு துயரினிலும் பங்குகொள்கின்றோம் . இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணுவில் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை திங்கட்கிழமை பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்க பொது அமைப்புகளின் ஒன்றியம் நேற்றுமாலை தீர்மானித்திருந்தது. எனினும் வேறு ஒரு தினத்துக்கு அதனை ஒத்திவைப்பது என்று பின்னர் முடிவு செய்யப்பட்டது. (ஐ-3)


PC REPAIRS
திருத்தங்கள்
PC stuck
LCD Problems
Virus Problems
Display problems
Memory errors
Software/Drivers installation
Windows problems
Power supply/Pack Problems
Capture Card problems
Internet & Email Setup
Net-2-Phone configuration
Printers, Scanners & other
MICRO PC SYSTEMS
யாழ் நகர் 175/3, கஸ்தூரியார் வீதி, தொலை: 021 222 5893
நெல்லியடி பிரதான வீதி (பொலிஸ் நிலையமருகில்) 0773039536



EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...

தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.08.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# 20 நாடுகளுக்கு நிமிடத்திற்கு ரூ.11/- மட்டுமே.

## செக்கன் அடிப்படையில் கட்டணங்கள்

### டயலொக் IDD இன் புதிய பரிமாணம்

இப்பொழுது 20 நாடுகளுக்கான IDD அழைப்புக் கட்டணம் நிமிடத்திற்கு ரூ.11/- மட்டுமே.

எந்தவொரு நாடுகளுக்குமான IDD அழைப்புகளுக்கு செக்கன் அடிப்படையிலே கட்டணங்கள் அறவிடப்படும்.

எனவே KIT இணைப்பு மற்றும் ஏனைய டயலொக் இணைப்புகள் மூலம் IDD அழைப்புகளை மேற்கொள்ளுங்கள்.

| நாடுகள் | | | |
|---|---|---|---|
| அமெரிக்கா | ரஸ்யா | புரூனை | பிரேசில் |
| கனடா | சீனா | மொங்கொலியா | கொலம்பியா |
| சிங்கப்பூர் | சைப்பிரஸ் | அமெரிக்க சமோவா | மொரிசியஸ் |
| ஹொங்கொங் | சன் மரினோ | அலஸ்கா | பஹாமாஸ் |
| மலேசியா | தாய்வான் | மெக்சிக்கோ | பேர்மியூடா |

kit® Keep In Touch

எல்லா KIT இணைப்பிலும் IDD வசதி உள்ளது.

டயலொக் GSM

Masters DDB

**எதிர்காலம் இன்றே.**

# விரும்பிய வாழ்வை அமைத்துக்கொள்ள HNB வழங்கும் சாந்தி வீடமைப்புக் கடன்

ஹட்டன் நஷனல் வங்கி (HNB) வழங்கும் சாந்தி வீடமைப்புக் கடன் திட்டமானது நவீன வீடமைப்புத் தீர்வு மாத்திரமன்றி வாடிக்கையாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதமுமாகும்.

"சாந்தி வீடமைப்புக் கடனைப்பெற்று புது வீட்டுக்குக் குடிபுகுங்கள்" என்ற எளிமையான வசனம் வீடமைப்புக் கடன்தொடர்பான எல்லா விடயத்தையும் உள்ளடக்குகிறது.

சாந்தி வீடமைப்புக் கடன் திட்டமானது HNBயால் மிகவேகமாக உங்களுக்கு வழங்கப்படுவதோடு, உங்கள் வாழ்க்கையையும் மிகவும் இலகுவாக்குகின்றது. உங்கள் கனவு வீடு நிஜமாகிறது.



என்.பிரேமராஜா

இவ்வாறு கூறுகிறார் HNB இன் நுகர்வோர் வங்கிப் பிரிவின் சிரேஷ்ட முகாமையாளர் என். பிரேமராஜா. சாந்தி வீடமைப்புக் கடன் திட்டம்பற்றி அவர்தொடர்ந்து கூறுகையில்:-

பெயர் குறிப்பிட்ட வீடமைப்புக் கடன் திட்டம் ஒன்றை முதன்முதலாக அறிமுகப்படுத்தியது HNB யே ஆகும்.

HNB எல்லாவகையான வீட்டுத் தேவைகளையும் நிறைவேற்றுகிறது. வீடொன்றைக் கட்டுவதற்காகக் காணியைக் கொள்வனவு செய்தல், முழுவதுமாக நிர்மாணிக்கப்பட்ட வீட்டை வாங்குதல், வீட்டுச் சொத்துக்களை வாங்குதல், கடனுக்காக விண்ணப்பித்திருப்பவரின் சொந்த நிலத்திலேயே வீட்டை அமைத்தல், பகுதியாக நிர்மாணிக்கப்பட்ட வீட்டைப் பூர்த்திசெய்தல், வீட்டைப் புதுப்பித்தல் மற்றும் தற்போதுள்ள வீட்டின் அளவைப் பெரிதாக்குதல் போன்ற வீடமைப்புத் திட்டங்களுக்கு சாந்தி வீடமைப்புக் கடன் வழங்கப்படுகிறது.

கடனுக்காக விண்ணப்பித்த பத்திரங்கள் சரியாகவிருந்தால் விண்ணப்பித்து 14 நாட்களுக்குள் கடன் கிடைக்கும்.

வாடிக்கையாளர்களின் நலன்கருதி அவர்களின் ஆவணங்களைப் படிமுறை செய்வதற்காக HNB அண்மையில் சட்ட நிறுவனத்துடன் இணைந்தது.

HNB நாடுமுழுவதும் 143 வாடிக்கையாளர் நிலையங்களைக் கொண்டுள்ளது. அவை அனைத்திலும் இக்கடன் வசதியைப் பெறலாம்.

தனிமையில் அல்லது கணவன், மனைவியுடன் இணைந்து தொடரான மாதாந்த வருமானம் உள்ளவர்கள், ஆழமான நிதி வருவாய் உள்ள தொழிலாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் ஆகியோர் இந்தக் கடனைப் பெறத் தகுதியுடையவராவர்.

கடன்பெற விண்ணப்பிப்பவரின் வருமானம் மாதாந்தம் கடன் கட்டணம், வாழ்க்கைச் செலவீனம் மற்றும் ஏனைய செலவுகளைச் சமாளிக்கக் கூடியதாய் அமையவேண்டும்.

ஆகக்குறைந்த கடன் கொடுப்பனவு ஒரு லட்சம் ரூபாவாகும். கடன் 50 லட்சத்துக்கும் அதிகமாகவிருந்தால் தனிப்பட்ட வருமானத்தைக் கருத்தில் கொண்டு இது கட்டம் கட்டமாக பரிசீலனை செய்யப்படும்.

அதிகூடிய கடன்தொகை பெறுவது தொடர்பாக வாடிக்கையாளர்கள் தத்தமது பிரதேசத்தில் உள்ள HNB இன் கிளைமுகாமையாளர்களுடன் பேசித்தீர்மானித்துக்கொள்ளலாம். வாடிக்கையாளர்கள் தாங்கள் விரும்பிய கடன்செலுத்தும் திட்டத்தைத் தெரிவுசெய்யலாம்.

வீடமைப்புக் கடன்களை வழங்குகிற ஏனைய நிறுவனங்கள் கொண்டிருப்பதுபோல் மறைக்கப்பட்ட கட்டண முறைகள் ஏதும் எம்மிடமில்லை.

வட்டி வீதம் 12.5 வீதத்திலிருந்து மாறி வருகிறது. இது கவர்ச்சியும், போட்டித்தன்மை நிலையும் நிறைந்ததாகும்.

வாடிக்கையாளர்கள் நிலையான மற்றும் மிதப்பு வட்டிவீதத்திற்கிடையில் இதனைத் தெரிவுசெய்யலாம்.

மிதப்பு வட்டிவீதம் தற்போதைய சந்தை நிலைவரத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். நிலையான வட்டிவீதத்தைத் தெரிவுசெய்வோர் நிலையான வட்டிவீதத்தைப் பெறுவர்.

ஆகக் குறைந்த 'மீள்கட்டணம் செலுத்தும் காலம்' 5 வருடங்களாகும். ஆகக் கூடிய காலம் 25 வருடங்களாகும். ஆகக் கூடியகாலம் வாடிக்கையாளரின் வயதை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படுகிறது.

HNB அடகுப் பாதுகாப்புக் கொள்கையையும் பெறுகிறது. இது கடன்பெற்றவர் மரணித்தால் கட்டணத்தை மிகவும் சிறப்பாகச் செலுத்த வழிசெய்கிறது. கடனாளியின் உறவினர்கள் மற்றும் அவரைச் சார்ந்தோர் மீது சுமையேற்றப்படமாட்டாது.

தேவையேற்பட்டால் இதன் காப்புறுதிக் கட்டணத்தைச் செலுத்தவும் HNB கடன் வழங்குகிறது.

சாந்தி கடன் திட்டம் வழங்கும் குறைந்த வட்டிவீதம், தொந்தரவின்மை, வேகமான படிமுறை, காப்புறுதிப் பாதுகாப்பு, இலகுவான வழி உள்ளிட்ட அனுகூலங்களுடன் சீட்டிழுப்புத் திட்டத்தையும் மேலதிகமாக வழங்குகிறது.

2005 இல் இக்கடனைப் பெறுகிறவர்கள் இந்தச் சீட்டிழுப்பில் பங்குபற்றத் தகுதிபெறுகின்றனர். இத்திட்டம் அரை ஆண்டு மற்றும் மாபெரும் இறுதி ஆண்டுச் சீட்டிழுப்பைக் கொண்டுள்ளது.

அரை ஆண்டுச் சீட்டிழுப்பின் முதல் பரிசாக சாந்தி கடனைச் செலுத்துவதற்காக 20 லட்சம் ரூபா வரை வழங்கப்படும். வீட்டுத்தளவாடப்பொருட்கள், ஒரு லட்சம் ரூபா பெறுமதிவாய்ந்த பணம் அல்லது முற்பணம் செலுத்தப்பட்ட கடன் அட்டைகள் போன்றவை 5 வெற்றியாளர்களுக்கு ஆறுதல் பரிசுகளாக வழங்கப் படும். மேலும் 5 வெற்றியாளர்களுக்கு தளவாடங்கள், 50,000 ரூபா பெறுமதியான பணம் அல்லது முற்பணம் செலுத்தப்பட்ட கடனட்டைகள் போன்றவை ஆறுதல் பரிசுகளாக வழங்கப்படும்.

ஆண்டிறுதியில் நடைபெறும் சீட்டிழுப்பின் முதல் பரிசாக சாந்தி வீட்மைப்புக் கடனைச் செலுத்துவதற்காக 25 லட்சம் ரூபாவரை வழங்கப்படும்.

தளவாடங்கள், ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பணம் அல்லது முற்பணம் செலுத்தப்பட்ட கடனட்டைகள் 10 வெற்றியாளர்களுக்கு ஆறுதல் பரிசுகளாக வழங்கப்படும்.

மேலும் 10 வெற்றியாளர்களுக்கு தளவாடங்கள், 50,000 ரூபா பெறுமதியான பணம் அல்லது முற்பணம் செலுத்தப்பட்ட கடன் அட்டைகள் போன்றவை ஆறுதல் பரிசுகளாக வழங்கப்படும் எனவும் கூறினார்.





தலைமுடியைக் காத்திடும்...
பிரச்சினைகளைத் தீர்த்திடும்...

BIOTINEX-E
பயோட்டினெக்ஸ்-E




விட்டமின் E+H அடங்கியது

பயோட்டினெக்ஸ்-E இல் விட்டமின் E+H
சரியான அளவில் சேர்க்கப்பட்டுள்ளதால்
தலைமுடியின் வேர்களுக்கும்,
சருமத்திற்கும் போஷாக்கை அளித்து,
கேசம் உதிர்வதைத் முற்றாகத் தடுக்கிறது.

தினமும் இரண்டு கப்சூல்கள் வீதம் மூன்று மாதத்திற்கு தொடர்ந்து பாவித்து சிறந்த பலனை பெறலாம்.

அருமையான கூந்தல்... அழகான மேனி...

Marketed by: ARKEM, Colombo, Tel: 2470290



சக்தி
வர்தனாரிஷ்டய




Siddhalepa Since 1934

ஆயுர்வேத மருந்தின்
ஓர் அதிசயம்

சக்திவர்தனாரிஷ்டய மூலிகைப் பானம்
தாம்பத்திய
வாழ்வின் சுகத்தை முழுமையாக
அனுபவிப்பதற்கு அவசியமயான
தேகபலம்
சக்தி, வீரியம், பலம்
என்பவற்றை தந்துதவுகிறது.

உங்கள் வயது எத்தனையாக
இருந்தாலும் கவலையில்லை.
சக்திவர்தனாரிஷ்டய
அககளிப்பையும் அகமகிழ்வையும் தரும்
சுகபானமாகும்.

சித்தாலேப®


ஆயுர்வேத வைத்தியரின்
ஆராய்ச்சிப்பிரிவின் கண்டுபிடிப்பு

சகல சுப்பர்மார்க்கட்களிலும், மருந்தகங்களிலும், சிங்கள மருந்துக்கடைகளிலும், சில்லறை விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

ஹெட்டிகொட இன்டஸ்ரீஸ் (பிரை) லிமிட்.
33/3, ஸ்ரீ தர்மாராம வீதி, இரத்மலானை, இலங்கை.
தொலைபேசி: 2736910 தொலைநகல்: -2735465

வடபுல விநியோகஸ்தர்கள்:-
வனிக்கா மெடிக்கல்ஸ்
இல. 85, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 2226291, பக்ஸ்:- 021 2222445

# 10



## நீங்கள் எங்களுடன் இணைந்திருப்பது உங்களுக்கு ஒரு "பிளஸ் பொயின்ட்"

ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸ் வழங்கும் போமியூலா பிளஸ் மோட்டார் வாகனக் காப்புறுதியை நீங்கள் வைத்திருந்தால் அது உங்களுக்கு எப்போதுமே "பிளஸ் பொயின்ட்" தான். நாடளாவிய முன்னோடி என்ற வகையில் மக்கள் எம்மீது வைத்திருக்கும் பற்றுறுதிமிக்க 40 வருடகால நம்பிக்கையைப் பக்கபலமாகக் கொண்டே எமது தனித்துவமான, தரச்சிறப்பான சேவைகளை வழங்கி வருகின்றோம்.

**+1** நாடளாவிய சரியான சேதமதிப்பீடு
சேதங்கள் யாவும் தொழில்சார் தகைமை பெற்ற எமது மோட்டார் வாகன பொறியியலாளர் அணியினால் மதிப்பீடு செய்யப்படும்.

**+2** 24 மணித்தியாலத்தில் 75% இழப்பீடு வழங்கப்படும்

**+3** 3 நாட்களில் முழு இழப்பீடும் வழங்கப்படும்
திருத்த வேலைகள் செய்ததற்கான இறுதிப் பற்றுச் சீட்டுகளைச் சமர்ப்பிக்க வேண்டும். இதற்காக விபத்து நடந்த இடத்தில் மணிக்கணக்கில் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை.

**+4** இழப்பீடுகளை ஒருபோதும் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு 70% வரையிலான போனஸ்

**+5** நாடளாவிய ரீதியில், இலவச மோட்டார் வாகனத் தொழினுட்ப உதவிச் சேவை

**+6** உங்கள் இழப்பீடுகளுக்கான கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கும் போது பொலிஸ் அறிக்கை தேவையில்லை
ஆனால் சட்டத்தின் பிரகாரம் பொலிஸ் அறிக்கை தேவைப்படும்.

**+7** இயற்கை அனர்த்தங்களுக்கான பாதுகாப்பு
கவனத்தில் கொள்ளக் கூடிய அனர்த்தங்களுக்கு எதிராகவும் பாதுகாப்பு வழங்கப்படும்.

**+8** வேறு வாகனம் வழங்குதல்
4 நாட்களுக்கு மேல் திருத்த முடியாத நிலையில் உங்கள் வாகனம் பழுதடைந்திருந்தால் அதற்குப் பதிலாக வேறு வாகனம் வழங்கப்படும்.

**+9** தனிப்பட்ட விபத்துப் பாதுகாப்பு
உங்கள் வாகனத்திற்கு ஏற்படும் சேதத்திற்கு மட்டுமல்லாமல், உங்களுக்கும், உங்கள் வாழ்விற்கும், உங்கள் பயணிகளுக்கும் கூட நாம் பாதுகாப்பு வழங்குகின்றோம்.

**+10** வைத்தியசாலை மற்றும் சத்திர சிகிச்சைச் செலவுகளுக்கான பாதுகாப்பு
போமியூலா பிளஸ் ஆண்களுக்கு மட்டுமல்ல பெண்களுக்கும் கூட பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை உட்பட வைத்தியசாலைச் சிட்டைகளுக்கான பணத்தை வழங்குகின்றது.

**FORMULA PLUS**
வாகனக் காப்புறுதி

24 மணிநேர அழைப்பு நிலையச் சேவையைப் பெற அழையுங்கள் : (011) 2 357 357

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்

# சர்வதேச லயன்ஸ் அமைப்பின் உபதலைவராக மகேந்திர தெரிவிப்பு

இலங்கை கொமர்ஷல் வங்கி, யுனைட்டெட் மோட்டர்ஸ் லங்கா லிமிட்டெட், பெலவத்தை சீனி கைத்தொழில் நிறுவனம் ஆகியவற்றின் தலைவரான பிரபல தொழில் அதிபர் மகேந்திர அமரசூரிய சர்வதேச லயன்ஸ் அமைப்பின் இரண்டாவது சர்வதேச உப தலைவராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். ஹொங்கொங்கில் கடந்த ஜூன், ஜூலை மாதகாலத்தில் நிகழ்ந்த மேற்படி சர்வதேச அமைப்பின் 88ஆவது மாநாட்டில் இத்தெரிவு நடைபெற்றது.

அமரசூரிய இலங்கையிலிருந்து அங்கீகாரமும், அத்தாட்சியும் பெற்ற அபேட்ஷகராக மேற்படிப் பதவிக்குப் போட்டியிட்டபோதிலும் அவுஸ்திரேலியாவின் அங்கீகாரமும், அத்தாட்சியும் பெற்ற அபேட்சகர் இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்படுவாரென எதிர்பார்க்கப்பட்டது.

ஆயினும், அவர் தனிப்பட்ட காரணங்களுக்காக விலகிக் கொண்டதால் எதிர்பாராத சூழ்நிலையில் இவர் தெரிவுசெய்யப்பட்டதுடன் இத்தெரிவு இலங்கையில் சுமார் 8,500 லயன் உறுப்பினர்களுக்கும் ஆச்சரியத்துடன் கூடிய மகிழ்வை அளித்தது. அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 93 வீதமானவற்றைப் பெற்று மகேந்திர அமரசூரிய இப்பெருமைக்குரிய பதவிக்குத் தெரிவானார்.

சர்வதேச லயன்ஸ் கழகம் உலகெங்கிலும் ஏறத்தாழ 1.35 மில்லியன் உறுப்பினர்களைக் கொண்ட மிகப்பெரிய, மிகச் செயற்பாடான சேவை அமைப்பாக விளங்குகிறது. இதில் அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், ஐரோப்பா, கொரியா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளின் கணிசமான உறுப்பினர்கள் இருப்பதுடன் வழக்கத்தில் அவர்களின் பிரதிநிதிகளே 7 வெவ்வேறு யாப்புக் குழுக்களுக்கும் தெரிவுசெய்யப்படுவதுண்டு.

இலங்கையர் ஒருவர் இப்பெருமைக்குரிய பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டமை இதுவே முதல் தடவையாகும். அத்துடன், இலங்கையின் உறுப்பினர்கள் இச்சர்வதேச அமைப்பின் உறுப்பினர்களில் 0.6 வீதமானோர் மட்டுமே என்பதால் இத்தெரிவு வழமைக்கு மாறான நிகழ்வாகும்.

இச்சர்வதேச அமைப்பின் பாரம்பரிய மரபின் பிரகாரம் மகேந்திர அமரசூரிய, அமெரிக்காவின் நியூஓர்லீன்ஸ் நகரில் 2006, 2007இல் இடம்பெறும் நிகழ்வில் முதலாவது உதவித் தலைவராகவும் 2007, 2008இல் அமெரிக்காவின் சிக்காகோவில் இச்சர்வதேச அமைப்பின் தலைவராகவும் தெரிவுசெய்யப்படுவார்.

இலங்கையிலிருந்து சென்ற 560 லயன் உறுப்பினர்களும் இவரின் தெரிவுக்கு உற்சாகமாக ஆதரவளித்தனர். இம்மாநாட்டில் பங்குபற்றிய இலங்கை அணியினருக்கு மேலும் இரு உயர்தர விருதுகள் கிடைத்தன. மிகச்சிறந்த சீருடை அணிவகுப்புத் தூதுக்குழு மிகச்சிறந்த செய்முறைப் பிரிவு ஆகியன இவ்விருதுகளாகும்.

இலங்கையிலிருந்து சென்ற லயன் பிரதிநிதிகள் தங்களின் ஏற்பாடுகளைச் செய்வதற்கு 3 வாரங்கள் மட்டுமே கால அவகாசம் இருந்தபோதிலும் அவர்களின் கட்டுப்பாடும், ஆற்றல்மிக்க ஒழுங்குகளும் பார்வையாளர்களை மிகவும் கவர்ந்துவிட்டன.

மகேந்திர அமரசூரிய, 1967இல் காலி லயன்ஸ் கழக உறுப்பினராக லயன்ஸ் அமைப்பில் இணைந்தார். பின்னர் 1978/79 இல் மாவட்ட லயன்ஸ் ஆளுநராகவும், 1979/80 இல் பல மாவட்ட பேரவை தவிசாளராகவும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் நகரில் 1981இல் நடந்த மாநாட்டில் ஆபிரிக்க, தென்மேற்கு ஆசிய லயன்ஸ் யாப்புக் குழுவுக்குச் சர்வதேச பணிப்பாளராக இரண்டு வருட காலத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டார். இவர் 22 சர்வதேச மாநாடுகள், 18 பிராந்திய கருத்தரங்குகள் மற்றும் சர்வதேச லயன்ஸ் அமைப்புத் தொடர்பான அநேக நிகழ்வுகளில் பங்குபற்றியதன் மூலம் இத்துறையில் பாரிய அனுபவத்தைப் பெற்றிருக்கிறார்.

மகேந்திர அமரசூரிய தனது தொழில் முறை வாழ்க்கையை ஹேலீஸ் குழுமத்தில் ஆரம்பித்து அதன் பிரதி அதிபர் பதவிக்கு உயர்ந்து 36 ஆண்டுகாலம் பணியாற்றிய பின் 2001இல் அதிலிருந்து ஓய்வுபெற்றார். இவர் 1986இல் இலங்கை கொமர்ஷல் வங்கியின் பணிப்பாளர் சபையில் இணைய அழைக்கப்பட்டு 1995இல் இவ்வங்கியின் தலைவரானார்.

இவரின் பதவிக்காலத்தில் இலங்கை கொமர்ஷல் வங்கி துரிதமான வளர்ச்சி பெற்று இலங்கையின் மிகச் சிறந்த வங்கி என்ற விருதினை சர்வதேச வெளியீடுகளான 'த பாங்கர்', 'குளோபல் பினான்ஸ்' ஆகியவற்றிடமிருந்து பெற்றுக்கொண்டது.

மக்கள் மயப்படுத்தப்பட்ட நிறுவன்மான யுனைடெட் மோட்டர்ஸ் லங்கா லிமிடெட்டின் பணிப்பாளர் சபையில் பணியாற்றிய இவர் காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாஸாவினால் அழைக்கப்பட்டு 1992இல் இந்நிறுவனத்தின் தலைவரானார்.

ஜப்பான் மிட்சுபிஷி மோட்டார் கூட்டுத்தாபனத்தின் இலங்கை விநியோகஸ்தராக யுனைடெட் மோட்டர்ஸ் லங்கா நிறுவனம் விளங்குவதுடன் இவரின் கீழ் இலங்கையில் மோட்டார் கார் கைத்தொழில்துறையில் முன்னணியில் திகழ்ந்து வந்துள்ளது.



மகேந்திர அமரசூரிய

2002 ஆம் ஆண்டில் தனியார் மயப்படுத்தப்பட்ட பெலவத்த சீனிக் கைத்தொழில் நிறுவனத்தின் தலைமைப் பதவிக்கு இவர் அழைக்கப்பட்டார்.

இந்நிறுவனம் முதலாவது ஆண்டிலேயே லாபத்தை ஈட்டியது. டுபாயிலுள்ள அல் குரைர் குழுமத்தின் கூட்டிணைப்புடன் இலங்கையில் நிறுவப்பட்டுள்ள இரண்டாவது மா ஆலையான செரண்டிப் மா ஆலை (பிரைவேற்) லிமிடெட்டின் தலைவராகவும் விளங்குகிறார்.

அத்துடன், இலங்கை சர்வதேச வர்த்தக சம்மேளனம், இலங்கை தேசிய விவசாய வர்த்தகப் பேரவை ஆகியவற்றின் தலைவராகவும் பணியாற்றுகிறார். கடந்த காலங்களில் இவர் வேறு பல மகிமைக்குரிய பதவிகளையும் வகித்துள்ளார்.

இலங்கை முதலாளிமார் சம்மேளனம், ஊழியர் நம்பிக்கை நிதியச்சபை, இலங்கை தோட்டத் துரைமார் சங்கம், இலங்கை முகாமைத்துவக் கழகம், வர்த்தக சம்மேளன இணைப்பேரவை ஆகியவற்றின் முன்னாள் தலைவர் பதவிகளை வகித்தமை குறிப்பிடத்தக்கது.

இவர் சர்வதேச லயன்ஸ் அமைப்பின் உதவித் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டிருப்பதால் லயன்ஸ் அமைப்பின் செயற்பாடுகள் வரும் காலங்களில் இலங்கையில் மென்மேலும் உத்வேகமடைந்து நமது நாட்டில் ஏழை, எளியவர்களுக்குக் கூடிய சேவைகளை ஆற்ற வழிவகுக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## இலங்கை வங்கி 66ஆவது ஆண்டு நிறைவில்! அதனையொட்டி புதிய சேவைகள் அறிமுகம்

இலங்கை வங்கி தனது 66ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடத் தயாராகி வருகின்றது. அதனையொட்டி ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் தனது வாடிக்கையாளர்களுக்கான புதிய சேவைத் திட்டங்களை அறிமுகம் செய்கிறது. இது தொடர்பாக அறிவிக்கும் செய்தியாளர் மாநாடொன்று இம்மாதம் 27ஆம் திகதி கொழும்பு கிராண்ட் ஓரியண்டல் ஹோட்டலில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்ட இலங்கை வங்கியின் பொதுமுகாமையாளர்; எஸ்.என்.பீ.பலிஹேன இதுபற்றிக் கூறுகையில்:-

வாடிக்கையாளர்களுக்குச் சிறந்த வங்கிச் சேவைகளை வழங்கிவரும் இலங்கை வங்கி இம்மாத இறுதியில் அதன் 66ஆவது ஆண்டு நிறைவையொட்டி பல புதிய வங்கிச் சேவைகளை அறிமுகப்படுத்துகிறது.

அதன்படி, ஒகஸ்ட் முதலாம் திகதி 100 கிளைகளை நிறுவும் திட்டத்தின்கீழ் யக்கலையில் முதலாவது கிளையை வங்கி திறந்துவைக்கின்றது. ஒகஸ்ட் முதலாம் திகதி பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் புதிய சேமிப்புக் கணக்கொன்று அறிமுகப்படுத்தப்படுகிறது.

இப்போது இலங்கை வங்கியில் உள்ள நிலையான சேமிப்புக் கணக்குத் திட்டத்திற்கு மேலதிகமாக மேலும் ஒரு புதிய நிலையான சேமிப்புக் கணக்குத் திட்டம் ஒன்று அறிமுகமாகிறது. இந்தப் புதிய கணக்கு அதிககூடிய வட்டிவீதத்தை வாடிக்கையாளர்களுக்கு வழங்கும்.

இதோடுகூடிய இன்னும் பல சேவைத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும். இலங்கை வங்கி அதன் ஆரம்பத்திலிருந்து இன்றுவரை பெறுமதிமிக்க வங்கிச் சேவைகளை மக்களுக்கு வழங்கிவருகின்றது. வெளிநாட்டில் தொழில்புரியும் எம் நாட்டவர்கள் நலன்கருதி NRFC சேமிப்புக் கணக்குத் திட்டத்தை முதன்முதலாக ஆரம்பித்தது இலங்கை வங்கியாகும்.

NRFC கணக்கைக் கொண்டிருப்பவர்களுக்கும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் கடன் வசதிகள் உள்ளிட்ட நிதிச் சேவைகளையும், இலவச ஆலோசனைகள், விழிப்புணர்வு நிகழ்ச்சி, அஞ்சல் சேவை உள்ளிட்ட நிதிசாரா சேவைகளையும் கடந்த 28 வருடங்களாக இலங்கை வங்கி வழங்கிவருகின்றது. NRFC கணக்கிற்கு மேலும் பெறுமதி சேர்க்கும் நோக்கில் காலத்திற்குக் காலம் அது மாற்றியமைக்கப்பட்டு பல பெறுமதியான சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு சார்ந்த வங்கிச் சேவைகளை மேலும் முன்னேற்றும் நோக்கில் வங்கி அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது.

இதற்கு அப்பால் வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்காக 'எதெர திலின' என்ற சேமிப்புக் கணக்கு ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது. இதன் ஆரம்ப வைப்பு 200 ரூபாவாகும்.

வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர்களின் வசதிகருதி இணையத்தளத்தை ஆதாரமாகக் கொண்ட இலத்திரனியல் மூலம் பணத்தை அனுப்பும் "BOC e Cash" திட்டம் ஒன்றும் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.

NRFC கணக்கை வைத்திருப்போருக்கு வழங்கப்படும் நிதிசாரா சேவைகள் இலவச ஆலோசனை சேவைகள், பயிற்சி வசதிகள், அரபு மற்றும் கொரிய மொழிப் புத்தகங்கள் வழங்கல் போன்ற சேவைகளை மேலும் அபிவிருத்தி செய்யவங்கி திட்டமிட்டுள்ளது. சைப்ரஸ், இத்தாலி மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இலங்கை வங்கியின் பிரதிநிதிகளை சேவையில் நிறுத்துவது தொடர்பான சாத்தியக் கூறுகளையும் வங்கி ஆராய்ந்து வருகிறது.

2005ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் திகதியுடன் முடிவடைந்த அரை ஆண்டில் வரிக்கு முந்திய லாபமாக வங்கி 130 கோடி ரூபாவைப் பெற்றுள்ளது. அதன்படி, இவ்வருட இறுதியில் 300 கோடி ரூபாவை வங்கி இலாபமாகப் பெற எதிர்பார்க்கின்றது. அதேபோல் 2004, 2005 ஆகிய வருடங்களில் 600க்கு மேற்பட்டோர் வங்கியில் ஊழியர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.- என்றார்.






மக்கள் வங்கியின் வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள் பிரிவின் சிறந்த ஊழியர்களுக்கு மக்கள் வங்கி அண்மையில் விருதுகளை வழங்கிக் கௌரவித்தது. 'Service Exellence 2003/2004' என்ற இவ்விருது வழங்கும் விழா அண்மையில் கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடைபெற்றது.

மக்கள் வங்கியின் உயர் அதிகாரிகள் பலர் இதில் கலந்து கொண்டனர். சிறந்த சேவையாற்றிய ஊழியர் ஒருவர் மக்கள் வங்கியில் உயர் அதிகாரி ஒருவரிடமிருந்து விருதைப் பெறுவதைப் படத்தில் காண்க.

சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்

07.08.2005

# அதிகார ஆசையும் பித்தலாட்ட அரசியலும்....





தெற்கு அரசியலில் இப்போது பிரதான கட்சிகளின் நகர்வுகள் அனைத்தும் ஜனாதிபதித் தேர்தலை நோக்கியனவாகவே இருக்கின்றன.

தற்போதைய ஜனாதிபதியான சந்திரிகா தனது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளரையே மீண்டும் ஜனாதிபதியாக்குவதற்கு படாதபாடு படுகிறார். அதேபோல பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் தனது வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்குவதற்காக வீச்சாக நடந்து கொண்டிருக்கிறது.

இலங்கையில் அவ்வப்போது நடக்கின்ற ஒவ்வொரு தேர்தல்களின் போதும், பிரதான கட்சிகள் ஒவ்வொன்றும் தமிழ் மக்களின் இனப்பிரச்சினையை பிரதான பிரசாரத் தளமாக - கருப்பொருளாக - கொள்வது வழமை. அந்த வழமை, இம்முறை ஜனாதிபதித் தேர்தலிலும் விதிவிலக்காக அமையாது என்பது திண்ணம். தமிழர் தலையில் பறையடித்துப் பிரசாரம் செய்வதற்கு சிங்களத் தலைவர்கள் வரிந்து கட்டிக் கொண்டு தயாராகி வருகின்றார்கள். இந்த விடயத்தில் தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா இன்னும் ஒருபடி மேலே சென்று - கடந்த சில மாதங்களுக்கு முன்னரே - தனது பிரசாரத்தை தொடங்கிவிட்டிருக்கிறார். இம்முறை ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரத்துக்கு அவர் பாவித்த முதலாவது உத்தி 'ஆழிப்பேரலை அனர்த்தத்துக்கான பொதுக்கட்டமைப்பு'.

பெரும்பான்மையின மக்களிடமிருந்து மட்டுமல்ல, சிறுபான்மைத் தமிழ் மக்களிடமிருந்தும் கணிசமான வாக்குகளைப் பெற்றுக் கொண்டால் மட்டுமே தேர்தலில் வெல்ல முடியும் என்பது ஜனாதிபதிக்கு நன்கு தெரியும். அதற்காக கடந்த சில மாதங்களாக அவர் ஆடிய நாடகங்களை சொல்லிப் புரிய வைக்கவேண்டிய அவசியமே இருக்காது.

அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டு உதவிகளுக்காக ஏங்கி நின்ற மக்களை பகடையாக்கி சுய லாபம் தேட முற்படும் கேவலமான அரசியல் இங்கு மட்டுமே அரங்கேறிக் கொண்டிருக்கிறது என்று கூறலாம். விடுதலைப் புலிகளோடு பொதுக் கட்டமைப்பை என்ன விதப்பட்டாவது ஏற்படுத்திக் கொண்டதன் மூலம் தமிழ் மக்களின் ஆதரவை பெற நினைத்த ஜனாதிபதி, அந்தக் கட்டமைப்பை அமுல் படுத்தாத வகையில் தடை உத்தரவு வாங்கியதன் மூலம் பேரினவாதிகளின் வெறுப்பிலிருந் தும் தப்பித்துக்கொள்ள முயன்றிருக்கிறார். இதுதான் யதார்த்தம்.

அவரது பேய்க்காட்டுதல்களுக்கு - கபட நாடகங்களுக்கு - சிங்கள மக்கள் சில வேளைகளில் எடுபட்டுப் போகலாம். ஆனால், கடந்த பத்து வருட கால ஆட்சியில் தெற்கு அரசியலில் ஜனாதிபதி சந்திரிகாவின் இத்தகைய நகர்வுகளைக் கண்டு - கேட்டு - உணர்ந்து அறிந்து வைத்திருக்கின்ற தமிழ் மக்களிடத்தில் இந்த முறை அவரது பருப்பு வேகாது என்றே நோக்கர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

## இந்த வருடமா? அடுத்த வருடமா?


இந்த நிலையில் இப்போது அரசியல் வட்டாரங்களில் எழுந்திருக்கின்ற மிகப் பெரிய சர்ச்சை என்னவென்றால் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் இந்த வருட இறுதியிலா அல்லது அடுத்த வருட இறுதியிலா என்பதாகும்.

சந்திரமதனா

அரசமைப்புச் சட்டத்தின் படி நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஒருவர் 6வருடங்கள் பதவி வகிக்க முடியும் என்ற வரையறை தெளிவாக்கப்பட்டிருக்கிறது. அதன் படி 1999ஆம் ஆண்டு தேர்தலில் வென்று பதவியேற்ற ஜனாதிபதி சந்திரிக்காவின் பதவிக்காலம் - ஆறு ஆண்டுகள் - இந்த வருட இறுதியில் முடிவுக்கு வருகிறது.

(VIIIபக்கம் பார்க்க )

# ஒரு மனிதனின் மரணமும் அமைதியின் அவலமும்.....


ஆட்டுக்கடாவை வெட்டி ஆர்ப்பரிக்கும் பாரம்பரிய சடங்கு ஒன்றில் கராங்....


ஜோன் கராங்


துப்பாக்கியையும் குழந்தையையும் சுமக்கும் சூடானியப் பெண்...

இலங்கையிலும் சூடானிலும் கிட்டத்தட்ட சம காலத்தில் உருவாகிய சமாதான சூழல்கள் வெவ்வேறு விதங்களில் கேள்விக்குள்ளாகி இருக்கின்றன.

இலங்கையில் புரிந்துணர்வு உடன்படிக்கையை சரிவர அமுல் செய்வதில் காட்டப்படும் இழுத்தடிப்பு நிலை சமாதான சூழலைப் பெரியளவில் பாதித்திருக்கிறது.

சூடானில் அதிகாரப்பகிர்வு சமாதான உடன்படிக்கையில் கைசாத்திட்ட ஒரு தரப்பின் தலைவர் விபத்தில் அகால மரணத்தைச் சந்தித்துள்ளதால் அங்கு சமாதானம் குழப்பத்திற்குள்ளாகி இருக்கின்றது. சூடான் மக்கள் விடுதலை இயக்கத்தின் தலைவரும் நாட்டின் உப அதிபராக அண்மையில் அறிவிக்கப்பட்டவருமாகிய ஜோன் கராங்கின் அகால மறைவு அந்த நாட்டின் சமாதான முயற்சிகளின் எதிர்காலம் பற்றிய ஐயங்களை எழுப்பியிருக்கின்றது.

சூடானின் முதலாவது உப அதிபராகப் பொறுப்பேற்று மூன்று வார காலத்துக்குள்ளேயே கராங் ஹெலிக்கொப்டர் விபத்தில் உயிரிழந்தமை சூடானிய மக்களை - குறிப்பாக தென் சூடானிய மக்களை - அதிர்ச்சிக்குள்ளாக்கியிருப்பதுடன் சூடானில் நிரந்தர சமாதானத்தை விரும்பும் நாடுகளுக்கும் கவலை அளித்திருக்கிறது.

சமாதான உடன்படிக்கை அமுலுக்கு வந்த பிறகு உலகின் கவனத்தை அதிகம் ஈர்த்துக் கொண்டது சூடான். ஆனால், எவரும் எதிர்பாராத வகையில் நிகழ்ந்துவிட்ட கராங்கின் மறைவு தெற்கு சூடானியர்களின் சமாதான நம்பிக்கை மீது பேரிடியாக விழுந்திருக்கிறது. அண்டை நாடான உகண்டா எல்லையில் நிகழ்ந்த ஹெலி விபத்து சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்டது என்றாலும் கராங்கின் தீவிர ஆதரவாளர்கள் அதனை ஏற்கிறார்கள் இல்லை. விபத்துத் தொடர்பான அவர்களது ஐயங்கள் ஆத்திரமாக வெளிப்பட்டு கலவரங்களாக உருவெடுத்திருக்கின்றன. தலைநகர் கார்ட்டுமில் நிகழ்த்து கொண்டிருக்கும் வன் செயல்கள் இன்னும் தணிந்தபாடாக இல்லை.

கராங்கின் தீவிரமான அர்ப்பணிப்பால் உருவாக்கப்பட்ட அதிகாரப் பகிர்வு சமாதான உடன்படிக்கையை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு உழைக்கப்போவதாக சூடான் மக்கள் விடுதலை இயக்கமும் ஆட்சியாளர்களும் அறிவித்திருக்கின்றனர். வெள்ளை மாளிகையும் அதனையே வற்புறுத்தியிருக்கின்றது.

ஆபிரிக்காவின் மிக நீண்ட சிவில் யுத்தம் என வர்ணிக்கப்படுவது சூடானின் உள்நாட்டுப் போர். 1983 ஆம் ஆண்டுக்குப் பின் தீவிரம் அடைந்த உள்நாட்டுப் போர் இந்த ஆண்டு (2005) ஜனவரியில் சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் வரை சுமார் இரு தசாப்த காலம் நீடித்தது. இதில் கிட்டத்தட்ட இருபது லட்சம் சூடானியர்கள் வரை கொல்லப்பட்டிருக்கின்றனர். பல லட்சம் பேர் இடம்பெயர்ந்து பசி, பட்டினி நோய்வாய்ப்பட்டனர்.

தாஸ்

இந்த உள்நாட்டுப் போரில் சுமார் இருபது ஆண்டுகள் போர் புரிந்தவர் ஜோன் கராங்.

சூடானின் தெற்குப் பகுதியில் வசிக்கும் கிறிஸ்தவ மற்றும் அனிமிஸ்ட் இனத்தவர்களுக்கும், வடக்கில் வசிக்கும் அரபு மொழிபேசும் முஸ்லிம்களுக்கும் இடையிலான பகைமையே சிவில் யுத்தத்தின் கோரப் பிடிக்குள் அந்த நாட்டை மிக நீண்ட காலம் ஏவத்திருந்தது.


கெரில்லா வீரனாக கராங்

தெற்கு சூடானைச் சேர்ந்தவர் காரங். கார்டூம் ஆட்சியாளர்களுக்கு எதிரான போரில் தெற்கு சூடானிய மக்கள் மத்தியில் ஒரு லட்சிய புருஷனாகத் தன்னை வளர்த்துக் கொண்டவர்.

மேற்குலக ஊடகங்கள் கராங்கை மற்றொரு இடி அமீனாகச் சித்திரித்துக் காட்டின.

(VIIIபக்கம் பார்க்க )

# பிரம்மன் படைப்பில் காணாத அதிசயங்கள்......



பெண் வரவேற்பாளர் றொபோ

உலகினில் சனத்தொகை அதிகரிப்பது ஒரு பாரிய சுமையாகக் கருதப்படுகிறது. போதாதென்று இயந்திர மனிதன் எனப்படுகின்ற றோபோக்களின் உற்பத்தியும் அவற்றின் திறனும் வெகுவாக அதிகரித்து வருகிறது.

இனியெல்லாம் வீட்டில் வேலைக்கு ஆள் வைக்கத் தேவையில்லை. ஒரு றோபோவைக் கட்டி மேய்ப்பது மனிதர்களை மேய்ப்பதைவிட மிகச் சுலபமான காரியம். சொன்னதை கச்சிதமாக - வெகு நேர்த்தியாக - மிக விரைவாக - செய்யும்திறன் அதற்குக் கைவந்த கலை.

மேற்கத்தைய நாடுகள் றோபோக்களை இயந்திரங்களாகவே பயன்படுத்தின. யுத்தத்திலும் ஆழ்கடல் பணிகளிலும் அவற்றை ஈடுபடுத்தின. அவற்றை மனிதர்களோடு ஐக்கியமாகப் பழகவிட அவை அதிகம் முயற்சிக்கவில்லை என்றே கூறலாம்.

பிரமனின் படைப்பில் இல்லாத பல அதிசயங்களை ஜப்பானியர்கள் றோபோக்களில் புகுத்தி வருகிறார்கள். இவற்றை வெறும் இயந்திரங்களாகக் காட்டாமல், அழகிய மனித உருவங்களில் உருவாக்கி ஆடை கட்டி அழகு படுத்தி புன்னகை பூக்க வைத்து புதுமை படைத்திருக்கிறார்கள்.

கார் உற்பத்தியில் சாதனை படைத்துவரும் ஜப்பானுடன் அத்துறையில் எந்த மேற்குலக கம்பனியாலும் போட்டிபோட இயலவில்லை. அமெரிக்க வீதிகளை ஜப்பானிய கார்களே நிரப்பி வருகின்றன. இனி ஜப்பானிய றோபோக்கள் உலகெங்கும் உலா வரப்போகின்றன.

ஜப்பானிய றோபோக்கள் விரைவில் செல்போன்களைப் போல பெரும் எண்ணிக்கையில் உலகெல்லாம் பரவி ஆட்சி செய்யப்போகின்றன. அலுவலகங்களில் வரவேற்பு, பாதுகாப்பு பணியாளர் வரவுப்பதிவேடு போன்ற பல காரியங்களைப் பாகுபாடு இல்லாமல் செவ்வனே செய்ய இவை தயாராகி வருகின்றன.



அணி நடை

## அசத்துகிறது ஜப்பான்...!

பல்வேறு மொழிகளிலும் வருபவர்களின் கேள்விகளைப் புரிந்துகொண்டு பதிலளித்து அவர்களை வழிநடத்த றோபோக்கள் தயார். ஜப்பானிய நிறுவனங்களின் றோபோக்கள் தற்போது எலக்ரோனிக் கண்காட்சிகளில் வரவேற்பாளராகப் பணியாற்றி, வருபவர்களை வாசலிலேயே அசத்தி விடுகின்றன. இவற்றுக்கெல்லாம் இருக்கை, படுக்கை, சம்பளம், சாப்பாடு, மதிய இடைவேளை, 'டொயிலட்' வசதிகள் என்றெல்லாம் எதுவும் தேவையில்லை.

ஜப்பானின் Aichi யில் நடைபெறுகின்ற World Expo விற்கு வருகின்ற விருந்தினர்களை வரவேற்பது ஓர் அழகிய பெண் றோபோவின் வேலை. அதனால் முப்பதினாயிரம் வார்த்தைகள்வரை அதுவும் நான்கு மொழிகளில் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப பேசமுடிகிறது.

இசைக்கு ஏற்ப நடனமிடும் றோபோக்கள் குழந்தைகளோடும் மனிதர்களோடும் சேர்ந்து ஆட்டம் போடத் தொடங்கிவிட்டன. இனிக் குழந்தைகள், நோயாளர் மற்றும் முதியோர் பராமரிப்பை கூச்சம், முகச்சுழிப்பு எதுவுமின்றிச் செய்ய இவை முன்வந்துவிடும். எனவே, மாறிவரும் பிஸியான நவயுகத்தில் இவற்றின் சேவைகள் பெரிதும் தேவைப்படும்.

றோபோ ஒன்றை வீட்டில் வாங்கி வைத்துக்கொண்டால் அதனிடம் வேண்டிய மாதிரி வேலை வாங்கலாம். முகத்தை தொங்கப் போட அதற்குத் தெரியாது. அடுத்தவர் தயவில் தங்கி இருக்கின்ற நிலைமை மாறிவிடும். ஒரு சாரதியாக அது இருந்தால் வாகன விபத்துக்கள் அறவே இல்லாமற்போய்விடும்.

இப்படியெல்லாம் ஆகிவிட்டால் மனிதர்களுக்கு என்ன வேலை? வேலையில்லாத் திண்டாட்டம் தாண்டவம் ஆடத்தான் போகிறது என்பதில் சந்தேகம் கிடையாது.

இசைக்கு ஏற்ப நடனம் ஆடுவதும் படிக் கட்டுக்களில் ஏறிக் குதித்து குழந்தைகளுடன் கும்மாளம் அடிப்பதும் அவற்றிற்குச் சுலபமானது. அத்தோடு, ஆபத்து என்றால் உதவிக் கரம் நீட்டவும் அதன் வேகமும் ஆற்றலும் துணை நிற்கும்.

ஒரு மூன்று வயதுச் சிறுமியையும் சாதுரியமான றோபோ ஒன்றையும் ஓர் அறைக்குள் வைத்துப் பூட்டிவிட்டார்கள். சிறுமியின் தாயும் ஓர் எச்சரிக்கைக்காக உள்ளே விடப்பட்டாள். முதலில் குழந்தையும் றோபோவும் விளையாடினார்கள். குழந்தை களைக்கும்வரை சொல்வதெல்லாம் சலிக்காமல் செய்தது அந்த றோபோ.

குழந்தைகள் கொட்டி, சிந்தி, எறிந்து விளையாடும். பொறுக்கி கொடுக்க பெற்றவளுக்கே சில வேளைகளில் பொறுமை இருக்காது. ஆனால், பாவம் றோபோ எதற்கும் அது தயார். சேர்ந்து நடனம் ஆடவும் பாடவும் தாலாட்டவும் அதனால் இயலும்.

குழந்தை களைத்துப் போய் தரையில் படுத்துக் கொண்டது. தூக்கம் அதன் கண்களைத் தழுவும் வேளை றோபோ தாயுடன் பேச்சுக் கொடுத்தது. அது பொறுக்காமல் குழந்தை மீண்டும் துள்ளி எழுந்தது.

இத்தகைய ஆய்வுகளை மேற்கொள்பவர் ஜப்பானிய பொறியியலாளரான Norihiro Hagita என்பவர்தான். இதன்மூலம் றோபோக்களின் பணி தொழிற்சாலைகளோடு நின்றுவிடாது மனித இதயங்களோடும் சங்கமிக்க ஏதுவாகின்றது. விளையாட்டுத் துணையாக, வளர்ப்புப் பிராணியாக, சமூக சேவகர்களாக இவை புதிய பரிணாமம் பெற்று வருகின்றன.

கணனித் தொழில்நுட்பத்தில் எட்டப்பட்டு வரும் பெருமளவு தகவல்களை அடக்கக் கூடிய நினைவகங்கள் (memory) உருவாகி வருவதும் கட்டளைகளுக்கு ஏற்ப தப்பாது துல்லியமாக செயற்படும் ஆற்றலின் அபிவிருத்தியும் நினைக்க முடியாத வேகத்தில் தகவல்களைத் தேடியும் கணித்தும் கொடுக்க வல்ல ஆற்றலும் றோபோக்களில் புகுத்தப்படுதலினால் அவற்றின் ஆற்றல் பற்றிப் பேசத் தேவையில்லை. மனிதன் அடுத்து என்ன செய்வான் என்று சொல்ல முடியாது. ஆனால், றோபோக்கள் அப்படி அல்ல.

Hagita குழுவினரின் அண்மைய ஆய்வுகளில் றோபோக்களின் உடலில் சிலிக்கனாலான செயற்கைத்தோல் அழகிய மனித மா நிறத்தில் போர்த்தப்படுகின்றது. தோலில் புதைக்கப்பட்டுள்ள உணர் கருவிகள் வேறு செயற்பட ஆரம்பிக்கின்றன. அதனை பின்னாலிருந்து தொட்டால் திரும்பிப் பார்க்கவும் சிரிக்கவும் கதைக்கவும் அதனால் இயலுகிறது. ஆனால், அதற்குச் சினக்கத் தெரியாது.

இத்தகைய ஆய்வுகள் ஜப்பானிய Advanced Tele communications Research Institute International இல் நடைபெறுகின்றன. என்றாலும் பல சவால்களை இவை கடந்தாக வேண்டும். மனித ஆணைகளுக்கு ஏற்ப செயற்படும் றோபோக்கள் பிற சூழல் ஒலிகளினால் குழப்பமடைகின்றன. இவற்றை வேறுபடுத்துவது அவற்றிற்குக் கடினமாகவே உள்ளது.

இணையம் மூலம் விடப்படும் சிலவகைத் தகவல்களை றோபோக்கள் பெற்று செயற்பட வைப்பது சுலபமானது எனக் கருதப்படுகிறது. மின்னியல் தகவல் அட்டைகளை இவை புரிந்து கொள்வதனால் தனிப்பட்டவர்களின் வங்கிக்கடன் அட்டைகள், காசாக்கும் இயந்திர அட்டைகள் போன்ற வடிவத்தில் பதியப்படும் தகவல்களை வைத்திருப்போர் அவற்றின் ஊடாக றோபோக்களுடன் தொடர்பாடல் மேற்கொள்வது சுலபமானது எனவும் கருதப்படுகிறது.

*மு.சிவநேசன்*

வரவுப் பதிவேட்டில் தமது அட்டையின் உதவியுடன் றோபோக்களிடம் வரவுப் பதிவை மேற்கொள்ளும்போது அவை அவர்களது பெயரையும் உச்சரித்து Good Morning சொல்லியது ஆய்வொன்றின் போது பாடசாலை மாணவர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

அவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்களை லட்சக் கணக்கில் அல்லது மில்லியன் கணக்கில் இருந்தாலும் தொடர்ந்தும் பெயரிட்டு நினைவில் வைத்திருக்கும் சக்தி இவற்றிற்குச் சுலபமாக வாய்த்துவிடும்.

வெறும் கண்களால் வாசிக்க முடியாத பெருமளவு தகவல்களைக் கொண்ட அடையாள அட்டைகளை இனி ஆளுக்கு ஒன்று விநியோகித்து விடலாம். அதில் பெயர், வயது, தகைமைகள், தொழில் தன்மைகள் என அனைத்துத் தகவல்களும் பதியப்படலாம். அதன் பின்னர் அவர்களை றோபோக்கள் கவனித்துக் கொள்ளும்.

(VII பக்கம் பார்க்க)

## காற்று!

புதிர்க்காற்று
இதமான வசந்தத்தில்
ரிதமாய் வருடிற்று!
தனதுள்ளே
தனதேயான உணர்வுடன்
சுகந்தமாய்
வீசிற்று!
இயலாமையைப் புதைத்துத்
தன்னை இயல்பாக்கிப்
புளகித்துப்
பூரித்திற்று!
இறுமாப்பேதுமற்றுத்
முன்பாட்டில்
சுதந்திரங் கொணர்ந்து,
பூபாளமீட்டி
மகிழ்வின் உச்சியில்
தத்தளித்திற்கு!
தனதின் வேட்கையை
அகத்துள்
பத்திரப்படுத்திப் பின்
புறத்தில்
சின்ன மகவாய்ச்
சிறகடித்து
எட்டிப் பறக்க
எத்தனித்தது!
மனிதத்துள் மரித்திட்ட
சுதந்திரம்
தேனிசையாய்ச்
சிறிசாய்ப் புலப்பட்டு
அதனூடே வெளிப்பட்டு
ஆற்றாமையாய்ச்
சீறிற்று!
தானும் மனிதத்துக்கு
மனோதத்துவ வைத்தியம்
செய்வதாய்
நெகிழ்ந்திற்று!
சற்றே விழிவிரிய
அதனுள்ளும் சிறுதேடல்
எதிர்பார்ப்புக் கலப்புடன்
சிறு ஏக்கம் ஒருசேர
தனதின் மகவுகளைப்
பரிவாய் நோக்கிற்று!
தானும் மனிதத்துள்
மனிதமாய்
ஜனிக்காததையிட்டு
சிலிர்த்துப் போயிற்று!
தனதின் விருப்புகளை
முட்டிப் புறந்தள்ளும்
உலகில்
அதற்கேன் அப்பிறவி?
இடையிடையே
சஞ்சரித்துத் தெம்பூட்டும்
இனிமை அதற்கிருக்க
இனியெதற்கு மனிதப்பிறவி?
இப்படித்தான்
தானே தனைத்தேற்றும்
தத்துவக் காற்று!
இப்போதெலாம்
காற்று
காற்றேயானதையிட்டு
திருப்தியதிர்வில்
சப்தமாய் வீசிற்று!
நிதமும்
புலரும் பொழுதுகளில்
மனசின் ஆளுமையில்
தனக்கேயுரித்தான
தேடல்களுடன்
காற்று!

*ச.நிரஞ்சனி*
யாழ்.கலைப்பீடம்.

# தேசியின் மகத்துவம்



★ எலுமிச்சை ரசத்தைப் பன்னீரில் கலந்து அத்துடன் தண்ணீரையும் சேர்த்து அதிகாலையில் வாய் கொப்பளித்து வந்தால், வாய்ப்புண், ஈறுவீக்கம் முதலியவை குணமாகும்.

★ எலுமிச்சம் பழச்சாற்றையும் தேனையும் சமமாகக் கலந்து ஓர் அவுன்ஸ் வீதம், மலேரியாக் காய்ச்சல் உள்ளோருக்குக் கொடுத்து வந்தால் குணமாகும்.

★ எலுமிச்சம் பழ ரசம், தேன், தக்காளிச்சாறு இவை மூன்றையும் சம அளவு கலந்து, காலை, மாலை, நேரங்களில் வேளைக்கு ஓர் அவுன்ஸ் வீதம் கொடுத்து வந்தால், கல்லீரல் நோய்கள் குணமாவதுடன் உடலும் தென்பாக இருக்கும்.

★ கர்ப்பம் தரித்த நான்காவது மாதத்திலிருந்தே காலையும், மாலையும் எலுமிச்சம் ரசத்தைத் தண்ணீரில் கலந்து அதில் ஒரு கரண்டித் தேனையும் விட்டு நன்றாய்க் கலக்கி அருந்திவர, பெண்களுக்கு சுகப் பிரசவம் ஏற்படும்.

## கற்றுக்கொள்

துன்பம் என்பது வாழ்க்கையின்
முடிவல்ல
அதுவே வாழ்க்கைப் புத்தகத்தின் சிறந்த
அனுபவம்

தோல்வி என்பது சோர்ந்து
போவதல்ல
அதுவே எழுச்சியின் முதற்படி

தடைகள் என்பது முற்றுப் புள்ளியல்ல
அதுவே சாதனைகளுக்கு முதற்புள்ளி

பிரச்சினைகள் என்பது நொறுங்கிப்
போவதற்கல்ல
அதுவே வாழ்க்கைப்படியின் சிறந்த
அத்திபாரம்

தவறு என்பது நினைத்து
வருந்துவதல்ல
அதுவே திருந்தி வாழ்வதற்கான
சந்தர்ப்பம்

வாழ்க்கை என்பது ஒரே சீரானதல்ல
துன்பம், தோல்வி, தடைகள்,
பிரச்சினைகள் என்பன நிறைந்ததே.

## கொடிபோல் உடல் வேண்டுமா......



வாழைத் தண்டை மிக்சியில் போட்டு ரசமாக்கிக் கொத்துமல்லி, இஞ்சி, பூண்டு முதலியவற்றைப் போட்டு கொதிக்க வைத்து இறக்கி, அதில் இரண்டு தேக்கரண்டி எலுமிச்சைப் பழச்சாறு, உப்பு முதலியவற்றைச் சேர்த்து அருந்தினால் உடல் பருமன் குறையும். தினமும் ஒருவேளை வீதம் மூன்று மாதங்கள் வரை சாப்பிட்டால், உடல் பருமன் குறையும்.



# வானளாவ புகழ் பரப்பும் பெண்களின் சாதனைகள்

“மாதர் தம்மை இழிவு செய்யும் மடைமையைக் கொளுத்துவோம். மாதர் மானங் காக்கும் வீரர்கட்கு மாலை வாங்கிப் போடுவோம்” என்ற பாரதியின் கருத்திற்கு இயைவாக, இன்று உலகமெலாம் பேசப்படும் பெண் ஆண்மைக்கு நிகராக வீறு கொண்டு சாதனை புரியத் தொடங்கிவிட்டாள். ‘வீழ்மின் போயின் வாழ்மின்’ என்று மரகத கீதம் பாடமுனைகின்றனர் பெண்கள்.

வீட்டுக்குள்ளே பூட்டி வைப்போமென்ற விந்தைமனிதர் தலை கவிழ்ந்தார். நாட்டையும் வீட்டையும் காக்க வீறு கொண்டெழுந்து விட்டனர் பெண்கள். பெண்களுக்கு மென்மையைக்காட்டி இயலாதவர்கள் என்று தம்பட்டமடித்த கூட்டம் இன்று தலைகுனிய ஆரம்பித்து விட்டது. பெண்மையின் ஆற்றல்கள் இக்கலியுகத்துக்கு புதுமை அன்று. அன்று தொட்டு இன்று வரை பெண்கள் வீறு நடை போட்டனர். ஆனால் இடைக்காலத்திலேயே பெண்கள் ஒதுக்கப்பட்டனர். அவர்களது சிறந்த வாழ்வு பறிக்கப்பட்டது. பெண்கள், அடுக்களைப் பூனைகள், பெண்களுக்கு ஏது கல்வி என்று ஒதுக்கினர்.

இலக்கியங்களிலே பெண்மை சிரிக்கும் ஆற்றல்களைக் கண்டு வியந்து நிற்கக் கூடிய பெருமைகளை அறிய முடிகின்றது. தமிழில் புலமை வாய்ந்த இன்றும் புகழேணியில் நிற்கின்ற தமிழ் ஔவையைக் காணுங்கள். இந்து மதத்திற்கு வழிகாட்டி இன்று வியத்தகு சைவத்திற்கு மூலவேர் காரைக்கால் அம்மையார், மீராபாய், ஆண்டாள் என்போரைக் காண முடிகின்றது.

எமது தமிழரது பண்பாட்டின் சிகரங்களாகத் தெய்வங்களை இலக்கியம் கண்ட வீறு நடைபோடும் பெண்மையைச் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. தன் கணவர் திருடனல்ல என்பதை மதுரைமா நகரில் காட்டிய கண்ணகி, பொழுதுவிடிந்தால் தன் கணவன் இறந்து விடுவான் என்பதற்காகப் பொழுதையே விடியச் செய்யாது காத்த நாளாயினி, யமனோடு வாதாடி தன் கணவனது உயிரை மீட்ட சாவித்திரி, தன் கற்பின் வலிமையால் காமக்கண் கொண்ட வேடர்களை எரித்த தமயந்தி இவர்கள் எல்லாம் பெண்மைத் தெய்வங்கள்.
இன்று உலகம் எங்கும் வீறு நடை பயிலுகின்றனர் பெண்கள். உலகத்தில் விஞ்ஞானிகளாகப் பெண்கள் இல்லை என்ற நிலையை முறியடித்து விண்கலம் சென்று மீண்ட கற்பனா, அது மட்டுமல்ல இன்று இலங்கையின் அதிபர், இந்தியாவின் பிரதமர், உலக விளையாட்டு வீராங்கனை என்ற பெரும் பட்டியல்கள் பெண்மைக்கு இருப்பதிலிருந்து பெண்களின் பெருமை வானளவு காணப்படுவது யாராலும் மறைக்கவோ மறக்கவோ முடியாது.

- இ-ஸ்ரீவாணி,
*தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.*

## அர்த்தமுள்ள வாழ்விற்கு...

*ஆரோக்கியமான மன நிலையை நாம் பெறுகின்ற போது மற்றவர்களுடன் எப்படிப் பழகி வெற்றி பெறுவது என்பதை நாம் தீர்மானித்துக் கொள்ளமுடியும்.*

# நேரத்தைத் திட்டமிட்டு செயற்படுத்தினால் ‘ரென்ஷனில்’ பாதி குறைந்துவிடும்



எமது வாழ்நாளில் நேரம் என்பது பொன்னான ஒன்றாகக் காணப்படுகின்றது. எங்கு பார்த்தாலும் யாரைப்பார்த்தாலும் நேரம் போகுது; நேரமில்லை என்ற பேச்சுகள்தான் காணப்படுகின்றன.
இந்த இடத்தில்தான் நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும். நேரம் எப்போதும் போவதில்லை. அதனை நாம் தான் வீணாகப் போக்கிக் கொண்டிருக்கின்றோம். ஆனால், அதனால் எந்தவிதமான பயனும் எமக்குக் கிடைப்பதில்லை என்பது உண்மையிலும் உண்மையானது. ஆனால், எவருமே அது பற்றி அலட்டிக்கொள்வதில்லை. நேரத்தை நமக்கு சரிவரச் செலவழிக்கத் தெரிவதில்லை என்பதை நாம் ஒப்புக்கொள்ளத் தான் வேண்டும். எவ்வளவுதான் விவரமானவர்களாக இருந்தாலும் எல்லோரும் இந்த விடயத்தில் கோட்டை விட்டுவிடுகிறார்கள். நேரம் பலரது வாழ்விலும் திறந்து வைக்கப்பட்ட கற்பூரமாகக் கரைந்து கொண்டிருக்கின்றது.
தினமும் 24 மணி நேரத்தை நாம் எப்படிச் செலவழிக்கிறோம் என்பதைப் பொறுத்தே எமது வாழ்க்கை நிலை நிர்ணயிக்கப்படுகின்றது.
நேரம் என்பது இருபுறமும் கூர்மையுள்ள கத்தியைப்போன்றது. அதனை நாம் சரிவரப் பயன்படுத்தாவிட்டால் அதுவே நமது முதல் எதிரியாக மாறிவிடும்.
நாம் 24 மணி நேரத்தில் 14மணி நேரத்தை வீணடிக்கின்றோம். நாம் அறிந்த ஏனைய விரயங்களை விட நேர விரயம்தான் மிகவும் மோசமானதாக உள்ளதாம்.
நேரம் என்பது ஆண்களை விடப் பெண்களையே மிகவும் ஆக்கிரமிக்கின்றது என்பது மறுக்க முடியாத உண்மை.
பெண் வீட்டு வேலைகள், வெளிவேலைகள், பிள்ளைகளைப் பராமரித்தல் போன்ற சகல வேலைகளையும் செய்ய வேண்டியவளாக உள்ளாள். ஆனால், அவள் நேரத்தை திட்டமிட்டுச் செலவழிக்க முன்வருவதில்லை. ஏனோதானோ என்று அவதிப்பட்டு, அந்தரப்பட்டு, ‘ரென்ஷனாகி’ அரை குறையாக வேலைகளை முடித்துக் கொண்டு சாப்பாட்டில் கூட கவனமெடுக்காமல் ஓடித் திரிவாள்.
இதனால், ஏற்படப்போகும் பின்விளைவுகள் என்ன என்பதைக் கூட அவள் எக்கணமும் சிந்திப்பதில்லை. அதற்குக் கூட அவளுக்கு நேரம் இருப்பதில்லை. நேர முகாமைத்துவம் இல்லாமல் போவதால் விரைவில் அவள் ஒரு நோய் வாய்ப்பட்டவளாகக் கூட மாறி விட வாய்ப்புகள் உண்டு. நாம் நேரத்தைத் திட்டமிட்டு வேலைகளைச் செய்வோமேயானால் எமக்கு ஏற்படக்கூடிய எவ்வளவோ பாதிப்புகளைத் தடுக்க முடியும். அதுமட்டுமல்லாது ஓய்வு எடுப்பதற்குக்கூட எமக்கு எவ்வளவோ நேரம் கிடைக்கும்.
நாம் அன்றன்றாட வேலைகளை அன்றே செய்து முடித்தால் கூட எமக்கு எவ்வளவோ நேரப் பிரச்சினை தீர்ந்து விடும். அது மட்டுமன்றி வீணாக நேரத்தை போக்கிக் கொண்டு கதை அளந்து கொண்டிருக்காது, இருக்கும் வேலைகளில் எதையாவது செய்து முடிக்க வேண்டும்.
என்ன பெண்களே! இனியாவது உங்களுக்கு ஏற்படும் நேரப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கு முயற்சி செய்வீர்களா? முயன்று பாருங்களேன். வெற்றி உங்கள் பக்கம். சந்தோசமும் உங்கள் கைகளில் மட்டுமே!

- கங்கா கணேசன்.

# சந்தியாவின் கடிதங்கள்



**ஹாய் பிரியா,**

உன் கடிதம் கண்டேன் . நான் தொடர்ந்து அறிவுரை கூற வேண்டும் என்று கேட்டிருந்தாய்......

அறிவுரைகளை கூறும் அளவிற்கு நான் பெரிய மனிசியுமல்ல; அனுபவத்தில் முதிர்ந்தவளுமல்ல. ஆனால், என் மனதில் தோன்றும் கருத்துக்களை எடுத்துக்கூறி நல்வாழ்வு வாழ என் சக தோழியருக்கு வழி காட்டுவதில் மிக விருப்பமுடையவளாய் இருக்கின்றேன்.

அண்மையில் பெண்கள் அமைப்பு ஒன்று நடத்திய பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அப்பயிற்சிப் பட்டறையில் கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றது.

அக் கலந்துரையாடலில் சட்டத்தரணி ஒருவர் கூறிய கருத்து என் மனதைத் தொட்டது. அதாவது வன்முறைக்கு எதிராக வன்முறையைப் பிரயோகிப்பதை விட, அந்த வன்முறையை விட்டுவாழும் தகுதியைப் பெண்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதே அக்கருத்து.

அதாவது, ஒரு கணவன் மனைவியைத் தினமும் துன்புறுத்துகின்றான். அதை நாளும் பொழுதும் தாங்கிக் கொண்டு அம் மனைவி அவனுடனேயே வாழ்க்கை நடத்துகின்றாள். இதற்குக் காரணம் அப்பெண் தன் கணவனில் தங்கி வாழ்ந்ததே.

பொருளாதாரத்தில் தன்னை நிலைநிறுத்துவதில் பெண்கள் அதிகம் முனைவதில்லை. திருமணத்திற்குமுன் தனக்கென்று ஒரு தகுதியை [தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளும் வகையில்] வளர்த்துக் கொள்ளவேண்டும். அத்துடன், வீட்டில் முடங்கி விடக் கூடாது. தன்னை ஒரு தொழிலில் இணைத்துக் கொள்ளவேண்டும்.

இதன் மூலம் தன் குடும்பத்தின் பொருளாதாரத்தில் பங்கு கொள்வதுடன் தன் எதிர் கால வாழ்விற்கும் ஒரு முன் ஆயத்தத்தை மேற்கொள்ளலாம்.

அதாவது, கணவன் தன்னை விட்டுப் பிரிந்தால் தான் வருமானத்துக்கு என்ன செய்வதென்று பல பெண்கள் பயப்படுகின்றார்கள். தன் குழந்தைகளின் கல்வி பாதிக்கப்படும். அவர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாகிவிடும் என்றும் குழம்புகின்றார்கள். இதனால், கணவன் அடித்தாலென்ன, மனதை மிகவும் புண்படுத்தினாலென்ன எதையுமே சகித்துக் கொள்கின்றார்கள். குறிப்பாக, கணவன் தகாதவழி சென்றால்கூட தட்டிக் கேட்க முடியாமல் அடங்கிப் போகின்றாள்.

இதை வெல்வதற்கு அவன் [கணவன்] அடித்தால் திருப்பி அடிப்பது பிரச்சினைக்குத் தீர்வல்ல. அது மீண்டும் மீண்டும் பிரச்சினையைத் தோற்றுவிக்கும்.

எனவே, சகிக்க முடியாதளவு பிரச்சினைகள் ஏற்படும் போது [இதைக் கவனிக்கவும்]அதிலிருந்து விலகி சுயமாக வாழ முனைய வேண்டும்.

இதற்கு நமக்கென்று ஒரு பொருளாதாரத்தை உருவாக்க வேண்டும் - இதுவே அவர் சொன்ன கருத்து.

எனவே பிரியா! கல்வி கற்பது மட்டும் பெண்களின் முன்னேற்றத்திற்கு வழி சமைக்காது.ஒரு தொழில் துறையில் இணைந்து தன்னைப் பலப்படுத்த வேண்டும் என்பதே எனது கருத்து.

**பிரியமுடன் சந்தியா**

# எடுப்பும் மிடுக்கும் மிகுந்த 'அன்னபூரணி அம்மாள்'



வல்வெட்டித்துறையில் இராமசாமிப் பிள்ளை போன்ற பலர் கப்பல் முதலாளிகளாக இருந்தனர். சின்னத் தங்கம் என்ற மங்கை நல்லாளும் ஒரு கப்பல் முதலாளியாக இருந்தாள். கப்பல்களுக்கெல்லாம் ஆதிலெட்சுமி, திருநிலை நாயகி, சுபத்திரையம்மா போன்ற பெண்பாற் பெயர்களும் நரசிம்மசாமி, சோமசுந்தரம், சொக்கலிங்கம் போன்ற ஆண்பாற் பெயர்களும் சூட்டப்பட்டன. பிறநாட்டினரது நீராவிக் கப்பல்கள் மற்றும் இயந்திரம் பொருத்தப்பட்ட கப்பல்களோடு போட்டி போட்டுக் கொண்டு தமிழருடைய கப்பல்கள் திரை கடலோடித் திரவியம் தேடிய வரலாறு திகைப்பையூட்டுவனாகும். அடிமை களைக் கொண்டு துடுப்புகளை இயக்கிக் கப்பலோட்டிய கிரேக்க, உரோம அரசர்களையும் நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். 15ஆம் நூற்றாண்டில் உலகப் புகழ் பெற்ற மாலுமிகளான 'கொலம்பஸ்' மற்றும் 'வஸ்கொடகாமா' போன்ற பிரபல மாலுமிகள் முறையே அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளை அறிந்து கொண்ட திறனையும் நாம் நினைவு கூரவேண்டும். கடலாதிக்கத்தில் ஆங்கிலேயர் கொண்டிருந்த ஆதிக்கம்தான் அவர்கள் பல நாடுகளிலும் சென்று குடியேறி ஆட்சி செய்ய வழி சமைத்தது. தமிழர்களுக்குக் கிடைத்த அத்தகைய சந்தர்ப்பங்களை அவர்கள் சரியாகப் பயன்படுத்தவில்லை. அடைவிட இயற்கையினால் அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட பாரிய கடற்கோளாறுகள் அவர்களுக்குப் பின்னடைவை ஏற்படுத்தின என்று கூறுவதில் தவறில்லை.

'அன்ன பூரணி அம்மாள்' என்ற பெயர் இந்தியாவிலுள்ள பெனாரிஸ் என்ற இடத்தில் கோயில் கொண்டிருக்கும் பெண் தெய்வத்தின் பெயரென அறியக் கிடைக்கிறது. எதற்காக இந்தப் பெயர் அக்கப்பலுக்குச் சூட்டப்பட்டது என்பதற்கு ஆதார பூர்வமான தகவல்கள் இல்லை. கப்பலைக் கட்டியவரின் நேர்த்திக் கடனாக இருக்கலாம். வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சுந்தரமேஸ்திரியாரே இக் கப்பலைக்கட்டினார். ரங்கூன் தேக்க மரப்பலகைகளாலும் உள்ளூர் வேப்பம் பலகைகளாலும் 1930ஆம் ஆண்டளவில் பிரித்தானிய சரக்குப் பாய்க்கப்பலின் உருவில் இது அமைக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. தமிழ் நாட்டைச் சேர்ந்த நாகப்பச் செட்டியாரே சுந்தரமேஸ்திரியாரைக் கொண்டு இதனைக் கட்டுவித்தார். வல்வெட்டித்துறைத் துறைமுகத்தில் ஐம்பதிற்கும் மேற்பட்ட கப்பல்கள் அடுக்கடுக்காக நங்கூரமிட்டுக் கிடப்பது வழக்கம். இது ஒரு தனிக்காட்சியாக இருக்கும். அன்னபூரணி அம்மாளின் நீளம் 90 அடிகளாகும். எடுப்பும் மிடுக்குமான தோற்றத்துடன் அலைகளில் அசைந்து அலை அரசிபோல் நின்றது.

அந்த நாள்களில் அமெரிக்காவிலிருந்து ஒரு கோடீஸ்வரர் இலங்கைக்கு வந்திருந்தார் . இவரின் பெயர் வில்லியம் அல்பேர்ட் றொபின்சன் என்பதாகும். இவர் ஒரு பிரபல்யமான எழுத்தாளரும் கடலோடியுமாவார். 1936ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இவர் வல்வெட்டித் துறைமுகத்திற்கு வந்தபோது அங்கு நின்ற கப்பல்களை நுணுக்கமாக ஆராய்ந்து பார்த்தார். அன்னபூரணி அம்மாளின் மிடுக்கான தோற்றப் பொலிவில் தம்மைப் பறிகொடுத்தார்.

**நா.க.சண்முகநாதபிள்ளை**

எப்படியாவது அதனை வாங்கிவிடத் தீர்மானித்தார். அதனை வாங்கி அமெரிக்காவிற்குக் கொண்டு செல்லவும் ஆசைப்பட்டார். அந்தக் கப்பலின் தண்டயல் அல்லது மேஸ்திரியார் கனகரெத்தினம் - தம்பிப்பிள்ளை என்பவருடன் தொடர்பு கொண்டார். தம்பிப்பிள்ளை ஒரு நிதானமும், கண்டிப்புமுள்ள பேர்வழி. றொபின்சன் ஓர் அமெரிக்கச் செல்வச்சீமான்களில் ஒருவர். அத்துடன், கடலோடும் கலையில் முடிசூடா மன்னனாகவும் திகழ்ந்தார். பசுபிக் சமுத்திரத்தில் மணல்திட்டு ஒன்றைக் கண்டு பிடித்ததற்காக, அமெரிக்க அரசின் பல்லாயிரக் கணக்கான ரூபாய்களைப் பரிசாகப் பெற்றவர். இவரின் ஆற்றலில் தன்னைப் பறிகொடுத்த புளோறன்ஸ் என்ற செல்வச்சீமாட்டி இவரைக் காதலித்தாள். அவள் மூலமாகவும் இவருக்குச் செல்வம் சேர்ந்தது. அன்னபூரணி அம்மாளை வாங்கித்தரும்படி விடாப்பிடியாக நின்றார். ஆனால், தம்பிப்பிள்ளை கையை விரித்துவிட்டார்.

வல்வெட்டித்துறையில் கடைசியாகத் கட்டப்பட்ட கப்பல் தான் அன்னபூரணி அம்மாள். இங்கு கப்பல்கட்டியவர்கள் அகில உலகிலுமே அத்துறையில் சிறந்தவர்களாக விளங்கினர். இதனை றொபின்சனும் ஒப்புக்கொண்டார். அதனால் அன்னபூரணியின் மேற்கொண்ட விருப்பம் மேலும் அதிகரித்தது, அதனை வாங்கி, பசுபிக் சமுத்திரத்திலுள்ள திமிங்கிலங்களைப் பிடித்து விற்றுப் பெரும் செல்வம் ஈட்டவேண்டும் என்றும் எண்ணினார். இதற்காகக் கதிரவேற்பிள்ளை என்பவரின் உதவியுடன் நாகப்பச் செட்டியாரிடம்



பிரதம தண்டயல் கனகரெத்தினம் தம்பிப்பிள்ளை

சென்று அன்னபூரணி அம்மாளை வாங்கிக் கொண்டார். இதற்கு அவரின் காதலியான **'Brigantire Florence C.Robnson'** என்ற பெயர் பின்னர் சூட்டப்பட்டது. வல்வெட்டித்துறையில் நிறுத்தப்பட்டிருந்த அன்னபூரணி அம்மாளுக்கு பழைய தண்டயலான தம்பிப்பிள்ளையையே - மீண்டும் தண்டயலாக நியமித்தார். கப்பல் கொழும்புத்துறைமுகத்திற்கு ஓட்டிச் செல்லப்பட்டது. அங்கிருந்து அமெரிக்காவிற்கு ஓட்டிச் செல்வதற்கான முயற்சிகளில் றொபின்சன் ஈடுபட்டார்.

*வளரும்*

---

# யாழ். பாணம் கவலை



புதிதாக அறிமுகமாகும் ஒருவரது குணஇயல்பைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளாது, அவர் மீது நம்பிக்கை கொள்ளும் தன்மை போன்று – அரச மற்றும் தனியார் துறைகள் புதிதாக அறிமுகப்படுத்தும் நடைமுறை, பாவனைப்பொருள் மற்றும் சேவை என்பவற்றின் தரத்தையோ, விளைவையோ, அறியாமல் அவற்றை வரவேற்று ஆதரிக்கும் அப்பாவித்தனம் யாழ்ப்பாணத்தவர் மத்தியில் நிலவி வருவது கண்கூடு. அத்தகைய யாழ்ப்பாணத்தவர் மத்தியில் எனது மனைவியும் ஓர் அங்கமே.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் கட்டுப்பாடின்றி, தொடர்ச்சியாகப் பார்த்து ரசிக்கும் பழக்கமே, இன்றைய மாணவ சமுதாயத்தின் கல்வித்தர வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாகும். இது அண்மைக் காலமாக யாழ். குடாநாட்டுப் புத்திஜீவிகளால் சுட்டிக்காட்டப்படும் விடயமாகும்.

வசதியற்ற சூழலிலும் சரி, வசதிகள் பல வாய்ந்த நிலையிலும் சரி, யாழ்ப்பாணத்தவர்கள் நிலை தளம்பாது வாழ்வதன் ரகசியம், அவர்கள் தமது கடந்து போன வாழ்க்கை அனுபவங்களை இலேசில் மறக்காது வாழப் பழகிக் கொண்டிருப்பதுதான் என எனது சின்ன வயதில் பலர் கூறக் கேட்டிருக்கிறேன். மனதில் பதிந்துவிட்ட அந்த உண்மையைப் பின்பற்றி வாழப் பழகிப் கொண்டதால் எனது வாழ்க்கை எப்போதும் தெளிந்த நீரோட்டம் போன்றமைந்தது.

அன்று மாலை வீட்டில் உருவான பிரச்சினைக்கும் இதுவே அடிப்படை.

கடந்த சில மாதங்களாக குறிப்பிட்டதொரு தொலைக்காட்சிச் சேவையின் ஒலிபரப்பு, – தினமும் அடிக்கடி தடங்கல்களுக்கு உள்ளாகிறது என்பது எனது மனைவியின் ஆதங்கம். கடந்த இரு வாரங்களில் இது குறித்து பல தடவைகள் மனைவி என்னிடம் முறையிட்டுக் கொண்டதுண்டு. மனைவிக்கு முக்கிய சிரமமாய் அமையும் இந்த விடயம் என்னைப் பொறுத்தவரை மிகமிகச் சாதாரணமானதொன்று. போதாததற்கு நான் ஒரு தொலைக்காட்சி ரசிகனல்ல. எனவே, நான் இதனைப் பெரிதுபடுத்திக் கொள்ளாதது நியாயமே!.

இன்றைக்கும் மனைவியிடமிருந்து அதே முறையீடு; 'எங்கள் தொலைக்காட்சிப்பெட்டியில் ஏதாவது பிழை ஏற்பட்டிருக்கக் கூடும்' என்கிறேன் சுவாரஸ்யமில்லாமல்....

'உங்களுக்கு எப்போதுமே குதர்க்கமாகப் பேசித் தான் பழக்கம்; நான் எத்தனையோ பேரிடம் விசாரித்து விட்டேன்; தங்களுக்கும் இதே பிரச்சினைதான் என்கிறார்கள் அவர்கள்' என்கிறாள் மனைவி குரலில் காட்டத்துடன்.....

தொடர்ந்து, குறிப்பிட்ட தொலைக்காட்சி ஒலிபரப்பை தடங்கலின்றிப் பார்க்க இயலாதிருப்பதாகக் கூறும் அண்டை அயல் பெண்களின் பட்டியலை ஒப்பிக்கிறாள் எனது மனைவி.

சரி தான்; அண்டை அயல் பெண்களின் அரட்டையில் கூட இந்த விடயம் அலசப்பட்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்கிறேன்.

சரி. இப்போது ஒப்புக்காகவேனும் ஏதாவது சொல்லியாக வேண்டுமே!

'இதற்கு என்னால் என்னப்பா செய்ய முடியும்?' என்கிறேன் சுவாரஸ்யமில்லாமல்.......

'இதைப்பற்றி யாருக்காவது அறிவிச்சு விடுங்கோ என்று நானும் நாலைந்து முறை சொல்லிப் போட்டேன்; நீங்கள் கவனிக்கிறியள் இல்லை' என்கிறாள் மனைவி.

'முறையீடு செய்ய வேண்டிய எத்தனையோ அலுவல்களுக்கு அதனால் பலனேதும் கிட்டாதென்று நினைத்து நான் முறையீடு செய்யாமல் விட்டு விட்டேன். போயும் போயும் இதற்குப் போய் நான் முறையீடு செய்யட்டோ?' எனது பேச்சு என் மனைவியின் கோபத்தைத் தூண்டுகிறது.

'கொழும்பிலை எல்லாம் இப்படி தடைப்படுவதில்லையாம்'

இது மனைவியின் ஆற்றாமையா? விரக்தியா? என்று என்னால் தீர்மானிக்க முடியவில்லை.

வேண்டுமானால் 'செய்தி' ஒலிபரப்பாகப்போகிறது? இன்றைக்காவது ஒருக்கால் பாருங்கோ!

நேரடியாக நிரூபித்துக் காட்டும் முயற்சி. தொலைக்காட்சியில் செய்தி அறிக்கை.

ஆரம்பமே அபசகுனம் மாதிரி.

'இன்று நாடாளுமன்றத்தில் கல்வி அமைச்சுக்கான மேலதிக மானிய ஒதுக்கீட்டு மசோதா வாக்கெடுப்பு ...... [தடங்கல்] ... மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது'

'பார்த்தியளோ? இப்படித்தான் அடிக்கடி விக்கி விக்கி...' மனைவி என்னைப் பெருமையுடன் பார்க்கிறாள்;

'சரி போகட்டும், எத்தனை மேலதிக வாக்குக்களால் நிறைவேற்றப்பட்டால்தான் எனக்கென்னவாம் வந்துவிடப் போகுது' இதைக் கேட்டு மனைவியின் கண்கள் கோபம் கக்குகின்றன.

செய்தி அறிக்கை தொடர்கிறது....

விளையாட்டுச் செய்திகள் ..... இலங்கை மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையே கண்டியில் நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் நான்காம் நாளான இன்று ....... [தடங்கல்]........ வெற்றி பெற்றது.

கிரிக்கெட் ரசிகனான எனக்கு வந்த இந்தச் சோதனை மனைவிக்கு உற்சாகத்தை அளிக்கும் ஒன்றாக அமைந்தது.

'பார்த்தியளோ! பொறுத்த நேரத்தில் இப்படித்தான் காலைவாரி விட்டுவிடுகிறது'

வெற்றிப் புன்னகையுடன் மனைவி கூறுகிறாள். உண்மையில் எனக்கும் இப்போது கோபம் வரத்தான் செய்கிறது. மனைவியின் முன் தோல்வியை ஒப்புக்கொள்ள விரும்பாமல் மௌனமாகிறேன். இருந்தாலும் எவர் வென்றாலென்ன? எவர் தோற்றலென்ன? குடியா முழுகி விடப் போகிறது என்று மனது சமாதானம் சொல்கிறது.

செய்தி அறிக்கை மீண்டும் தொடர்கிறது....

'இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளீதரன் இந்தப் போட்டியில்.....[தடங்கல்] விக்கெற்றுக்களைக் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்க விசேட அம்சமாகும்'

இப்போது தொலைக்காட்சிப் பெட்டியைத் தூக்கி நிலத்தில் போட்டு உடைக்க வேண்டுமென்ற அளவுக்கு எனக்குக் கோபம் தலைக்கேறுகிறது.

மனைவியோ இமயத்தின் உச்சியில் வெற்றிக் கொடி நாட்டிய பாவனையில் இகழ்ச்சியாக என்னைப் பாக்கிறாள்.

இருந்தாலும் விட்டுக் கொடுக்காமல் 'முரளிதரன் எத்தனை விக்கெற்றுக்களைக் கைப்பற்றினார் என்று தெரிந்து கொள்ளாவிட்டால் தலையா வெடித்து விடப்போகிறது? நாளை காலை பத்திரிகையில் அத்தனை விவரமும் வெளிவரும்தானே' என்கிறேன் நான்......

'உங்களை ஆண்டவனால் கூட திருத்தமுடியாது!' . என்றவாறே இருக்கையிலிருந்து எழுந்து கொள்கிறாள் மனைவி.

'கொஞ்சம் இரப்பா....! இப்படியே இந்தத் தொலைக்காட்சிச் சேவை தொடர்ந்தால், யாழ்ப்பாணத்துப் புத்திஜீவிகளைக் கவலைப்பட வைத்திருக்கும் பிரச்சினைக்குத் தானாகவே தீர்வு கிட்டி விடும்' என்கிறேன் நான்....

எதுவும் புரியாமல் என் முகத்தைக் கேள்விக் குறியுடன் பார்க்கும் மனைவியிடம் சிரித்தபடியே இப்படிச் சொல்லி வைக்கிறேன்...

'இதே விதத்தில் தொலைக்காட்சிச் சேவை தொடர்ந்தால் வேண்டாமடா இந்தத் தலைவலி என்று மாணவ சமுதாயம் புத்தகங்களைத் தூக்கிக் கொண்டு படிக்கப்போய் விடுவார்களில்லையா?' என்கிறேன் நான்.....

'உங்களிடம் முறையிட்டு ஒரு முடிவும் கிட்டப் போவதில்லை' என்கிறாள் மனைவி விரக்தியாக.....

நானும் ஒப்புக்குச் சொல்வது போல் வேதாந்தம் பேசுகிறேன்.

'நாங்கள் சுட்டிக் காட்டுகிறோம். நீங்கள் முடிவெடுத்துக் கொள்ளுங்கள்' முறைப்போடு நோக்கும் மனைவியை நோக்கிப் புன்சிரிப்புடன் கூறுகிறேன். 'சும்மா போய் உம்மடை வேலையைப் பாரப்பா! நாட்டிலை கவலைப்படுவதற்கு எத்தனையோ முக்கிய விஷயங்கள் இருக்க, நீங்கள் போயும் போயும் இதற்காகக் கவலைப்படுகிறீர்களே!'

**பொன்வேளன்**

வாராந்தம் வெளியாகும் இப்பத்தியில் குறிப்பிடப்படும் பாத்திரங்கள் எவையும் தனிப்பட்ட முறையில் எவரையும் குறிப்பிடுவதில்லை. சென்றவாரம் 'நா காக்க! காவாக்கால்' என்ற தலைப்புடன் வெளிவந்த ஆக்கமும் இதற்கு உட்பட்டதே. (ஆ-ர்)

# குழந்தையின் முதல் பரவசம்



## தாய்ப்பாலே...!

**ஆதி** காலம் தொட்டே தாய்ப்பாலின் முக்கியத்துவம் உணரப்பட்டு வந்துள்ளது. உமையம்மையின் ஞானப்பாலை உண்ட திருஞான சம்பந்தர் தனது மூன்றாவது வயதிலேயே திருமுறைகள் ஓதக்கூடிய சக்தியைப் பெற்றார் என்று புராணங்கள் கூறுகின்றன. எது எவ்வாறாயினும் தாய்ப்பாலானது குழந்தைக்கு இன்றியமையாத ஊட்டச்சத்து மட்டுமல்லாது, பல்வேறு வித நோய்களினின்றும் குழந்தையைக் காக்கும் மருந்தாகவும் அமைகின்றது. குழந்தைக்குக் கிடைக்கக் கூடிய அதி சிறந்த உணவு தாய்ப்பாலாகவே அமைய முடியும்.

குழந்தை பிறந்து 24 மணித்தியாலத்தில் சுரக்கப்படும் தாய்ப்பாலை Colostrum என்போம். இதில் சில வகையான Lysozymes மற்றும் சில Antivodies காணப்படுகிறது. அது Newborn இல் வரும் Acute gastroenteritis மற்றும் சிலவகையான Ordinary respiratory Tract infections இல் இருந்து பாதுகாக்கின்றது. பிள்ளை அழும் போதெல்லாம் தாய்ப்பால் ஊட்டலாம் என குறிப்பிட்டாலும் பொதுவாக 2 மணி நேரத்திற்கு ஒருமுறை பாலூட்டல் சிறப்பானதாகக் கொள்ளப்படுகிறது. இரண்டு மார்பகங்களிலும் மாறி மாறி பாலூட்ட விடுதல் நன்று.

ஒரு தாய் தன் குழந்தைக்கு தாய்ப்பால் அளிப்பதன் மூலமே சிறந்த பாசத்தை வளர்க்கிறார். வாழ்வில் குழந்தை அடையும் முதல் அனுபவம் தாய்ப்பால் குடிப்பதே. இந்த அனுபவம் குழந்தைக்கு இன்பத்தையும் உளநிறைவையும் அளிக்க வேண்டும். அப்போதுதான் குழந்தையின் பிஞ்சு மனதில் சுற்றமுள்ள உலகம் இன்பமயமாகத் தோன்றி நம்பிக்கை துளிர்க்கும். ஒரு குழந்தை பிறந்ததும் அதன் வளர்ச்சி 3 முக்கிய அம்சங்களில் தங்கி உள்ளது. உடல், உளம், புத்தி ஆகியன அவை. இவை மூன்றும் முறையாக வளர்ச்சி பெற இயற்கை ரீதியான வழியே உகந்தது. அந்த இயற்கை ரீதியான வளர்ச்சிக்கு தகுந்த சக்தியை கொடுக்கக் கூடியது தாய்ப்பால் ஒன்றே. தாய்ப்பால் என்பது இயற்கை அளித்துள்ள ஒரு வரப்பிரசாதம் எனவும் கூறலாம். குழந்தை பிறந்தது முதல் 4 மாதங்கள் வரை தாய்ப்பால் கட்டாயம் கொடுத்தாக வேண்டும். (Exclusive breast feeding) முதல் 4 மாதங்களுள் கொடுக்கப்படும் தாய்ப்பாலே அந்தக் குழந்தையின் ஆயுள் பூராகவும் உடல், உள ரீதியில் தகுந்த பலத்திற்கான அத்திபாரமாக அமைகிறது.

குளுக்கோஸ் நீரைச் சில தாய்மார்கள் குழந்தைக்கு அடிக்கடி கொடுப்பதுண்டு. இதனால், குழந்தையின் சிறுநீரகம் பாதிக்கப்படலாம். தாய்ப்பால் என்பது நோய் எதிர்ப்புச் சக்திமிக்க ஒரு பூரண உணவாகும். இதனால், மேற்கூறிய பாதிப்பு ஏற்படுவதில்லை. நல்ல சந்ததியை உருவாக்குவதில் தாய்ப்பாலின் பங்களிப்பும் இன்றியமையாதது. தாய்ப்பால்தான் அன்பினால் எதையும் வெல்லலாம் என்பதனை உணர்த்தக் கூடியது. ஆரோக்கியமான உலகை அமைக்க இயற்கையின் உன்னத முறையான தாய்ப்பால் தான் உதவுகிறது.

தாய்ப்பால் ஊட்டுவதன் மூலம் குழந்தைக்கும் தாய்க்குமிடையிலான அந்நியோன்ய உறவு வலுவடைகிறது. சரிவரத் தாய்ப்பால் கிடைக்காத பிள்ளைகள் பெரும்பாலும் விரல் சூப்பும் பிள்ளைகளாகவும் போதியளவில் மனத்துணிவு இல்லாத பிள்ளைகளாகவும் இருப்பதாகக் குறிப்பிடப்படுகின்றனர். தாய்ப்பால் ஊட்டும் போது தாயுடன் குழந்தை மிகவும் நெருக்கமாக இருப்பதுடன் தாய் குழந்தையை இரு கைகளிலும் தாங்கி அணைத்தவாறு 'Kankaru position'இல் இருக்க நேரிடுகிறது. ஆகவே, தாய்ப்பால் குடிக்கும் குழந்தையானது தனது விழித்திருக்கும் நேரங்களில் தாய்ப்பால் குடிக்கும் நேரமே அதிகம். எனவே, தாயின் அரவணைப்பு குழந்தைக்கு மனரீதியான திருப்தியையும் தருவதாகக் கூறப்படுகிறது. தாய்ப்பால் குடித்தல் குழந்தையின் வாயமைப்பினைச் சீர் செய்கிறது. எதையாவது உறிஞ்சிக் குடிக்கும்போது நாக்கு பின் இழுக்கப்பட்டு குவிக்கப்படுகிறது. இதன் மூலம் தாடைகள் பிரிக்கப்பட்டு வாயின் உட்புறம் பெரிதாகிறது. இதனால், காற்று வழிகள் பெரிதாக்கப்பட்டு காற்றுப் போக்குவரத்து அதிகரிக்கின்றது. இதனால் தாடைகளும் அகலப்படுத்தப்படுகின்றன. தாய்ப்பாலை உறிஞ்சிக் குடிக்கும் முயற்சியில் அவை பிரயாசப்படுவதால் வாய்ப்புறத்திற்கும், அதன் மூலம் முகத்திற்கும் வேண்டிய பயிற்சி கிடைக்கிறது.

**நி.தர்ஷனோதயன்**
4ஆம் வருடம், சித்தமருத்துவத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

# ஆய்வுகூடப் பரிசோதனைகள்!



யாழ்ப்பாணத்தில் தனியார் மருத்துவமனைகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு வருகின்றது. அதற்கு ஏற்றவாறு மருத்துவ ஆய்வு கூடங்களின் எண்ணிக்கையும் அதிகரித்தபோதும் அவற்றின் தரம் வீழ்ச்சி அடைகின்றமை வேதனைக்குரியதே. அன்று சிறந்த நோய் அறிக்கைகளை வெளியிட்டு நல்லதொரு தரத்தில் இருந்த மருத்துவ ஆய்வுகூடங்கள் இன்று இல்லை. புற்றீசலாய் முளைக்கும் ஆய்வு கூடங்கள் தோல்வி அடையக் காரணம் பற்பல.

குறைந்த சம்பளத்தில், பயிற்சியாளர்கள் என்ற பெயரில் மருத்துவ தொழில்சார் அறிவாற்றல் மிகவும் குறைந் தவர்களை நியமிக்கின்றார்கள். மனித உயிரைக் காக்க




வேண்டிய மருத்துவ அறிக்கைகளை இவர்களே வெளியிடுகிறார்கள். இலங்கையில் 3 நிலையங்களில் மட்டுமே அரசினால் பூரண பயிற்சி பெற்ற - பரீட்சைகளில் சித்தியடைந்த - மருத்துவ தொழில் நுட்பவியலாளர்கள் உருவாக்கப்பட்டுவருகின்றனர். நோய் பற்றியும் அவற்றை ஆய்வுகள் மூலம் கண்டறிவது பற்றியும் மிக நுட்பமான பயிற்சிகள் அங்கே இரண்டு வருடங்களுக்கு மேலாக வழங்கப்படுகின் றன. இதேபெயரில் ஆக 2மாதங்கள் மட்டுமே தனியா ரால் பயிற்சி பெற்றவர்கள் தனியார் மருத்துவ ஆய்வு கூடங்களில் அமர்த்தப்படுவது இப்போது வழக்கமாகிவிட்டது.

ஒவ்வோர் ஆய்வுகளிலும் அதற்குரிய தொழில் நுட்பங்கள் எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன என்ற விளக்கமின்மையால் தவறான தொழில் நுட்பத்தை பயன்படுத்துகிறார்கள்.

உதாரணம் :- சில பரிசோதனைகளுக்கு வண்டல்களை மையப்படுத்தும் தொழில் நுட்பம் (Centryuge) குறித்த மாதிரிக்கு குறித்த வேகத்தில், குறித்த நேரத்தில் பிரயோகிக்கப்படுகிறது. ஆனால், இதற்குரிய உபகரணமே இல்லாமல் ஆய்வுகூடங்கள் இயங்குவது வேடிக்கைக்குரியது.

இரசாயனத் தாக்கங்களும், நுண்ணுயிர் வளர்ப்புக் களும் அமில காரத்தன்மை, வெப்பநிலை போன்ற பல தன்மைகளுக்கு ஏற்றவாறு வேறுபடுகின்றன. தொடுகைகள் **(Contamination)** காரணமாக தாக்கங்கள் தவறாகின்றது. எனவே, அவற்றிற்கு ஏற்ற தனித்தனியான உபகரணங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். வெளிநாடுகளில் வீட்டுப்பாவனைக்கென தயாரிக்கப்பட்ட அண்ணளவான பெறுபேறுகளைக் காட்டும் சிறியரக உபகரணங்களை நம்பிப் பல பெரிய

**"...சிறந்த வைத்தியரைத் தெரிவு செய்ய முன் தகுதியான ஆய்வுகூடத்தை கண்டறியுங்கள்...!"**

ஆய்வுகூடங்கள் வாழ்கின்றன. (உ+ம் -Gluco meter)

சில சிறிய அடிப்படைப் பரிசோதனைகளை மேற்கொண்டு அவற்றின் பெறுபேறுகளில் இருந்து ஏனைய முக்கிய சோதனைப் பெறுபேறுகளை அனுமானம் மூலம் வெளியிடுகின்றனர்.

உதாரணம் :- சிறுநீரில் குளுக்கோசுப் பரிசோதனை மூலம் இரத்தத்தின் குளுக்கோசும் பரிசோதனைக்கான அறிக்கையை வெளியிடுதல். அதுமட்டுமன்றி நோய்

# உரிய பலன்கள் தருமா?

குணம் குறிகளை கேட்டறிந்து பரிசோதிக்கலாமலேயே அறிக்கையை வெளியிடுவதும் வேடிக்கைக்குரியது.

சோதிக்கப்பட வேண்டிய உடற்கூற்று மாதிரிகளை உரிய முறையில் சேகரிக்காமையாலும் (உ+ம் :- குருதி உறையாது தடுப்பதற்கு, அதற்கென உரிய இரசாயனப் பொருளை பயன்படுத்தாமை) உரிய முறையில் பரிமாற்றப்படாமையாலும் பெறுபேறுகள் தவறாகின்றன.

### ஆய்வு கூடப் பரிசோதனைக்காக கொழும்பை நாடும் நிலை ஏற்பட்டது ஏன்?

* *தகுதியானவர்கள் இல்லாமலும் உரிய தொழில்நுட்பத்தை பிரயோகிக்காமலும், தவறுகள் ஏற்படின் திருத்துவதற்குரிய அறிவு, ஆற்றல் இல்லாத பணியாளர்களுடனும் இயங்கும் ஆய்வு கூடங்கள் பல இங்கு உள்ளமை -*
* *'கொம்பியூட்டர் முறையில் பரிசோதித்தல்' என்ற பெயரில் கொழும்பு ஆய்வு கூடங்கள் விளம்பரப்படுத்துதல் -*
* *கவர்ச்சியான முறையில் பரிசோதனை அறிக்கையை அச்சிட்டு வெளியிடுதல் -*
* *ஒரு சில வைத்தியர்களுக்கும், தனியார் மருத்துவமனை நிர்வாகிகளுக்கும் தரகுப்பணம்* **(Commission)** *வழங்கப்படல் -*

*(பெயர்கள் குறிப்பிடப்பட முடியாமைக்கு வருந்துகிறேன்)*

* *'கொழும்பில்' என்றால் 'சிறந்த' என்ற 'போலி நம்பிக்கை' மக்கள் மத்தியில் வளர்ந்துள்ளமை -*
* *அதிக பணங் கொடுத்தால் சிறந்த பெறுபேறு என்ற தவறான நம்பிக்கை -*

**-லோ.துஷிகரன்.**

இப்படியான காரணங்களால் ஆய்வுப் பொருள்கள் கொழும்புவரை செல்கின்றனவோ இல்லையோ பெறுபேறு அங்கிருந்து வருகிறது.

தூரப்பிரதேசங்களுக்கு உடற்கூறு மாதிரிகளை அனுப்பும்போது, இங்கு சரியான முறையில் தகுதியானவரால் ஆய்வுக்குட்படுத்தும்போது கிடைக்கும் பெறுபேற்றிலும் பார்க்க திருத்தம் குறைந்த பெறுபேறே அங்கிருந்தும் கிடைக்கும் எனலாம்.

ஏனெனில்-


* இடம்மாற்றும் போது அதிக நேரம் எடுக்கும், தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் 'மாதிரி' பழுதடையும் வேகம் கூடும். குளிரூட்டியில் பேணுவதும் கூட சில சமயம் தவறானதாக அமையும். (உதாரணம்: நுண்ணுயிர் பரிசோதனைக்கான பல 'மாதிரிகளை' குளிரூட்டியில் பேணக்கூடாது) -
* சீரான வெப்பநிலை பேணப்படாததால் பழுதடையும்-
* குலுங்கும் போது உராய்விற்குட்பட்டு இடைத்தாக்கங்களுக்கு உள்ளாகும் -
* உரிய ஊடகங்களில் இட்டு பரிமாற்றாவிட்டால் அதன் தன்மை கெட்டுவிடும் -
* பெறுபேறு வரத் தாமதிப்பதால் சிகிச்சை வழங்க முடியாததுடன் மீள் பரிசோதனைக்கும் உட்படுத்த முடியாது -
* நோய் வரலாற்றுடன் (Clinical history)- தொடர்புபடுத்தி பரிசோதிக்க முடியாது -
* யார், எங்கு எப்படி பரிசோதிக்கிறார்கள் என்பதற்கு உத்தரவாதம் இல்லை -

*(VIIபக்கம் பார்க்க)*

# பறக்கும் மீன்களும் உண்டு

பறவைகள் பறக்கும் என்பது எல்லோருக்கும் தெரியும். இதேபோல பறக்கும் மீன்களும் உண்டு. இந்தச் செய்தி வியப்பாக உள்ளதா?

கடலில் வாழும் இந்த மீன்களை ':.பிளையிங் :.பிஸ்' என அழைக்கப்படுகிறது. இந்த மீன்கள் பறப்பது மிகவும் வினோதமான காட்சி. முதலில் மிக வேகமாக ஓடும். பின்னர் துடுப்புகளை விரித்துக் கொண்டு பறக்கும். பறக்கும் போது விரியும் துடுப்புகளை தசைநார்களின் உதவியால் விறைப்பாக வைத்திருக்கும். அலைகளில் மோதிக்கொண்டு பறப்பதன் மூலம் அதிக சக்தியைப் பெற்றுக்கொள்கிறது.



இந்த மீன் நீர்மட்டத்திலிருந்து உயர்ந்து அதிக பட்சம் கப்பலின் மேல்தளம் வரை பறக்கக் கூடியது. நீர்மட்டத்திலிருந்து இந்த மீன்கள் பறக்கும்போது மிகவும் அழகாக இருக்கும்.

இந்த மீன்கள் 5சென்ரிமீற்றர் முதல் 45 சென்ரிமீற்றர் வரை வளரக் கூடியது. உலகின் எல்லாக் கடல்களிலும் பறக்கும் மீன் உண்டு. அரிதாகக் காணப்படும் இந்த மீன்கள் அதிசயமானவையல்லவா?

- கவிதா

வரைந்தவர்: - கி.கஸ்தனி
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.



## செய்தி நிறுவனங்கள்

| | |
|---|---|
| இலங்கை | - லங்கா புவத் |
| இந்தியா | - பி.ரி.ஐ, யு.என்.ஐ. |
| ஈராக் | - ஐ.என்.ஏ. |
| பிலிப்பைன்ஸ் | - பி.என்.ஏ. |
| பாகிஸ்தான் | - ஏ.பி.பி. |
| ஜப்பான் | - கியோடே, கி.கி |
| பிரான்ஸ் | - ஏ.எப்.பி. |
| இத்தாலி | - அன்சா |
| ஜேர்மனி | - டி.பி.ஏ, ஏ.பி.என் |
| ரஷ்யா | - டாஸ் |

சி.வாமதீபன்,
பாடசாலை வீதி, தாவடி தெற்கு.

**தம்பி, தங்கைகளே!**

'சிறுவர் பொழில்' பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. எண்ணங்களை எழுதி அனுப்புங்கள். அவை தரமாக இருப்பின் பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

## உலகை வெல்வோம்

அன்பால் உலகை வெல்வோம்
அஹிம்சை வழியில் செல்வோம்
துன்பம் செய்யும் கொடியோரைத்
திருத்திட நாளும் முனைவோம்

அறிவை வளர்த்துக் கொள்வோம்
அறிவியல் சாதனை புரிவோம்
உரிமையைக் காத்திட நிற்போம்
உயிரென நாட்டை மதிப்போம்

மனிதரில் பேதம் காட்டும்
மடமையைக் கிள்ளி எறிவோம்
புனிதர்கள் காட்டித் தந்த
புதுவழி தன்னில் செல்வோம்.

வயிரம் போலுடல் வளர்ப்போம்
வியர்வை சிந்தி உழைப்போம்
பயிர்களை எங்கும் வளர்ப்போம்
பசிப்பிணி ஓட்ட நிற்போம்

மரஞ்செடி, கொடிகள் வளர்ப்போம்
மாசுறும் உலகைக் காப்போம்
அறமது தழைத்து ஓங்க
இறைவழி அதனைத் தொடர்வோம்.

கி.துளசிகரன்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.




## சிந்தனைக்கு...

- அன்புக்கும் அறிவுக்கும் எல்லையே இல்லை.
- பிறப்பின் முடிவு இறப்பு. இறப்பின் முடிவு பிறப்பு.
- நீங்கள் சஞ்சலமற்ற ஒருவனை மடையனாக்க முடியாது.
- மௌனம் என்பது சத்தமில்லாமல் இருப்பது மட்டுமல்ல, அத்துடன் மனதை நிலைப்படுத்தி வைப்பதுமாகும்.
- தன்னைத் தானே வென்றவன் தான் அனைவரையும் விடச் சிறந்தவன்.
- நினைப்பது என்பது எல்லோராலும் முடியும். செயல்படுவது ஒருவராலே தான் முடியும்.

அழகராசா - தர்ஷன்
தரம் - 07 C , யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

# குதிரையும் நரியும்

காட்டில் நரி ஒன்று வாழ்ந்து வந்தது. அது எப்போதும் மற்றைய மிருகங்களைப் பயமுறுத்திக் காரியம் பெறுவதில் சந்தோசம் அடைந்தது. அன்று என்ன செய்யலாம் என்று சிந்தித்துக் கொண்டிருந்தது. தூரத்தே அமைதியாகப் புல் மேய்ந்து கொண்டிருந்த குதிரையைக் கண்டது. உடனே குதிரையின் முதுகில் தாவி ஏறி 'நான் தான் இந்தக் காட்டிற்கு ராஜா. நீ இன்று என்னை காடு முழுவதும் கூட்டிச் செல்ல வேண்டும்' என்றது.



இதனைக் கேட்ட குதிரை 'நண்பா! அவரவர் இருக்கும் இடத்தில் தான் இருக்கவேண்டும். அப்போதுதான் உரிய மதிப்புக் கிடைக்கும். நீ இப்போது கீழே இறங்கு. எனக்கு வேறு வேலை இருக்கிறது' என்றது.

குதிரையின் புத்திமதியைக் கேட்ட நரிக்கு கோபம் வந்தது. 'என்னை இப்போது கூட்டிச் செல்லாது விட்டால் உன் முதுகைக் கடித்துக் குதறிவிடுவேன்' என்றது.

நரியைக் ஏற்றிக் கொண்டு குதிரை புறப்பட்டது. வழியில் நின்ற மிருகங்கள் எல்லாம் ஒதுங்கி வழி விட்டன. நரிக்கு ஒரே சந்தோசம். பெருமையாகச் சிரித்தது.

நரியின் குணம் அறிந்த கரடி இதனைப் பார்த்தது. ஏதாவது செய்ய வேண்டுமென யோசித்தது. உடனே நரியின் மீது தாவிக் குதித்து அதனைத் தள்ளி விழுத்தியது. கீழே விழுந்த நரி ஆபத்தை உணர்ந்து, வேகமாக ஓடி மறைந்தது. 'ஏ..... குதிரையே எதற்காக இந்த அற்ப பிராணியை சுமந்து செல்கிறாய். இது உனக்கு வெட்கமாய் இல்லையா? ஒருவன் தவறு செய்தால் அதனைச் சுட்டிக் காட்ட வேண்டும். அதற்குப் பதிலாக நீ அவன் போக்கில் நடந்தால் நீயும் தவறு செய்கிறாய்' என்றது கரடி. குதிரை தான் செய் த தவறுக்காக வருந்தியது. அன்றிலிருந்து அது நரிகளை மதிக்காமல் விட்டது.

அப்பம்மா.

# தகவல் பெட்டி

### சோம்பேறி நண்டு



கடற்கரைகள் மீது படம் கீறும் நண்டுகளைப் பார்த்திருக்கிறோம். சில கடல் நண்டுகள் 'அனிமோன்' என்னும் கடல் பிராணிகளை தமது கால்களிலே பிடித்து வைத்திருக்குமாம், 'அனிமோன்' தமக்கு இரையாகப்பிடிப்பவற்றை இந்த நண்டுகள் அபகரித்து தமக்கு உணவாக மாற்றிக் கொள்ளும். என்ன சோம்பேறி நண்டுகள் இல்லையா?

### கறையான்

கறையான்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். கவனிக்காது விட்ட பொருள்களை மூடி மண்ணெழுப்பி தனது அரண்மனையாக்கி விடும். இந்தக் கறையான் புற்றில் ஒரு கறையான் காயம் பட்டுவிட்டால் அல்லது இறந்து விட்டால், மற்றக் கறையான் அதனைத் தின்று விடுமாம்.




### குட்டிக் கரடி




உலகிலேயே மிகச் சிறிய அளவிலான கரடி இதுதான் இந்த வகைக் கரடிகள் அமேசன் காடுகளில் தான் வாழ்கின்றன. பிறக்கும் போது 3 சென்ரிமீற்றர் உயரம் இருக்கும். இந்தக் கரடி 10 தொடக்கம் 12 சென்ரிமீற்றர் வரை மட்டும் தான் வளர்கிறது. இதன் நிறை 40தொடக்கம் 50 கிராம் மட்டும்தான். எமது கட்டை விரலில் பாதி அளவேயுள்ளன. இந்தக் கரடிகள் மரங்களில் வேகமாக ஏறக்கூடியவை. சிவப்பு மற்றும் வெள்ளை நிறங்களில் இது உலா வருகிறது.

### மீசை ஓவியம்

எல்லோரும் ஓவியம் வரைய பேனா, தூரிகை என்பவற்றைப் பயன்படுத்துகிறார்கள். கிரேக்க நாட்டைச் சேர்ந்த இந்த ஓவியக் கலைஞர் தனது மீசையைப் பயன்படுத்தி ஓவியம் தீட்டுகிறார். தனது மீசையை நீளமாக வளர்த்து நுனியில் தூரிகை போன்று மெலிதாக்கிக் கொண்டு, அதன் மூலம் அழகான ஓவியங்கள் வரைகிறார். இந்த மீசை ஓவியத்தை வெளிநாட்டு பயணிகள் விரும்பி வாங்கிச் செல்கிறார்கள்.



### தவளை பாட்டு



தவளைகளின் பாட்டு உங்களை எத்தனை முறை தொட்டிருக்கிறது. ஏனெனில், தென்னாபிரிக்காவில் 100இற்கும் அதிகமான வித்தியாசமான தவளைகள் உள்ளனவாம். இதில் ஐந்தில் ஒரு பங்கு அழிந்து விட்டதாம். இதனைத் தடுப்பதற்கும் மக்களிற்கு தவளைகளின் பாதுகாப்பு பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தவும் அதன் ஓசையை (இசையை) காம்பாக்ட் டிஸ்கில் பதிவு செய்து வெளியிட்டுள்ளனராம்.

### வண்ணத்துப் பூச்சியின் உணர்திறன்

உணர்ந்தறியும் திறன் பொதுவாக எல்லா உயிரினங்களிற்கும் உள்ளதுதான். வண்ணத்துப் பூச்சிகளிற்கு இத்திறன் சற்று அதிகமாக உள்ளது. 200 துளிகள் நீரில் ஒரு துளி சர்க்கரையைக் கலந்தால் மனிதன் உணர்ந்து கொள்வான். 3லட்சம் துளிகள் நீரில் ஒரு துளி சர்க்கரையைக் கலந்தால் அதனை ச் சரியாக வண்ணத்துப் பூச்சிகள் உணர்ந்து கொள்ளுமாம்.



### திரைப்படக் காட்சியை புகைப்படமாக்கலாம்



திரைப்படத்தில் நீங்கள் விரும்பும் காட்சி உங்களுக்குப் புகைப்படமாக உடனே வேண்டுமா? இதோ அதற்கான கருவி வந்து விட்டது. வீடியோ அளவிலான இக் கருவியில் உங்களுக்கு வேண்டிய திரைப்படதின் வீடியோ கேசட்டைப் போட்டுவிட்டு, உங்களுக்குத் தேவையான காட்சி வரும்போது இதிலுள்ள பட்டனை அழுத்தினால் போதும் அந்தக் காட்சி உடனே புகைப்படமாக வெளிவரும். இந்த முறையைப் பயன்படுத்தி ரி.வியில் தெரியும் நிகழ்ச்சிகளையும் புகைப்படமாகப் பெறலாம். ஆனால், இந்தப் புகைப்படங்களுக்கு நெகட்டிவ் கிடைக்காது. அதேபோல இந்தப் படங்கள் நாளடைவில் கலர் மங்கிவிடவும் வாய்ப்புண்டு.

# தெற்கில் அதிகரிக்கும் வாகனக் கடத்தல்கள்



தென்னிலங்கையில் என்றும் இல்லாத அளவுக்கு அதிகரித்து வரும் வாகனக் கடத்தல் சம்பவங்கள் பொலீஸாரை குழப்பத்துக்குள்ளாக்கி வருகின்றன. வாகனங்களைக் கடத்தி விற்கும் கும்பல்கள் நகரங்கள் தோறும் பாதாள உலகக் குழுக்கள் போன்று செயற்படுவதால் கடத்தல்களைத் தடுப்பது பொலீஸாருக்குப் பெரும் சவாலான விடயமாகிவிட்டது.

கடைசியாக கண்டியில் வி.ஐ.பி ஒருவரின் காரில் கை வைக்கும் அளவுக்கு நிலைமை மோசமாகிவிட்டது.

இலங்கைக்கான இந்தியத் துணைத்தூதர் ராஜன்பிள்ளையின் லான்ட குரூஸர் வாகனம் கண்டி அம்பேபுஸ்ஸ பகுதியில் வைத்துக் கடத்தப்பட்ட செய்தி வாகனக் கடத்தல்களின் உச்சமாக சகலரையும் வியப்பில் ஆழ்த்திவிட்டது.

கண்டி - கொழும்பு நெடுஞ்சாலையில ஹொட்டேல் கூட்டுத்தானத்துக்குச் சொந்தமான உணவு விடுதி முன்பாக நிறுத்தப்பட்டிருந்த சமயம் இந்த வாகனம் துப்பாக்கிதாரிகள் இருவரால் கடத்தப்பட்டிருக்கிறது.

தூதர்ராஜன் பிள்ளையும் அவரது துணைவியாரும் காலை உணவு அருந்துவதற்காக விடுதிக்குள் சென்றிருந்தனர். வாகனத்தில் அதன் சாரதியான ரணசிங்கபண்டா தங்கியிருந்தார். அவ்வேளை கனகச்சிதமாக அடை அணிந்து வந்த இருவர் சாரதிக்கு பிஸ்டலைக் காட்டிப் பயமுறுத்தி வாகனத்தின் சாவியைப் பறித்தெடுத்துக்கொண்டு சில நொடிக்குள்ளேயே வாகனத்தை செலுத்திக்கொண்டு மறைந்து விட்டனர்.

இந்தக் கடத்தல் இந்தியத் தூதரக வட்டாரங்களில் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. வெளிநாட்டு ராஜதந்திரிகளின் பாதுகாப்பையும் கேள்விக்குள்ளாக்கி இருக்கிறது.

கடத்தப்பட்ட வாகனத்தைத் தேடிக்கண்டுபிடிக்குமாறு பொலீஸ்மா அதிபரும் சிரேஷ்ட அரச அதிகாரிகளும் உத்தரவிட்டு வாரங்கள் கடந்து விட்ட நிலையிலும் வாகனம் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை.

வாகனத்தைத் தேடிக் கண்டு பிடிக்கும் முயற்சியில் பத்து பொலீஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றன. நாடெங்கும் வாகனக்கடத்தல் கும்பல்கள் இயங்குவதாக அடையாளம் காணப்பட்ட இடங்களில் கண்காணிப்பு முடுக்கிவிடப்பட்டிருக்கின்றது. எனினும் வாகனத்தைக் கண்டுபிடிப்பதற்கான துப்புகள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என்று கையை விரிக்கிறது பொலீஸ்.

நாடெங்கிலும் நாள் ஒன்றுக்கு இதுபோன்ற நான்கு வாகனக் கடத்தல் சம்பவங்கள் இடம் பெறுவதாகப் பொலீஸ் தகவல்கள் கூறுகின்றன. தலைநகர் கொழும்பில் மாத்திரம் மாதம் ஒன்றுக்கு 20 வரையான வாகனங்கள் கடத்தப்படுகின்றன. கடத்தப்படும் வாகனங்கள் உருமாற்றப்பட்டு நாட்டின் ஏனைய இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

வாகனங்களை வாடகைக்கு அமர்த்திச் சென்று வழியில் சாரதிகளைக் கொன்றுவிட்டு அவற்றைக் கடத்திச் செல்லும் சம்பவங்களும் தெற்கில் அடிக்கடி நடக்கின்றன. வாகனங்கள் தொடர்பான ஆவணங்கள் சரியாகப் பேணப்படாமையால் கடத்தப்பட்ட வாகனங்களை இனங்காண்பதில் சிரமங்கள் ஏற்படுவதாக பொலீஸ் குற்றத் தடுப்புப்பிரிவு கூறுகின்றது.

தென்னிலங்கையில் ஆயுதபாணிகளான கும்பல்களின் இது போன்ற குற்றச்செயல்கள் பெரும் எடுப்பில் அதிகரித்திருப்பினும் தென்னிலங்கையின் சில ஊடகங்களோ கதையை வேறுவிதமாகத் திரித்து விடுகின்றன.

விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்காகவே வாகனங்கள் கடத்திச் செல்லப்படுகின்றன என்றவாறு பல செய்திகளை சிங்களப் பத்திரிகைகள் வெளியிட்டு வருகின்றன.

இந்தியத் தூதரக வாகனம் கூட கண்டியில் இருந்து வவுனியா வழியாக வன்னிப் பகுதிக்குள் கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் என்று ஊகம் வெளியிடவும் இந்தப் பத்திரிகைகள் தவறவில்லை.

-ராம்

---




"ஒரு பொம்பிளை என்ன மாதிரி இருக்கவேணும் எண்டதுக்கு இவள் ஓர் உதாரணம். என்ன பொறுமை! என்ன அன்பு! குடும்பத்திலை உள்ளவையும் உறவுக்காறரும் எவ்வளவு கஷ்டப்படுத்துகினம். அவ்வளவையும் சுமைதாங்கி மாதிரி பொறுமையாய் சகிச்சுக்கொள்ளுறாள். நீங்களெண்டால் இப்பிடி இருப்பியளே? கொதிச்சுக் குமுறுவியள். பார்த்தால் மகாலட்சுமி மாதிரி...." நேற்று மாலை கணவன்கூறியதை அவளால் மறக்க முடியவில்லை. சில மாதங்களாக இப்படி ஏதாவது அவன் கூறிக்கொண்டிருக்கிறான். அந்த பெண் போன்ற ஒரு மனைவி தனக்கு இல்லையே என்று ஏங்குகிறானா? அல்லது அவளுடைய இயல்புகளைக் குத்திக் காட்டுகிறானா?

நான் ஒரு நல்ல மனைவி இல்லையா?

அவள் சுயவிசாரணை செய்ய ஆரம்பிக்கிறாள்.

என்னிடம் அன்பும் இரக்கமும் இல்லையா? ஒரு சராசரி மனிதனிடம் இருக்கவேண்டிய அளவு அன்பும் இரக்கமும் என்னிடமிருக்கின்றன. ஆனால், இரக்கப்படுகிறேனென்று ஏமாந்துவிட நான் தயாரில்லை.

அன்பு, பொறுமை இவை நல்ல குணங்கள் தான். அவை மனிதர்கள் எல்லோரிடமுமே இருக்கவேண்டும் என்பதுதான் எனது கருத்து.

பொறுமையும், சகிப்புத் தன்மையும் என்னிடமில்லையென்று எப்படிக் கருதலாம்? எவ்வளவு பிரச்சினைகளை மிகுந்த பொறுமையோடு சமாளித்திருக்கிறேன். என்னிடம் சகிப்புத் தன்மையில்லாவிட்டால் வாழ்க்கை ரணகளமாகியிருக்குமே.

வேண்டுமென்றே திட்டமிட்டுத் தீமை செய்பவர்களையும் சகித்து மௌனமாகப் போகவேண்டுமென்றால் அது எனக்குச் சரியாகப்படவில்லை.

குற்றத்தைக் குற்றமென்று நிமிர்ந்து கூறும் மனத்துணிவு நிச்சயமாக எமக்கு வேண்டுமென்று நினைப்பவள் நான்.

இப்படியெல்லாம் பொறுமைகாட்டுவது பைத்தியக்காரத்தனமாக எனக்குத் தோன்றுகிறது.

பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக வாழ வேண்டுமென்று கனவு கண்டவள். அப்படியிருக்க முடியாதுபோய்விட்டாலும் சாதாரணமானவளாக வேனும் வாழ விரும்புபவள்.

அவருடைய விருப்பத்திற்காக நான் என்னை மாற்றவேண்டுமா? என்னால் அப்படியெல்லாம் மாறமுடியுமென்று எனக்குத் தோன்றவில்லை.

பெரிய பிரச்சினைகளென்று எதுவுமின்றி பதினைந்து வருடங்களாக ஓடிய இல்லத்தில் இதென்ன பூதமாக......?

அவளுடைய நினைவோட்டத்தின் இந்தப் புள்ளி அவளைத் திடுக்கிட வைத்தது. நான் கூட பூதம், பேயென்றெல்லாம் எண்ண ஆரம்பித்து விட்டேனோ?

சீ..... இந்த மின்சாரம், தொலைக்காட்சி எல்லாம் இல்லாமலே இருந்திருக்கலாம். அவளுடைய மனம் அலுத்துக்கொண்டது. எதிலும் நன்மையுடன் தீமையும் இருக்கத்தான் செய்கிறது.

"ராதா.... ராதா....."

இரவு உணவைத் தயாரித்துக் கொண்டிருந்தவள் கணவனின் அழைப்பைக் கேட்டு அவசரமாக வந்தாள்.

தொலைக்காட்சியின் முன் அவன் அமர்ந்திருந்தான்; இருபுறமும் பிள்ளைகள். அவனுக்கு ஓய்வு நேரம். அவர்களுக்கு.......?

"நாங்கள் பார்க்கிற சீரியல் ஹீரோயின் இந்தப் புறோகிறாமிலை வரப்பேறா. ரசிகர்கள் விருப்பமெண்டால் போனிலை கதைக்கலாம். நல்லாயிருக்கும்"

கணவன் மகிழ்ச்சியுடன் ஆரவாரமாகக் கூறிய செய்தி அவளுக்கு அப்படியொன்றும் பெரிதாகத் தெரியவில்லை. அத்துடன் எரிச்சலாகவும் இருந்தது. அவளை அழைத்துக் கூறியதற்காக பொறுமையுடன் நின்றாள்.

சிரித்துக்கொண்டே திரையில் தோன்றிய இவளா அவள்? பட்டுப்புடைவை, பூ, பொட்டு எல்லாம் எங்கே? மகாலட்சுமியைக் காணவில்லை!

அடுப்பிலிருந்ததைக் கவனிப்பதற்காக அவள் உள்ளே சென்றாள். ஐந்து நிமிடங்களில் தொலைக்காட்சி நின்று விட்டது. ஏதாவது தடங்கலோ? அவள் வந்து எட்டிப்பார்த்தாள். தொலைக்காட்சியை நிறுத்தி விட்டு அவன் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருந்தான்.

பிள்ளைகள் உம்மென்று முகத்தை வைத்துக்கொண்டு புத்தகங்களின் முன் உட்கார்ந்திருந்தார்கள்.

– யோ.சி

---

## பிரம்மன் படைப்பில் காணாத......

(II பக்கத் தொடர்ச்சி)

மேலும் மனிதர்களின் முகபாவம் மற்றும் மனநிலை பற்றியெல்லாம் உணர்ந்து அவற்றிற்கு ஏற்பச் செயற்படும் திறமைகளை அவற்றிடம் வளர்க்க இயலும் எனக் கருதப்படுகிறது.

கணனித் தொழில் நுட்பம் உலகினில் பரவிய வேகத்தை விட விரைவாக இத்தகைய றோபோத் தொழில் நுட்பம் பரவிவிட வாய்ப்புக்கள் இருப்பதாக இப்போது ஜப்பானிய விஞ்ஞானிகள் கருதத் தொடங்கிவிட்டார்கள்.

வைத்தியசாலைகளில் வைத்தியம், நுட்பமான சத்திர சிகிச்சைகள், தாதி, சுத்திகரிப்பு, பராமரிப்பு, காவலாளி எல்லாமே பெருமளவில் இனி இதில் தங்கியிருந்தால் : பகிஷ்கரிப்புக்கள் பலனைக் கொடுக்கமாட்டாதவை ஆகிவிடும். வீட்டிலும்கூட அதே நிலமைகள்தான் உருவாகப் போகின்றன.

உப்பு மூடை உன்னைத் தூக்கவா கண்ணா மூச்சி ஆட வாறியா என்றெல்லொம் றோபோக்கள் அழைக்கத்தான் போகின்றன. றோபோக்கள் தமக்குள் பேசிக் கொள்ளும் ஆற்றலை வளர்க்கவும் பெருமுயற்றி எடுக்கப்படுகிறது.

றோபோக்களை யுத்த களத்தில் இறக்கிவிட்டால் ஜப்பான் உலகினை ஆளும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

---

## ஆய்வு கூடப் பரிசோதனை......

(V பக்கத் தொடர்ச்சி)

'கொம்பியூட்டர் முறையில்' பரிசோதித்தல் போன்ற விளம்பரங்களால் மக்கள் வெகுவாக ஏமாறுகிறார்கள். கொம்பியூட்டர் முறை என்பது, பெறுபேற்றை பதிப்பித்து வெளியிடும் அச்சு வேலையை மட்டும் (Print out) கணனி மூலம் மேற்கொள்வதா?. கொம்பியூட்டர் முறையில் தான் பகுப்பாய்வு செய்தாலும், கைம்முறை வேலையால் (Ma nual Method) மேற்கொள்ளும் ஆய்விலும் பார்க்க அது திருப்தி குறைந்ததே.

மிகச் சிறிய பரிசோதனைக்குக் கூட (சிறுநீர் சோதனை, செங்குதிருதிக்கல படிவு வேகச் சோதனை Esr) கொழும்பிற்கு அனுப்புதல் நகைப்புக்குரியது. இதை குளிரில் வைத்து இடம்மாற்றுதல் என்பதும் புரியாத புதிர். குளிரில் வைப்பது கூட சில சந்தர்ப்பங்களில் தவறான விடையைத் தரும்.

பல மருத்துவ ஆய்வு கூடங்களில் உரிய முறையில் சுத் தம் செய்யப்படல், கிருமி நீக்கம் செய்யப்படல் போன்றவற்றிலும் தவறுகள் ஏற்படுகின்றன. பலர் இலங்கை மருத்துவச் சங்கத்தில் பதிவு செய்யாமலும், பதிவு செய்யத் தகுதி கூட இல்லாதவர்களும் தனியார் ஆய்வுகூடங்களில் கடமையாற்றுகிறார்கள்.

### இரசாயனப் பொருள் விற்பனை முகவர்களின் வருகை

குறைந்த விலையில், குறுகிய தொழில் நுட்பப் பிரயோகத்தில் தொழிற்பட க்கூடிய தரம் குறைந்த இரசாயன ஆய்வுப் பொருள்களை விற்கும் விற்பனை ஸ்தாபனங்களும், அதற்குரிய முகவர்களும் புற்றீசல் போல் கிளம்பி விட்டார்கள். எது உண்மை, எது போலி என அனுமானிக்கக் கூட முடியாத தொழில்சார் அறிவு குறைந்தவர்கள், வைத்திய ஆய்வு கூடத் தொழில்நுட்பவியலாளர்கள் என்ற பெயரில் இயங்கும் பலர் இங்கு வந்துள்ளனர். பச்சத்தண்ணீரில் பலகாரம் சுடுவதில் யார் கைதேர்ந்தவர் என்பதே இவர்களுக்கு இடையில் உள்ள போட்டி. பாவம் பல நோயாளர்களது உயிர்கள்.

உரிய வைத்தியரின் வேண்டுகோள் (Requst) இல்லாமல், நோயாளர்கள் தாமாகவே சில பரிசோதனைகளைக் கேட்கும் போது பல தனியார் மருத்துவ ஆய்வு கூடங்கள் அவர்களுக்குரிய பரிசோதனை களை மேற்கொள்கின்றன. இது தவறு. இதனால் பெறுபேற்றுக்கு ஏற்றவாறு நோயா ளர்கள் தாமே தமக்கு வைத்தியம் செய்ய முற்படு கின்றனர். (உ+ம் - சல்ரோகம்) இது பாரிய விளைவுகளை ஏற்படுத்த வழிவகுக்கும்.

அடுத்து, மருத்துவ அறிக்கைகள் அந்தரங்கமானவை, இரகசியம் காப்பதில் இருந்தும் தனியார் மருத்துவ ஆய்வுகூடங்கள் தவறுகின் றன.

### நோயாளர்கள் கவனிக்க வேண்டியது....

மருத்துவ ஆய்வு அறிக்கையின் அடிப்படையிலேயே நோயாளர்களுக்கு மருத்துவம் நடைபெறுகிறது. எனவே சிறந்த வைத்தியரை நாடும் நோயாளர்கள் சிறந்த மருத்துவ ஆய்வு கூடத் தொழில் நுட் பவியலாளர்களை நாடுவதில் போதிய அக்கறை காட்டாதிருப்பது கவலைக்குரியது . நல்ல மருத் துவம் செய்யவேண்டுமானால் சிறந்த மருத்துவ ஆய்வறிக்கைவேண்டும். தவறான, பூரணமற்ற மருத்துவ அறிக்கைகள் வைத்தியர்களைக் கூடப் பிழையான சிகிச்சை முறைக்கு இட்டுச்செல்வதாக அமைந்துவிடும். எனவே, முதலில் நோயாளர் தகுதி வாய்ந்த மருத்துவ தொழில்நுட்பவியலாளரை இனம் கண்டு கொள்ள வேண்டும். திறமை வாய்ந்த வைத்தியரை நாடிச் சிகிச்சை பெற்றுக் குணமாக வேண்டும் என்பதில் ஆர்வமும் அக்கறையுள்ள எமது மக்கள் தரமான, சிறந்த மருத்துவ ஆய்வறிக்கைகளைப் பெற வேண்டும் என்பதில் எப்போது நாட்டம் கொள்ளப்போகிறார்கள். இன்றைய போக்கில் சென்றால், திறமையான வைத்தியர்கள் இருந்தும் நோயாளருக்கு நல்ல பயன் கிடைக்காது.

# நுகர்வோனின் பொறுப்பு!

## யாரோடு நோவோம்...?

உள்ளூர் உற்பத்திகள் நலிவடைந்து போக, தென்னிலங்கையின் பெரு வணிக நிறுவனங்களதும் சர்வதேச நிறுவனங்களதும் உற்பத்திகளின் சந்தையாக யாழ்ப்பாணம் மாறி நீண்ட காலமாகிவிட்டது. இப்பத்தி கூட அது பற்றிப் பிரஸ்தாபித்தது. இந்த நிலைமை இங்கு மட்டுமல்ல எல்லா வளர்முக நாடுகளின் சிறு நகரங்களிலுந்தான்.

உலக மயமாக்கத்தின் பிரதான குறிக்கோளான வணிக விஸ்தரிப்பின் திட்டமிட்ட நடவடிக்கைகள் வணிக மயமாக்கத்தை எல்லா இடங்களிலும் நடைமுறைப்படுத்தி வருகின்றன. இது அழகிய கிராமிய வாழ்வையும், அதற்கு ஆதாரமான தன்நிறைவானதும், சுய சார்புடையதுமான சுதேசிய பொருளாதாரக் கட்டமைப்பையும் தகர்த்து அழித்தபடி முன்னேறிக் கொண்டிருக்கிறது. யுத்தத்துக்கு முன்னரும், யுத்தத்தின் போதும் நமக்குச் சித்தித்திருந்த கிராமிய வாழ்வையும், அந்த வாழ்வின் நிலைக்களனான கிராமங்களையும் இன்று காணமுடியாது. யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல வன்னிப் பகுதியிலும் இத்தகைய கிராமங்களின் அழிவு மெல்ல மெல்ல நேருகிறது. யாரும் துக்கமடையாமல் நவீன வசதிகளை எண்ணிப் பெருமைப்படும் வண்ணமாக இந்த அழிவு நேர்கிறது.

அதற்குப் பதிலாக கிராமங்கள் சிறு நகரங்களாக உருமாறுகின்றன. நவீன அணிகலன்களுடன் கிராமப் பெண், நகரம் பெண்ணாகத் திரிபடைகிறாள்! பரவாயில்லை! பண்டிதத்தனமாகப் பழைமையைப் பற்றிக் கொண்டிராமல் புதுமையை வரவேற்கும் எண்ணப்பாங்கோடு அதை வரவேற்கலாம்.

நமது சந்தைகள் மேற்சுட்டிய பொருள்களுக்காகத் திறந்திருக்கின்றன. போட்டி உற்பத்திப் பொருள்களின் ஆதிக்கம் மிகுந்த சூழலில் ஒரே பொருளின் பல்வேறு வியாபாரக் குறிகளைக் கொண்டவற்றை நமது சந்தைகள் அல்லது வியாபார நிறுவனங்கள் கொண்டிருக்கின்றன. இவற்றில் எது தரமானது எது தரமற்றது என்று பேதப்படுத்தக்கூடிய அளவில் நமது மக்களில் பலருமில்லை.

தொடர்பூடகங்களூடாக குறிப்பாக காண்பிய ஊடகமான தொலைக்காட்சி ஊடாக வெளியிடப்படும் கவர்ச்சி மிகு விளம்பரங்களில் சிக்கி, மனதை ஊசலாட்டும் அவற்றின் கவர்ச்சிப் பொறிமுறையுள் சூழன்று தமது தேவைகளுக்கான பொருள்களைத் தெரிவு செய்யப் பலராலும் முடிகிறது. அது தரமானதா என்பது பற்றிய அறிவை விட அப்பொருள் பற்றிய விளம்பரக் கவர்ச்சியே அதிகம் சனங்கள் ஆட்டிப் படைக்கிறது. விலைக்குறைவு. விற்பனை மேம்படுத்தல் உத்தியாக வியாபாரிகளால் முன்வைக்கப்படும் பரிசுத் திட்டங்கள் போன்றவையும் பொருள்கள் தெரிவில் நுகர்வோரை நாட வைக்கின்றன.

ஆனால், இலங்கையின் தரமான பொருள்களை இனங்கான 'SLS'என்ற தரச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. அச்சான்றிழ் இலங்கையின் தரமான உற்பத்தி அது என்பதை உறுதிப்படுத்து கின்றது. குறித்த உற்பத்திகளில் அச்சான்றிதழ் குறியீடு இடப்பட்டிருக்கும். அதேபோல சர்வதேச சான்றிதழ்களைப் பெற்ற பொருள்களும் புழக்கத்தில் உள்ளன. உண்மையில் விலை கூடவாகவும், பரிசு நடைமுறைகளற்றும் உள்ள போதிலும் இவை தரமான உற்பத்திகள்தான்.

எனது நண்பரொருவர் பிஸ்கட் வாங்கும் போது கூட குறித்த ஒரு நிறுவனத்தின் பிஸ்கட்டையே வாங்குவார். அது தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம். அதன் தயாரிப்பும் சுவையும் ஏனையவற்றை விட உயர்வாக இருப்பதை நானும் உணர்ந்துள்ளேன். இவ்வாறு தரமான பொருள் களைத் தேர்ந்து வாங்கும் சூழ்நிலை பெருமளவில் தோன்றுமானால் இதர உற்பத்திகளும் உயர் தரத்துடன் உற்பத்திகளைச் செய்ய வேண்டிய தேவையை ஏற்படுத்தும். சுகாதாரப் பிரச்சினைகளும் தீர்ந்து விடும். தரமான உற்பத்திகளின் சாயலில் போலியான உற்பத்திகள் பலவும் கூட சந்தையில் புழக்கத்தில் உள்ளன. போலி உறைகளைக் கொண்ட ரொபி வகைகள், போலியான ஜாம் மற்றுமும் சோடா வகைகள் போன்றன நமது சந்தைகளில் உள்ளன. பல தடவைகள் இத்தகைய போலி உற்பத்திகளை- அவை பழுதடைந்த நிலையில்- சுகாதாரப் பகுதியினர் கண்டு பிடித்துள்ள சம்பவங்களும் நடந்துள்ளன.

நமது வியாபாரிகள் காலாவதியாகும் திகதியைத் தெரிந்து வைத்துள்ள போதும், அப்பொருளை நுகர்வோரது

**ஏகலைவன்**

தலையில் கட்டிவிடும் நிலையிலேயே உள்ளனர். எனவே, பொருள்களை வாங்குபவரே தாம் வாங்கும் பொருளின் தரம் தொடர்பில், நிறை தொடர்பில், போலிகளை இனங்காணுதல் தொடர்பில், காலாவதியாகும் திகதி தொடர்பில் தமது கரிசனையை வெளிப்படுத்த வேண்டும். அவ்வாறு வெளிப்படுத்தும் போதே தாம் நல்ல பொருள்களைப் பெற்றுக் கொள்ள முடிவதோடு, நல்ல பொருள்களின் உற்பத்தியையும் விற்பனையையும் மேற்கொள்ள வேண்டிய தேவையை உற்பத்தியாளருக்கும், வியாபாரிகளுக்கும் ஏற்படுத்த முடியும். நல்ல நுகர்வோரின் சமூகப் பங்களிப்பாகவும் இத்தகைய கரிசனையைக் கொள்ளலாம்.

# ஒரு மனிதனின் மரணமும்.......

*(முதலாம் பக்கத் தொடர்ச்சி)*

மேலிடத்து உத்தரவுகளுக்குப் பணியாமல் தன்னைத் தானே புரட்சிவாதியாக, தலைவராக அறிவித்துக் கொண்ட ஒரு சிக்கலாஸ - குழப்பமான - தலைவர் அவர் என்பதாக மேற்குலகின் பார்வை இருந்தது.

சூடானின் டிங்கா இனக்குழுமத்தைச் சேர்ந்த கராங்கின் கரிய - இருண்ட தோற்றமும் கட்டுமஸ்தான உடலும் அவரை இடி அமீன் போன்று சித்திரிக்க உதவின. ஆனால், தெற்கு சூடானியர்கள் தங்களின் ஒரே பலமாக கராங்கையே இப்போதும் நம்புகிறார்கள்.

ஆரம்ப காலத்தில் அரச படைகளுடன் இணைந்து ஒரு படை வீரனாகப் பணியாற்றிய காலத்தில் காரங் அரச படை முகாம்களில் சிப்பாய் கலகங்களை (Mutiny) உருவாக்கினார். அதன் மூலம் இனங்குழுக்களிடையே மோதல்கள் தீவிரமடைந்தன.

இளமையில் சிறிது காலம் அமெரிக்காவில் விவசாயப் பொருளாதாரத்தில் கல்வி கற்று பிஎச்டி பட்டம் பெற்றவர் கராங்.

சூடானின் கிளர்ச்சியின் நடுநாயகமாக உலகெங்கும் அறியப்பட்ட இந்தப் போராளி தனி மனிதனாக பெரிதும் அறியப்படாதவராகவே விளங்கினார்.

**கெரில்லா வீரனாக.....**

1962ஆம் ஆண்டில் தெற்கு சூடானைத் தளமாகக் கொண்டு விளங்கிய அன்யா அன்யா என் ற இயக்கத்தில்தான் (Anya Anya Movment) கராங்கின் கெரில்லா அனுபவம் ஆரம்பமாகியது. கார்டூம் அரசுக்கு எதிரான கெரில்லா தாக்குதல் களை தீவிரமாக நடத்தினார் காரங்.

சுமார் பத்து ஆண்டுகளுக்கு பின்னர் அன்யா அன்யா இயக்கத்துடன் கார்டூம் அரசு உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டது.

தெற்கு சூடானுக்கு சுயாட்சி வழங்கக்கூடிய அந்த உடன்பாட்டை அடுத்து கராங்கும் அவரது போராளிகளும் அரச படைகளோடு இணைக்கப்பட்டனர். ஆனால், ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் - 1978 இல் - சூடானில் எண்ணெய் வளம் கண்டுபிடிக்கப்பட்டதும் மீண்டும் அங்கு போர் வெடித்தது. இந்தத் தடவை அது சூடானிய அரச படைகளுக்கும், சூடான் மக்கள் விடுதலை இயக்கத்தின் இராணுவப் பிரிவான சூடான் மக்கள் விடுதலை இராணுவத்துக்கும் இடையிலான சண்டையாக இருந்தது.

இந்த யுத்தத்தில் சூடான் மக்கள் விடுதலை இராணுவத்தின் கொள்கைகள் கராங்கைப்போலவே தெளிவின்றி இருந்தன என்பது மேற்குலகின் கணிப்பு.

சூடானில் இன்று ஏற்பட்டிருக்கின்ற அமைதிச் சூழல் மேற்குலகின் கரிசனையால் ஏற்பட்டது அல்ல. தெற்கு சூடானிய மக்களுக்கு அதிகாரத்தைப் பகிரக்கூடிய உடன்பாடு ஒன்று கடந்த ஜனவரியில் கைச்சாத்திடப்பட்ட போது சூடானிய விவகாரம் ஈழத்தமிழர் பிரச்சினையோடு பெரிதும் தொடர்புபடுத்திப் பேசப்படலாயிற்று

அமெரிக்கா உட்பட மேற்குலக சக்திகள் இலங்கையில் சமாதானத்தை விரும்பியது போலவே சூடானிலும் திடீரென சமாதான முயற்சிகள் ஊக்குவிக்கப்பட்டன. உண்மையில் இந்த இரண்டு நாடுகளினதும் கேந்திர மற்றும் பொருளாதார முக்கியத்துவமே அங்கு சமாதானச் சூழலின் தேவையை உருவாக்கின.

இலங்கையின் கேந்திர அமைவிடமும் சூடானில் அண்மைக் காலத்தில் (1978) கண்டறியப்பட்ட பெருமளவு எண்ணெய் வளமுமே அங்கு மேற்குநாடுகளின், சந்தைப் பொருளாதார சக்திகளின் தலையீட்டுக்குக் காரணமாகின.

உண்மையில் தெற்கு சூடானில் பல்லாயிரக் கணக்கானோர் பட்டினியால் செத்து மடிந்தபோது அதனை அப்போது தடுப்பதற்கு சமாதானம் உதவவில்லை.

இதுதான் இன்றைய உலக ஒழுங்கு யதார்த்தம்.

ஜோன் கராங்கின் மறைவு தெற்கு சூடானியர்களைப் பொறுத்தவரை இந்தக் கட்டத்தில் ஒரு பேரிழப்பு என்றே கருத வேண்டிஉள்ளது.

# அதிகார ஆசையும்.....

*(முதலாம் பக்கத் தொடர்ச்சி)*

1999 டிசெம்பருக்கும் 2005 டிசெம்பருக்கும் இடப்பட்ட காலப்பகுதி சரியாக 6 ஆண்டுகள் தான் என்பது சிறுபிள்ளைக்குக் கூட நன்கு தெரியும். அப்படியிருக்க, தனது பதவிக் காலம் இந்த வருடம் அல்ல; அடுத்த வருடம் டிசெம்பர் மாதம்தான் முடிவடையும் என்று பிடிவாதம் பிடிக்கும் ஜனாதிபதிக்கும் அவருக்காக வாக்காலத்து வாங்கும் அவரது சகாக்களுக்கும் இது புரியாதா என்று நீங்கள் நினைக்கலாம்.

அவர்களுக்கும் இது நன்கு புரியும். ஆனால், அதிகாரத்தின் மீது கொண்ட அளவுகடந்த மோகத்தினால் அதிலிருந்து இறங்குவதற்கு மனமில்லாமல் துள்ளிக் குதிக்கிறார் ஜனாதிபதி. பதினொரு வருடங்கள் தாம் நினைத்தபடி நாட்டை ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்தவரல்லவா அவர்! அந்த நிறைவேற்று அதிகாரத்தின் சுவையை மேலும் ஒரு வருடம் ருசி பார்க்க வேண்டுமென்று - விரும்புகிறார் - அலாய்ப் பறக்கிறார். அவ்வளவுதான்.

### சந்திரிகாவின் புதிய விளக்கம்!

தனது பதவிக்காலம் அடுத்த வருட நிறைவில் தான் முடிவடைகிறது என்று கூறி அடம்பிடிக்கின்ற ஜனாதிபதி சந்திரிகா தனது விருப்பத்தை நியாயப்படுத்து வற்காக - ஒரு புதிய விளக்கத்தையும் வைத்திருக்கின்றார்.

1994ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நடந்ததல்லவா? அதில் வெற்றி பெற்று அதிகாரம் ஏறியவர் சந்திரிகா. அவரது அந்த ஜனாதிபதிப் பதவியின் முடிவுக்காலம் - ஆறு வருட நிறைவு - 1999 டிசெம்பர் அல்ல; 2000 ஆம் ஆண்டு டிசெம்பர்தான். அப்படியானால் அந்தப் பதவிக்காலத்தின் நிறைவில் - 2000 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் தானே அடுத்த தேர்தல் வந்திருக்க வேண்டும். 1999இல் - 5வருட நிறைவில் - எவ்வாறு அடுத்த தேர்தல் வந்தது என்ற கேள்வி எழுகிறது.

உரிய காலத்தில் தேர்தல் திகதியை அறிவிப்பது தேர்தல் ஆணையாளரின் வேலை - கடமை. ஆனாலும் அரசமைப்பின்படி நிறைவேற்று அதிகாரம் உடைய ஜனாதிபதி ஒருவர் 4வருடங்கள் பதவி வகித்த பின்னர் அதாவது 4 தொடக்கம் 6 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் அடுத்த தேர்தலை தாம் விரும்பிய நேரத்தில் நடத்துமாறு தேர்தல் ஆணையாளரைக் கேட்டுக் கொள்ளமுடியும். அதற்கிணங்க ஜனாதிபதி விரும்புகின்ற காலப்பகுதியில் தேர்தல் திகதியை தேர்தல் ஆணையாளர் அறிவிப்பார். அதற்கு அமைவாக 2000ஆம் ஆண்டு நடத்தப்பட வேண்டிய ஜனாதிபதித் தேர்தலை ஒரு வருடத்திற்கு முன்பாகவே - 1999ஆம் ஆண்டிலேயே - நடத்துமாறு சந்திரிகா தேர்தல் ஆணையாளரைக் கேட்டுக்கொண்டார். அதனை ஏற்று ஜனாதிபதியின் விருப்பப்படியே தேர்தலை அறிவித்து தனது கடமையை சரிவரச் செய்து முடித்தார் தேர்தல் ஆணையாளர்.

### முன்னைய பதவியில் ஒரு வருடத்தை ஏன் குறைத்தார் சந்திரிகா?

சரி, இப்போது ஆறு ஆண்டுகள் நிறைவிலும் பதவி இறங்கமாட்டேன் என்று அடம்பிடிக்கும் ஜனாதிபதி சந்திரிகா தனது முன்னைய பதவிக்காலத்தை ஒரு வருடத்துக்கு முன்னதாகவே - 5ஆண்டுகளிலேயே - முடித்துக்கொள்ளத் தீர்மானித்தது ஏன் என்ற வினா இவ்விடத்தில் எழுகிறதல்லவா...? அதற்கும் காரணம் இருக்கிறது. 'சோலியன் குடுமி சும்மா ஆடாது' என்பார்களே. அது போலத்தான் இதுவும்.

1993, 98 காலப்பகுதிகளில் நாட்டில் நிலவிய அசாதரண சூழ்நிலை, பொருளாதார வீழ்ச்சிப் போக்கு, பணவீக்க நிலைமை போன்ற அரசியல் புறக்காரணிகள் அடுத்த வருடமளவில் - 2000ஆம் ஆண்டளவில் - மேலும் பாதகமான நிலையை அடையக்கூடிய ஏதுநிலை இருப்பதாக அப்போதைய அரசியல்,பொருளாதார, ஆலோசகர்கள் ஜனாதிபதிக்கு எதிர்வு கூறினார்கள். அப்படி ஒரு பொருளாதாரச் சிதைவுக்கு மத்தியில் 2000 ஆம் ஆண்டு அடுத்த தேர்தலை நடத்தினால் தனக்கு மக்களின் ஆதரவு கிடைக்காது - தேர்தலில் தான் வெல்வது சாத்தியமேயில்லை என்று உணர்ந்து கொண்ட ஜனாதிபதி, நிலைமையை நன்கு புரிந்ததோடு சுதாகரித்தும் கொண்டார்.

நாட்டைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கிய தனது கோமாளித்தனத்தை மக்கள் புரிந்துகொள்ள முன்னரே தேர்தலை நடத்தினால் அடுத்த தடவையையும் தான் ஜனாதிபதியாகலாம் என்ற 'சாணக்கியம்' ஜனாதிபதி சந்திரிக்காவின் மனதில் பட்டிருக்கிறது. உடனே செயலில் இறங்கினார்; வெற்றியும் கண்டார். அந்த விடயத்தில் அவரை ஒரு சிறந்த அரசியல் 'சாணக்கியம்' மிக்கவர் என்றே கூற வேண்டும்.

ஆனால் ஜனாதிபதி சந்திரிகா இப்போது தான், முன்னைய பதவிக்காலத்தில் இழந்துபோன ஒரு வருடத்தை இப்போதைய பதவிக்காலத்துடன் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறார். 1994 டிசெம்பரிலிருந்து கணக்குப் பார்த்தால் தனது இரண்டு பதவிக்காலம் - 12 ஆண்டுகள் - 2006 ஆம் ஆண்டு டிசெம்பரிலேயே முடிவடையும் என்று வாதிடுகிறார் சந்திரிகா.

அவரது அந்தவாதம் கேலிக்கிடமானது - குதர்க்கமானது - என்று அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். சட்டப்படி எந்த ஒரு தேர்தலும் நடைபெற்று - அதிலே வெல்பவர்கள் பதவி ஏற்கின்றபோது அப்போதிருந்தே அந்தப் பதவியின் முன்னைய ஆட்சிக்காலம் முடிவுக்கு வருகிறது.

அதன்படி 1999 ஆம் ஆண்டுத் தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதி சந்திரிகா பதவி ஏற்ற கையோடு அவரது முன்னைய பதவிக்காலம் முடிவுக்கு வந்துவிட்டது. எனவே, 1999 ஆம் ஆண்டு டிசெம்பரில் இருந்து புதிய ஜனாதிபதிப் பதவிக் காலத்தை கணக்குப்பார்த்தால் இந்த வருடம் டிசெம்பர் மாதத்தோடு 6 ஆண்டுகள் முடிவடைகின்றன, முழுமையாக.

### 1999ஆம் ஆண்டுத் தேர்தலில் ரணில் வென்றிருந்தால்....?

தனது இரண்டாவது பதவிக் காலத்துடன் முன்னைய பதவிக்காலத்தின் ஒரு வருடத்தையும் சேர்த்துக்கொள்ள விரும்புகிறார் சந்திரிகா அம்மையார். 1999ஆம் ஆண்டு தேர்தல் நடந்தாலும் தனது முன்னைய பதவிக்காலத்தை தான் 2000ஆம் ஆண்டிலேயே முடித்துக்கொண்டார் என்றும் - அடுத்த பதவிக்காலத்தை 2000ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் தான் பதவிக் பிரமாணம் செய்து பொறுப்பேற்றுக் கொண்டார் என்றும் - ஜனாதிபதி புதிய - சிக்கலான - வியாக்கியானத்தை முன்வைத்திருக்கிறார்.

அப்படியானால் ஒரு வேளை 1999ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவோ அல்லது சந்திரிகா தவிர்ந்த வேறு வேட்பாளர்களோ வெற்றி பெற்றிருந்தால் அவர்கள் சந்திரிகா அம்மையாரின் முன்னைய பதவிக்காலம் முடியும் வரை - 2000 ஆம் ஆண்டுவரை - சந்திரிகாவையே ஜனாதிபதியாக இருக்கவிட்டுப் பார்த்துக் கொண்டிருந்திருக்க மாட்டார்கள் - அதற்குச் சட்டத்திலும் இடம் இல்லை.

சரி, ரணில் அல்லது வேறு யாராவது பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் தேர்தல் நடத்தி அதில் வென்று இரண்டு தடவைகள் பதவி ஏற்றதாகக் கூறி தேர்தலை ஒரு வருடம் பிந்தி நடத்தப்போவதாகக் கூறினார் சந்திரிகா. அதனை ஏற்றுக்கொண்டிருப்பாரா? சந்திரிகா மட்டுமன்றி அவரது கட்சிக்காரர்களும் விட்டு வைத்திருப்பார்களா - சம்மதித் திருப்பார்களா - என்ற விடயங்களையும் ஆழமாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அப்படிப் பார்த்தால் சந்திரிகா அம்மையாரினதும் அவரது கட்சிக்காரர்களினதும் சந்தர்ப்பவாத அரசியல் பித்தலாட்டம் துலாம்பரமாகத் தெரியும்.

### நீதிமன்றில் விவகாரம்!

இந்த நிலையில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான சர்ச்சை தொடர்பாக கருத்துக் கூறும்படி - ஆலோசனை தரும்படி - உயர்நீதிமன்றுக்குச் சென்றிருக்கிறார் ஜனாதிபதி. இந்த விவகாரத்தில் நீதிமன்றத்தின் நிலைப்பாடு அரசியல் அவதானிகள், அறிஞர்களினதும் - பொது மக்களினதும் நிலைப்பாட்டுக்கும் - எதிர்பார்ப்புக்கும் ஏற்றதாக அமையும் என்று நிச்சயமாக எதிர்வு கூறமுடியாது.

இந்த விடயத்தில் என்னசெய்வதென்றே தெரியாத - எத்தகைய முடிவை எடுப்பதென்று புரியாத - இரண்டும் கெட்டான் நிலையில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறார் தேர்தல் ஆணையாளர்.

ஆக மொத்தத்தில் ஜனாதிபதி சந்திரிகா, தேர்தல் ஆணையாளர், உயர்நீதிமன்றம் ஆகிய மூன்று முனைகளுக்கு இடையில் பின்னிப் பிணைக்கப்பட்டிருக்கின்ற இந்தச் சிக்கலான விவகாரத்தின் முடிவு என்னாகப் போகிறது என்பதே இன்றுள்ள கேள்வியும் எதிர்பார்ப்புமாகும்.

(இக்கட்டுரை கடந்த வார மத்தியில் வரையப்பட்டது)